# சர்வதேச அரசியல் பொருளாதாரமும் உரிமைப் போராட்டமும்

வெளியீடு : பெரியார் மையம்

நன்கொடை : 4-00

3-வது பதிப்பு
ஏப்ரல்-1990

வெளியீடு :
**பெரியார் மையம்,**
99, கீழக்குமரேசபுரம், திருச்சி - 620 014.

உள்ளே —

**1) சேது சமுத்திரத் திட்டம் குப்பைத் தொட்டியில் போடப்பட்டதின் 'மர்மம்' என்ன?**

**2) முந்தைய ஜனதா ஆட்சி கவிழ்ந்ததன் காரணம் என்ன?**

**3) இந்திரா கொலையின் 'பின்னணி' என்ன?**

**4) ஈழ விடுதலை முயற்சியின் ஏற்ற-இறக்கங்களுக்கு காரணம் என்ன?**

போன்ற கேள்விகளுக்கான காரணங்கள் பல இருந்தாலும் அதன் சர்வதேச பின்னணியும் முக்கியமாக தெரிந்து கொள்ள வேண்டும்; அந்த சர்வதேச பின்னணி என்ன? இப்புத்தகத்தைப் படித்து உண்மை உணர்ந்து மற்றவர்களுக்கும் சொல்லுங்கள்.

---

பெரியார் மைய வெளியீடுகள்:

| | | |
|---|---|---|
| 1. | **துக்ளக், தினமலர் ---- போன்றவை தி. மு. க. வை எதிர்ப்பதன் இரகசியம் என்ன?** | 2-00 |
| 2. | **உங்கள் சாதியின் உரிமைக்கு எதிரி யார்?** (இட ஒதுக்கீடு பற்றி கேள்வி-பதில்) | 2-00 |
| 3. | **ஆர். எஸ். எஸ். கேள்விகளுக்கு அதிரடி பதில்கள்** | 2-00 |
| 4. | **மண்டல்குழு பரிந்துரைகள் - ஒரு விளக்கம்** | 1-00 |
| 5. | **அணு சக்தியா? அறிவு சக்தியா?** | 1-00 |
| 6. | பெரியார் பார்வையில் இந்திய தேசியம் | 3-00 |
| 7. | தோழர் பெரியாரைக் கொச்சைப்படுத்திய தோழர் ஆனைமுத்துக்கு மறுப்பு | 1-00 |
| 8. | தோழர் ஆனைமுத்து - மா. பெ. பொ. கட்சியின் 'கொள்கை விளக்கமும்-விதிமுறைகளும்' என்ற நூலின் மீதான விமர்சனம் | 0-50 |
| 9. | போடி கலவரங்கள் - பின்னணி என்ன? | 2-50 |

# சர்வதேச அரசியல் பொருளாதாரமும் உரிமைப் போராட்டமும்

முகவுரை : மக்கள் விடுதலை என்ற நோக்கில், தமது ஆற்றலை சமூகப் பணிக்கு செலவிட முயலும் எந்த ஒரு நபருக்கும் சர்வதேச அரசியல், பொருளாதாரம் பற்றிய புரிதல் முக்கியமானது ஆகும். இந்த நோக்கத்தில் பெரியாரியலை ஏற்றுக்கொண்ட தோழர்களின் கூட்டு முயற்சியில் ''சர்வதேச அரசியல் பொருளாதாரமும்-உரிமைப் போராட்டமும்'' என்ற நூல் 1986ல் தட்டச்சு நகலாக வெளியிடப்பட்டது. இதற்கு நல்ல வரவேற்பு இருந்ததன் காரணமாக 1988-ல் இடைப்பட்ட காலத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் சேர்க்கப்பட்டு உருட்டச்சு நகல்களாக இந்நூல் இரண்டாம் பதிப்பாக வெளியிடப்பட்டது. அதற்கு கிடைத்த ஆதரவு இந்நூலின் தேவையை எடுத்துக் காட்டியது. எனவே பலரின் வேண்டுகோளுக்கிணங்க இடைப்பட்ட காலத்திய மாற்றங்களையும் இணைத்து,இந்நூலின் மூன்றாம் பதிப்பு அச்சிட்ட நூலாக வெளிவருகிறது,

எந்த இயக்கத்தின் கட்டுப்பாட்டிலும் இல்லாத 'சுதந்திரமான' ஆய்வு மையமாகிய 'பெரியார் மையம்' இந்நூல் தொடர்பான கருத்துக்களையும், விமர்சனங்களையும் வரவேற்கிறது. சுட்டிக் காட்டப்படும் ஆதாரபூர்வமான குறைகள் எமது அடுத்த பதிப்பு வெளிவரும்போது நிச்சயமாக திருத்தப் படும்.

## சர்வதேச அரசியல் பொருளாதாரத்தின் முக்கியத்துவம்:-

சர்வதேச அரங்கில் பிரிந்துபோகும் உரிமை உள்ளிட்ட சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்து பல சட்டங்கள் நிறைவேறியுள்ளன. இச்சட்டங்களில் கையொப்பமிட்டுள்ள நாடுகள் பின்வரும் போக்குகளைக் கடைபிடித்து வருகின்றன.

தமது நலன்களுக்குச் சாதகமான உரிமைப் போராட்டங்களை வலிந்து சென்று ஆதரிப்பது, தமது நலன்களுக்குப் பாதகமான உரிமைப் போராட்டங்களை கடுமையாக எதிர்ப்பது, நசுக்குவது, நசுக்குவதற்கு துணைப்போவது என்பன இப்போக்குகளாகும். இதில் குறிப்பிட்ட நாடுகளின் நலன்கள் என்பது அந்நாடுகளின் ஆளும் வர்க்கங்களின் நலன்கள் என்பதைக் குறிக்கிறது. சர்வதேச அரசியல் பொருளாதார நலன்களே இப்போக்குகளின் அடித்தளமாகும்.

மேற்கண்ட அடிப்படையில் உரிமை போராட்டங்களுக்குக் கிடைத்து வரும் ஆதரவுப் போக்குகூட உண்மையான மக்கள் விடுதலை என்ற நோக்கில் பாதகமான அம்சங்களையே அதிகமாகக் கொண்டுள்ளது. அதாவது இப்படிப் பட்ட ஆதரவு உண்மையான மக்கள் விடுதலை அடைய தடையாகவே உள்ளது.

எனவே உரிமைப் போராட்டத்திற்கும் சர்வதேச அரசியல் பொருளாதாரத்திற்கும் உள்ள தொடர்பும், தொடர்பு பற்றிய தெளிவும் உரிமைப் போராட்ட முயற்சியாளர்களுக்கு மிகவும் அவசியமான ஒன்றாகும்.

## இந்தியாவின் இரட்டை வேடம்:-

சர்வதேச அரங்கில் உரிமைப் போராட்ட நோக்கில் இரட்டை வேடம் போடுவதில் இந்தியா 'சிறப்பான' இடத்தைப் பெற்றுள்ளது. இந்தியா என்பது உண்மையில் பார்ப்பன - இந்திய தேசிய முதலாளி - பன்னாட்டுக் கூட்டுச் சக்திகளின் கொள்ளைக்காடாக இருக்கிறது. இந்தியாவிலுள்ள பல தேசங்கள் மொழி, பண்பாடு, பொருளாதாரம் போன்ற பல்வேறு துறைகளில் வெவ்வேறு அளவுகளில் ஒடுக்கப்பட்டு வருகின்றன. தேச விடுதலை எழுச்சிகளும், முயற்சிகளும் சமச்சீரற்ற தன்மையில் உள்ளன. வெள்ளைக்காரன் காலத்திய ரௌலட் சட்டத்தை விட கொடிய மனித விரோதச் சட்டங்கள், சர்வதேச சுய நிர்ணய உரிமைச் சட்டங்களுக்கு எதிரான பிரிவினை தடைச் சட்டம் போன்றவற்றின் துணையுடன் மேற்சொன்ன கொள்ளைக்கு எதிராக கிளம்பும் எழுச்சிகளையும், முயற்சிகளையும் ஒடுக்கி வருகின்றன.

உலகில் வேறு எங்கும் காண முடியாத புதிய பாணி தேசியமாகிய 'இந்திய தேசிய'த்தின் பெயரால் இந்த மனித உரிமை விரோத போக்கைக் கடைபிடித்து வரும் இந்தியா சர்வதேச அரங்கில் பல தேச விடுதலை முயற்சிகளை ஆதரித்து மனித உரிமைக்குக் குரல் கொடுக்கும் நாடாகப் போலி வேடம் போட்டு வருகிறது. பாலஸ்தீன விடுதலை, தென் ஆப்பிரிக்க விடுதலை, மேற்கு சகாரா விடுதலை போன்ற பல விடுதலையை இந்தியா ஆதரிக்கிறது. அதே நேரத்தில் சோவியத்தின் ராணுவத் துணையுடன் ஆப்கானிஸ்தானில் பொம்மை அரசு நிறுவப்பட்டு ஆப்கானிஸ்தான் அடிமைப் பட்டிருந்ததைக் கண்டிக்க வில்லை. அதேபோல் கம்பூசியாவிலும் சோவியத்தின் ஆதரவுடன் வியட்நாம் தனது துருப்புகளை வைத்து பொம்மை அரசு மூலம் கம்பூசியாவின் விடுதலை அடிமைப்படுத்தப் பட்டதை இந்தியா கண்டிக்கவில்லை.

அதாவது இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கை திருமதி இந்திரா காந்தி காலம்வரை அமெரிக்காவுக்கு எதிராகவும், சோவியத்திற்கு சாதகமாகவும் இருந்து வந்தது. முன்னாள் பிரதமர் ராஜீவ் பதவிக்கு வந்தவுடன் இதில் குறுக்கும் நெடுக்குமான மாற்றங்கள் (Zig Zag) வந்துள்ளன. இந்தியாவின் இந்த குறுக்கு நெடுக்கு மாற்றங்கள் ஈழப் பிரச்சினையில், ஈழ விடுதலையில் இந்தியா எடுக்கும் நிலைப்பாடுகளில், நடவடிக்கைகளில் பிரதிபலித்துள்ளது. பின்னர் 1989 கடைசியில் அரங்கேறியுள்ள தேசிய முன்னணி ஆட்சியில் அமெரிக்க சார்பு தென்பட்டாலும், சர்வதேச அரங்கில் அமெரிக்காவும், சோவியத் நாடும் நேசமாகி வருவதைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

## இலங்கைப் பிரச்சினை:-

இலங்கையிலுள்ள சிங்கள இனவெறி அரசு முற்றிலுமாக அமெரிக்க சார்பு அரசாகும். இலங்கை என்பது அமெரிக்கா மற்றும் அமெரிக்க சார்பு நாடுகளின் வியாபார மற்றும் ராணுவ நலன்களுக்கு முக்கியமான நாடாகும். இலங்கையிள்ள திரிகோணமலையை அமெரிக்க ராணுவ தளமாக மாற்ற முயற்சி நடந்துவருகிறது. இந்தியாவைச்சுற்றியுள்ள பங்களாதேஷ், பாகிஸ்தான்,இலங்கை இவை மூன்றுமே சர்வதேச அரசியலில் அமெரிக்க சார்பு நாடுகளாகும். சோவியத்திற்கு எதிரணி என்ற அடிப்படையில் அமெரிக்காவும் சீனாவும் தோராயமாக ஓரணியில் நிற்பவையாகும். அல்பேனியாவைத் தவிர்த்து இத்தகைய சர்வதேச அரசியல் சூதாட்டத்தில் நேரடியாகவே அல்லது மறைமுகமாகவோ சிக்காத நாடுகளே இல்லை என்று கூறலாம். இந்த சூழலில் இலங்கையின் அமெரிக்க சார்பு போக்கு இந்தியாவை பொருத்த மட்டில் முக்கியமாகக் கருத்தில் கொள்ளவேண்டிய செய்தியாகும். ஏற்கனவே ஜெயவர்த்தனாவுக்கு முன் இருந்த சிரிமாவோ பண்டாரநாயகா ஆட்சி காலத்தில் இலங்கை சோவியத் சார்பு நாடாக இருந்தது.

1974 காலக்கட்டத்தில் தமிழ் ஈழ விடுதலைக்கு ஆதரவாக தமிழர் நிலைப்பாடு எடுத்தபின் அமைதி வழிப்போராட்டங்கள் பயனற்றுப்போன நிலையில் ஆயுதப்போராட்டம் மலர்ந்தது. ஈழப்பகுதியில்உள்ள தமிழர்களிடையே சாதி வேறுபாடுகளும். நிலப்பகுதி உயர்வு தாழ்வுகளும் இது தவிர உரிமை பறிக்கப்பட்ட, இந்த ஈழவிடுதலை முயற்சியோடு தொடர்பற்ற மலையகத் தமிழர்களும் இருந்தனர். தமது சமுதாயத்தின் அடித்தளம், மேல் கட்டுமானம் மற்றும் முரண்பாடுகள் பற்றித்தெளிவான தத்துவப்போராட்டத்தை ஆயுதப் போராட்டத்தினூடே வளர்த்தெடுக்காத காரணத்தால் ஈழவிடுதலை முயற்சி முன்னணி அமைப்புகளில் குறைகள் பெருகி நிறைகள் கருகுவதற்கான சூழல் இருந்தது.

இந்தப்பின்னணியில் நடந்த 1983 சூலை இனப்படுகொலை ஈழவிடுதலை குழுக்களை எண்ணிக்கையிலும் மற்றும் வலிமையிலும் ஊதிப்பெருக்க வைத்தது. தமிழ்நாட்டில் ஏற்பட்ட உணர்வு மயமான கொந்தளிப்பு இதற்குத்துணை நின்றது. இந்திய அரசு இந்த சிக்கலை தனது நலன்களுக்கு ஏதுவாகப் பயன்படுத்தும் வாய்ப்பு ஏற்பட்டது. அதே நேரத்தில் இந்த ஈழ விடுதலைக் குழுக்களின் செயல்பாடு தமிழ்நாட்டில் தனிநாடு கோரும் முயற்சிக்குத் தூண்டுகோலாகவும், ஆதரவாகவும் அமைந்து விடலாம் என்ற 'அபாயம்' இந்திய அரசுக்கு அச்சத்தைக் கொடுத்தது.

ஈழ விடுதலைக் குழுக்களின் பலகீனங்களைப் பற்றி இந்திய அரசுக்குத் தெளிவாகத் தெரிந்தவுடன் இத்தகைய அச்சம் குறைந்தது. இந்திய அரசு தமிழ்நாட்டில் பல இடங்களில் இக்குழுக்கள் வரைமுறையின்றி முகாம்கள் அமைத்திட அனுமதித்தது. இந்தக் குழுக்களுக்குள் நடந்த கொலை, கொள்ளை உள்ளிட்ட வன்முறைகளைக் கண்டும் காணாமலும் இருந்தது. இந்திய

ராணுவமே பயிற்சி கொடுத்து ஆயுத உதவி வழங்கியது. போராளிக் குழுக்களிடையே போட்டிகளை வளர்க்கத் துணை நிற்பது, ஆயுத பறிமுதல் செய்வது, சட்ட நடவடிக்கை எடுக்க அச்சுறுத்துவது போன்ற பலதரப்பட்ட நடவடிக்கைகள் மூலம் ஈழ விடுதலைக் குழுக்களை டெல்லி தனது பார்ப்பன கிடுக்கிப் பிடியில் இலாவகமாகச் சிக்க வைத்தது. இலங்கையின் அமெரிக்கா சார்பு போக்கை தடுத்து நிறுத்தி இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கைக்கு ஏதுவாக இலங்கையை அடிமைப்படுத்த திருமதி. இந்திரா காந்தி தனது கடைசி காலத்தில் பின்வரும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்ததை ஊகிக்க சில தடயங்கள் உள்ளன. பார்ப்பனர் கூமார் நாராயணன் உளவுக் கடத்தல் தொடர்பான பத்திரிக்கைச் செய்திகளில் இவை உள்ளன.

தமக்குச் சாதகமான ஈழ விடுதலைக் குழுக்களை முன்னிலைப் படுத்தி இலங்கைத் தமிழர்களைப் பாதுகாத்தல் என்ற பெயரில் இந்தியராணுவத்தை இலங்கைக்கு அனுப்பி ஜெயவர்த்தனே அரசைக் கவிழ்த்து ஒரு கூட்டாட்சித் தீர்வைத் திணித்துத் தமிழீழப் பகுதியிலும், சிங்களப் பகுதியிலும் தமக்குச் சாதகமான நபர்களிடம் ஆட்சி பொறுப்பை ஏற்கச் செய்து அமைதிப்படை என்ற பெயரில் இந்திய ராணுவத்தை அங்கேயே சில காலம் இருக்கச் செய்து தமக்கு ஒத்து வராத ஈழ விடுதலைக் குழுக்களை இந்த செயல்பாட்டின் ஊடே ஒழிக்கச் செய்தல் போன்றவை இவற்றில் அடங்கும். அதன்பின் இந்தியாவில் தேர்தல் நடத்தத் திட்டம் இருந்தது.

இது நடைமுறைப்படுத்தப் பட்டிருந்தால் தெற்கு ஆசிய பகுதியில் அமெரிக்காவின் ராணுவ மற்றும் வியாபார நலன்களுக்கு மிகவும் பாதகமாக அமைந்திருக்கும். திருமதி இந்திரா காந்தி கொலையில் அமெரிக்காவின் பங்கிற்கான பல முக்கிய காரணங்களில் இதுவும் ஒன்று எனக் கருதலாம். திருமதி. இந்திராவின் கொலையில் சர்வதேச அரசியல் பொருளாதாரப் பின்னணி பற்றி இனி காண்போம்.

## இந்திரா காந்தி கொலையின் பின்னணி:-

இந்திராவின் கொலை தொடர்பாக வழக்கு விசாரணையின் போது தீர்க்கப்படாத பின்வரும் மர்மங்கள் வெளிப்பட்டன.

பொற்கோவில் ராணுவ நடவடிக்கைக்குப் பின்னால் பிரதமரின் இல்லத்தில் ஒரு மருத்துவமனையின் வசதிகளுடன் கூடிய வேன் தயார் நிலையில் இருந்து வந்தது. இந்திரா கொலையின் போது அந்த வேன் பயன்படுத்தப் படவில்லை,

இந்திராவின் உடம்பில் துப்பாக்கிக் குண்டுகள் ஏற்படுத்திய துளைகள் சுற்றுப்புறத்தில் காணப்பட்ட குண்டு தடயங்கள் குற்றவாளிகளாக சொல்லப் படுபவர்களின் துப்பாக்கிகளில் இருந்து வெளிப்பட்ட குண்டுகளின் எண்ணிக்கை போன்றவற்றில் நிறைய முரண்பாடுகள் இருந்தன. கொலை நடந்த

சம்பவத்தில் இருந்த ஆர். கே. தவானும், இந்திராவை மடியில் தாங்கிய சோனியா காந்தியும் விசாரணைக்கு உட்படுத்தப்படவில்லை. இந்திராவின் உயில் என்று சொல்லப்பட்டதில் அவரின் சுவிஸ் வங்கியின் பணம் பற்றி குறிப்பிடப்படவில்லை.

எல்லாவற்றையும் விட மேலாக அரசு சார்பில் செய்த விசாரணை அறிக்கையை பாராளுமன்றத்தில் வைக்காததுடன் அதற்காகவே சட்டம் இயற்றியது மட்டுமின்றி அந்த அறிக்கையைக் குடியரசுத் தலைவருக்குக் கூட காண்பிக்காமல் மறைத்தது மேற்சொன்ன சந்தேகங்களைக் கூட்டுகிறது. இராஜிவ் ஆட்சியின் கடைசிக் காலத்தில் எதிர்க்கட்சிகளின் அச்சுறுத்தலை சமாளிக்க இதன் ஒரு பகுதி மட்டும் பாராளுமன்றத்தில் வெளியிடப்பட்டது. தேசிய முன்னணி ஆட்சியில் இது முழுமையாக வெளிவருமா என்பது சந்தேகமே!

இந்திரா கொலைக்குப் பின்னால் 'ஜனநாயக' முறைகளுக்கு மாறாக அவசரம் அவசரமாக ராஜிவ் காந்தி பதவி ஏற்றது. அதன்பின் நடந்த தேர்தலில் வெளிநாட்டு நிறுவனங்களின் துணையுடன் பிரச்சாரத்தில் ஈடுபட்டது. வெற்றி பெற்ற பின் புதிய பொருளாதாரக் கொள்கை, புதிய ஜவுளிக் கொள்கை, புதிய கல்விக் கொள்கை, புதிய தொழில் கொள்கை, புதிய மருந்துக் கொள்கை போன்று பன்னாட்டுக் கொள்ளைக்கு மிகவும் சாதகமான கொள்கைகளை அடுத்தடுத்து நடைமுறைப்படுத்தியது போன்றவை மூலம் இந்திராவின் கொலை ஒரு தெளிவான முன்னேற்பாட்டுடன் கூடிய சர்வதேசப் பின்னணியுடன் நடந்திருப்பது தெளிவாகிறது. இந்திரா கொலை இத்தாலிய மபியாக்களின் வேலை என்று பாராளுமன்ற உறுப்பினர் சம் ரன்ஜித்சிங் மான் கருத்து தெரிவித்துள்ளார்.

## சோனியா காந்தியின் பின்னணி:-

முன்னாள் பிரதமர் ராஜிவ் காந்தியின் மனைவி சோனியாவின் பின்னணி பற்றி பார்ப்போம். இவர் இத்தாலியில் சிசிலிப் பகுதியைச் சேர்ந்தவர். அமெரிக்க மஃபியா குடும்பங்கள் பெரும்பாலும் இத்தாலியின் சிசிலிப் பகுதியைச் சேர்ந்தவையே. அமெரிக்கா ஏகாதிபத்திய நாடாக வளர்ந்த போது அங்கே அரசியல் பொருளாதாரப் பின்னணியோடு பெரும் சக்தியாக வளர்ந்த கொள்ளைக் கும்பல் 'மபியா' எனப்படுகிறது. கென்னடி கொலை கூட மபியா வேலையாக இருக்கலாம் என்று நம்பப்படுகிறது இன்று சர்வதேச அளவில் இரகசியமாக ஆயுதம், போதைப் பொருள் கடத்தல் போன்றவற்றில் ஈடுபட்டு சர்வதேச உளவு அமைப்புகள் தொடர்புடன் சர்வதேச நாச சக்தியாக மபியா வளர்ந்துள்ளது. போபர்ஸ் பேரத் தொகை மபியா மூலம் கொடுக்கப்பட்டதாக 'தி வீக்' 14—2—88 இதழ் வெளிப்படுத்தியுள்ளது. மேலும் சோனியாவின் தந்தை சர்வாதிகாரி முசோலினி கட்சியில் முக்கிய பொறுப்பில் இருந்தவர் என்று தெரிகிறது. சஞ்சய் காந்தி உயிருடன் இருந்த வரை இந்தியக் குடியுரிமை பெறாத சோனியா அதன் பின்னரே குடியுரிமை பெற்றார் என்பது குறிப்பிடத் தக்கது.

ராஜிவ் ஆட்சியில் இத்தாலியுடன் இந்தியாவின் வியாபார உறவுகள் அதிகரித்து வந்தன. இன்று சர்வதேச அரசியல் பொருளாதார அரங்கில் மபியாக்கள் ஒரு பெரும் சக்தியாக உள்ளனர். ராஜிவ் பிரதமராக இருந்த போது 1986ல் ராஜஸ்தான் காட்டு மாளிகையிலும், 1987ல் அந்தமான் பகுதியிலும், 1988ல் இலட்சத் தீவுகளிலும் உல்லாசமாக விடுமுறைப் பயணம் மேற்கொண்டார். இந்தப் பயணங்களில் கலந்துகொண்ட பிரதமருக்கு வேண்டியவர்கள் பற்றி, குறிப்பாக இத்தாலியர்கள் பற்றி முழுமையான தகவல்கள் பத்திரிகைகளில் இருட்டடிப்பு செய்யப்பட்டிருக்கிறது. எனவே சூழ்ச்சிகரமான சர்வதேசப் பின்னணி சக்திகளின் ஆதிக்கத்தில் ராஜிவின் குடும்பம் இருந்தது என்று ஊகிக்க முடியும்.

## சர்வதேச சதிவலையில் இந்திய அரசியல்:-

ராஜிவ் பிரதமர் பதவிஏற்றபின் முதலில் இந்தியாவில் அமெரிக்காவுக்குச் சாதகமான மாற்றங்கள் ஏற்பட்டன என்பதைக்கீழ்வரும் சான்றுகள் உணர்த்துகின்றன. இதன் தெளிவான வெளிப்பாடாக 1986 மத்திய பட்ஜெட் அமைந்தது. சுதந்திரத்திற்குப்பின் முதன் முதலாக வெளிவந்த அறிவுபூர்வமான பட்ஜெட் என்று அமெரிக்க சார்பாளர் பல்கிவாலா இதனை பாராட்டி உள்ளார். இந்தியாவிற்கும் சோவியத்திற்கும் ஏற்கனவே உருவாகி இருந்த நெருங்கிய சிக்கலான (Complex) உறவுகளிலிருந்து விடுபட்டு அமெரிக்க சார்பாக மாறுவது எளிதான காரியமல்ல, இது ஒரு நேர்கோட்டு பாதையாக இல்லாமல் குறுக்கும் நெடுக்குமானதாகத்தான் இருக்கமுடியும். இந்த இடத்தில் இந்திராகாந்தியின் வெளிநாட்டு கொள்கையும் ஜனதாவுக்கு முந்திய மற்றும் பிந்திய காலங்களில் இருந்த சிலவேறுபாடுகளையும் மனதில் கொள்ள வேண்டும். இந்திராவின் தோல்விக்குப் பின் உருவான ஜனதா அமைச்சரவையில் சர்வதேச அரங்கில் ஒன்றுக்கொன்று ஒத்துப் போகாத முரண்பட்ட சக்திகளின் பிரதிநிதிகள் (சோவியத் சார்பாளர்கள், அமெரிக்கா சார்பாளர்கள்) இருந்தனர். ஜனதாவின் குறுகிய கால ஆட்சியில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கொள்கைகளில் நிலையற்ற ஊசலாட்டங்கள் காணப்பட்டதற்கும், ஜனதா ஆட்சியே ஒரு நிலையில்லாமல் ஊசலாடியதற்கும் இது ஒரு முக்கிய காரணமாகும்.

ஜனதாவில் அமெரிக்க சார்பாளர்களின் கை வலுப்பதற்கான அறிகுறிகள் தெரிந்தவுடன் ஜனதாவை கவிழ்க்கும் சதி சோவியத்தில் உருவானது. இதனை அமெரிக்க உளவு நிறுவனம் சி. ஐ. ஏ. கண்டுபிடித்து அமெரிக்காவின் அன்றைய இந்தியத் தூதுவர் பல்கிவாலாவிற்கு இந்தத் தகவலைக் கொடுக்க அவர் அன்றைய பிரதமர் மொரார்ஜியிடம் கொடுத்தார். எனினும் ஜனதா கவிழ்ப்பைத் தவிர்க்க முடியவில்லை. அதற்குப் பின் பொறுப்பேற்ற இந்திரா காந்தி தனது சோவியத் சார்பு போக்கில் வலிமையைச் சற்றுக் குறைத்தார். இது ஆப்கான் பிரச்சினையில் வெளிப்பட்டது. சோவியத் நிலைக்கு முழுமையான ஆதரவு என்ற நிலையிலிருந்து நழுவி சுமூகத் தீர்வு

சோவியத் படைகள் வெளியேறும் சூழல் வேண்டும் என்னும் நிலைப்பாட்டை எடுத்தார்.

அய். எம். எப். உள்ளிட்ட சர்வதேச நிதி நிறுவனங்களிடம் பெருமளவு கடனும், பன்னாட்டுக் கூட்டு எண்ணிக்கை வளர்ச்சியும் ஜனதாவிற்கு பின்வந்த இந்திரா ஆட்சியில் ஏற்பட்ட முக்கிய மாற்றங்களாகும். எனினும் சோவியத் சார்பு போக்கில் அடிப்படை மாற்றம் எதுவும் கிடையாது.

'சிலி' நாட்டு அதிபர் அலெண்டே சி. ஐ. ஏ. சதியில் கொல்லப்பட்டது போன்று தானும் கொல்லப்படலாம் என்று இறப்பதற்கு முன்பேயே கியூபா-வின் தலைவர் பிடல் காஸ்ட்ரோவிடம் இந்திரா தெரிவித்திருக்கிறார். தென் அமெரிக்காவில் அர்ஜென்டைனாவுக்கு அருகேயுள்ள நாடு சிலி ஆகும். பொதுவாக லத்தீன் அமெரிக்க நாடுகள் அமெரிக்க சார்பு பன்னாட்டுக் கொள்ளை-யில் சிக்கி சீரழிந்து வரும் நாடுகளாகும். சர்வதேச நிதி நிறுவனங்களின் வட்டி வலையில் சிக்கித் தவிக்கும் நாடுகளாகும்.

இந்த சிலி நாட்டில் மட்டும் 'ஜனநாயக' முறையில் சோசலிச அரசை அலெண்டே நிறுவினார், அமெரிக்காவிற்கு இது கலக்கத்தைக் கொடுத்தது. வேறு வழிகளில் அலெண்டேயின் அரசைக் கவிழ்க்க முயன்று தோல்வி கண்ட அமெரிக்காவின் சி. ஐ. ஏ. ஒரு குறிப்பிட்ட பன்னாட்டு நிறுவனத்தின் உதவியோடு அலெண்டேயைக் கொலை செய்து அமெரிக்க சார்பான ராணுவ சர்வாதிகார ஆட்சியை அங்கு நிறுவச் செய்தது. இப்போது சிலியில் மக்களின் 'ஜனநாயக'ப் போராட்டங்கள் கூர்மையடைந்து இராணுவ ஆட்சி 'ஜனநாயக'த்திற்கு வழிவிடும் நெருக்கடியை உண்டாக்கியுள்ளன. சர்வதேச பொருளாதார அரசியலில் அமெரிக்கா பெற்று வரும் பலகீனம் இதற்கு முக்-கிய காரணம் ஆகும்-

எனவே அலெண்டேயைப் போல் தானும் சி. ஐ. ஏ. சூழ்ச்சி காரணமாகக் கொல்லப்படலாம் என்ற அபாயத்தை இந்திரா காந்தி உணர்ந்திருந்-தார். ராஜிவின் ஆட்சியில் பொருளாதார அரங்கில் ஏற்பட்ட மாற்றங்கள் வெளிநாட்டுக் கொள்கையில் தெளிவாக பிரதிபலிக்காததற்குக் காரணம் இந்தியாவுக்கும், சோவியத்திற்கும் ஏற்கனவே இருந்துவரும் வெளிப்படை-யான மற்றும் இரகசிய உறவுகளே காரணமாகும்.

இந்தியாவிற்கு 1986-ஆம் ஆண்டு சோவியத் அதிபர் கோர்பசேவ் வருகைதந்தார். இந்திரா இறந்த பிறகு இந்தியாவிற்கு வரும் முதல் வருகை அது. இந்த வருகையின் போது ராஜிவும், கோர்பசேவும் இரகசியமாக உதவியாளர் எவரும் இல்லாமல் 7 மணி நேரம் பேசியுள்ளனர். இந்தப் பேச்சுகளில் இந்திரா காலத்தில் சோவியத்துடன் செய்து கொண்ட இரகசிய ஒப்பந்தங்கள் பேசப்பட்டிருக்க வேண்டும்.

ஏனெனில் கோர்பசேவின் இந்த வருகைக்குப்பிறகு ராஜிவ் இந்தியாவின் போக்கை அமெரிக்க சார்பு நிலையிலிருந்து சோவியத்சார்பு நிலைக்குத் திருப்பினார். இதன் விளைவாக அமெரிக்க ஏகாதிபத்தியம் தனது சுரண்டல் கொள்கைக்கு ஆபத்து ஏற்பட்டு விட்டதை உணர்ந்து சி. ஐ. ஏ. அமைப்பின் மூலம் ராஜிவிற்கு நெருக்கடியைக் கொடுக்க ஆரம்பித்தது.

1986 அக்டோபர்-2, காந்தி பிறந்த நாளன்று ராஜ்காட்டில் (காந்தி சமாதியில்) இராஜிவ் காந்தியை 'விளையாட்டுத் துப்பாக்கியால்' ஒரு நபர் சுட்டார்: கடுமையான பாதுகாப்பு வளையத்தை உடைத்துக் கொண்டு அந்த நபர் காந்தி சமாதியில் ஒளிந்திருந்தார். இது ராஜிவிற்கு அமெரிக்கா கொடுத்த எச்சரிக்கையாக இருக்கலாம்.

இந்தச் சூழலில் இந்தியாவில் குடியரசுத் தலைவர் தேர்தல் நடைபெற இருந்தது. குடியரசு துணைத் தலைவரர்க இருந்த ஆர். வெங்கட்ராமன் ராஜிவை மிரட்டிக் குடியரசுத் தலைவர் தேர்தலில் வேட்பாளராக ஆனார் என்று சொல்லப்படுகிறது. ஆர். வெங்கட்ராமன் ஒரளவு அமெரிக்க ஆதரவாளராக இருப்பவர் (இவரது மகள் அமெரிக்கப்பன்னாட்டு நிறுவனத்தில் பணிபுரிகிறவர் என்பதையும் கருத்தில் கொள்ளலாம்.)

குடியரசுத் தலைவர் தேர்தலில் எதிர்க்கட்சிகள் ஒன்று சேர்ந்து ஜெயில் சிங்கை நிறுத்தி ரர்ஜிவ் காந்தியை எதிர்க்கத் திட்டமிட்டனர். இத்திட்டத்தை எதிர்க்கட்சிகளர்ன சி. பி. எம்., சி. பி. ஐ., கம்யூனிஸ்டுகள் எதிர்த்தனர். சேர்வியத் சர்ர்பு ரா ஜிவ் காந்தியை ஆதரிப்பதற்காகக் கம்யூனிஸ்டுகள் கிருஷ்ண அய்யரை குடியரசுத் தலைவர் வேட்பாள்ரர்க நிறுத்த முயற்சி செய்தனர்.

எதிர்க்கட்சிகளும் கம்யூனிஸ்டுகளின் நெருக்கடியை சமாளிக்க முடியாமல் ஒன்றுபட்ட வேட்பாளர் என்ற அடிப்படையில் கிருஷ்ண அய்யரையே நிறுத்தின. குடியரசுத் தலைவர் தேர்தல் நேரத்தில் இந்திரா காங்கிரசோ ராஜிவ் காந்தியோ வீழ்த்தப்பட்டால் இந்தியாவிற்கும், ஒருமைப்பாட்டிற்கும் ஆபத்து என்ற கூக்குரலுடன் சி.பி.ஐ. சி.பி.எம். கம்யூனிஸ்டுகள் ராஜிவைக் கடுமையாகத் தாக்கவில்லை. இவை சோவியத் ஆதரவோடு நடந்த நிகழ்ச்சிகளாகும்.

இந்திய அரசியலில் அமெரிக்க - சோவியத் நாடு சண்டைகளின் ஒரு தற்காலிக சமாதானமாகக் குடியரசுத் தலைவர் தேர்தல் முடிவு அமைந்தது. ஒரளவு அமெரிக்க சார்பாளரான ஆர். வெங்கட்ராமன் குடியரசுத் தலைவர் ஆனார். ஆனால் ராஜிவ் காந்தியின் வேட்பாளராக வெற்றி பெற்றார். இத் தேர்தல் முடிவினால் அமெரிக்கா, சோவியத் நாடு இரண்டிற்கும் பலன்கள் உண்டு.

இந்த நேரத்தில் அமெரிக்க சார்பு பத்திரிகையான இந்தியன் எக்ஸ்பிரஸ் (கோயங்கா-குருமூர்த்தி) போபார்ஸ் மற்றும் பேர்பாக்ஸ் ஊழலை வெளிப்படுத்தியது. இதற்கான ஆதாரங்களை அமெரிக்க உளவு நிறுவனம் சி.ஐ.ஏ. தந்தது. இந்நிகழ்ச்சிகள் இந்தியா சோவியத் சார்பு நாடு என்பதனை வெளிப்படுத்தியபின் ஏற்பட்டதாகும்.

## ஈழம் - மேற்கு சகாரா - பங்களாதேஷ்:-

இலங்கைப் பிரச்னையைத் திருமதி. இந்திரா காந்தியின் திட்டத்திற்கு பதிலாக (ஓரளவு சோவியத் சாாபு நோக்கில்) ராஜிவ் கையாண்டார். ஈழ விடுதலைக் குழுக்களுக்கு நெருக்கடியை அதிகரித்து இலங்கை அரசியல் சட்டத்திற்குள் ஒரு தீர்வை அமுல்படுத்த முயன்றார். அனுபவமின்மை, இந்திரா காந்திக்கு இருந்த அரசியல் சூழ்ச்சித் திறன் இன்மை, பொதுவாகத் திறமை இன்மை. விரும்பியதை விரும்பியவாறு செய்ய ராஜிவ் காந்தியால் முடியவில்லை; எனினும் ஈழவிடுதலைப் போராட்டம் இந்திய தேசியப்பார்ப்பன கிடுக்கிப்பிடியில் சிக்கித்தவித்தது. சர்வதேச அரசியல் பொருளாதார சூழல் டெல்லியின் பார்ப்பன சூழ்ச்சிக்குச் சாதகமாக உள்ளது. இதனைப் பின்னர் விரிவாகப் பார்ப்போம்.

அமெரிக்கா, சீனா, பாகிஸ்தான் ஆகிய நாடுகள் ஏற்கனவே ஜெயவர்த்தனே அரசுக்குத் துணைநிற்கும் நாடுகளாகும். இந்திராவின் மரணத்திற்குப் பின் இந்தியாவைத் தனது செல்வாக்கு மண்டலத்தில் உறுதிப்படுத்த முயன்று வெற்றி பெற்ற சோவியத்திற்கு இலங்கையை விட பெரிய சுரண்டல் களம் இந்தியா என்பதால் இலங்கைப் பிரச்சினையில் இந்தியாவின் பக்கம் நின்று மவுனம் சாதிக்கிறது. எனவே ஈழ விடுதலை அண்மையில் சாத்தியமில்லாதது மட்டுமின்றி, டெல்லி அதிகார பீடம் சீர்குலையும் போது மட்டுமே சாத்தியமாகும். இந்தியா என்னும் சர்க்கஸ் கூடாரத்தில் புதிதாகச் சிறைப்பிடிக்கப் பிடிக்கப்பட்டுள்ள வித்தியாசமான அடிமையாகத் தமிழ் ஈழம் உள்ளது.

ராஜிவ் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்தபின் அவசரமாகச் செய்த காரியங்களில் ஒன்று மேற்கு சகாரா விடுதலையை அங்கீகரித்தது ஆகும். ஆப்பிரிக்காவின் வடமேற்கு மூலையில் மொராக்கோ நாட்டில் அடிமைப்பட்டிருக்கும் பகுதி மேற்கு சகாரா ஆகும். பொலிசாரியோ விடுதலை இயக்கம் மேற்கு சகாரா விடுதலைக்காக அமெரிக்க சார்பு மொராக்கோவை எதிர்த்துப் போராடி வருகிறது. மொராக்கோ அதிபர் சர்வதேசமேற்பார்வையில் பிரிந்து போகும் உரிமைக்கான கருத்து வாக்கெடுப்பு நடத்த ஒத்துக்கொண்டிருந்தார் ஆனால் இந்தியாவோ மொராக்கோவின் வேண்டுகோளையும் மீறி மேற்கு சகாரா விடுதலையை அங்கீகரித்துள்ளது. இதற்கு மொராக்கோவிற்கும், இந்தியாவிற்கும் இடையேயான மோசமான உறவு ஒரு காரணமாகும்.

இந்திரா ஆட்சி காலத்தில் பல ஆண்டுகளுக்கு முன் (1969) மொராக்கோ தலைநகர் ரபாத்தில் சர்வதேச முஸ்லீம் மாநாடு நடந்தது. அதில் கலந்து கொள்ள இந்திய பிரதிநிதி சென்றிருந்தார். இந்தியா முஸ்லீம் நாடல்ல என்று சொல்லி பாகிஸ்தான் இந்தியப் பிரதிநிதித்துவத்தை எதிர்க்கவே இந்திய பிரதிநிதி மாநாட்டில் கலந்து கொள்ளாமல் திரும்பினார் இது இந்தியாவிற்கு ஒரு சர்வதேச அவமானம் ஆனது. இந்திராவின் இறுதி நிகழ்ச்சியின் போது மொராக்கோ நாட்டுத் தலைவா யாரும் அதில் கலந்து கொள்ளவில்லை. எனவே இந்தியா-மொராக்கோவின் மோசமான உறவும் மேற்கு சகாரா விடுதலையை இந்தியா அவசரமாக அங்கீ

கரித்ததற்கு ஒரு காரணமாகும். சர்வதேச அரசியல் மாற்றங்கள் இப்போது இந்தியா-மொராக்கோ உறவில் வளர்ச்சியை ஏற்படுத்தி உள்ளன.

இத்துடன் ஈழ விடுதலையில் டெல்லி பார்ப்பன அரசு மேற்கொண்டு வரும் இலங்கை அரசியல் சட்டத்திற்குட்பட்ட தீர்வு என்ற நிலைப்பாட்டை ஒப்பிடும் போது சர்வதேச அரசியலுக்கும், தேச விடுதலை முயற்சிக்குக் கிடைக்கும் ஆதரவு அல்லது எதிர்ப்புக்கும் இடையிலான தொடர்பு தெளிவாகும்.

தனது சொந்த பிற்போக்கு நலன்களுக்காக வேறு ஒரு நாடு கொடுக்கும் ஆதரவை முக்கிய பலமாகக் கொண்டு பெறும் விடுதலை உண்மையான மக்கள் விடுதலையாக அமையாது என்பதற்கு பங்களாதேஷ் விடுதலை ஒரு வரலாற்று சான்றாக இருக்கிறது. பாகிஸ்தானிடம் அடிமைப்பட்டு பொருளாதார புறக்கணிப்பு மற்றும் உருதுமொழி திணிப்பு ஆகியவற்றிற்கு உள்ளான வங்கமொழியைப் பிரதானமாகக் கொண்டுள்ள வங்க தேசத்தின் மீட்சியைச் சுய ஆட்சி கோரிக்கை என்ற இலக்கில் ஷேக் முஜிபுர் ரகிமானின் அவாமிலீக் கட்சிமுன் எழுந்தது. அன்றைய பாகிஸ்தானின் அரசியல் பலகீனப் போக்குகளைக் கையாண்டு இந்தியா வங்கதேச விடுதலைக்குப் பெருமளவு ஆதரவு தந்தது. சுயாட்சிக்குப் பதிலாக வங்கதேசம் (பங்களாதேஷ்) விடுதலைப் பெற இந்தியாவின் ஆதரவு முக்கியக் காரணமாக இருந்தது.

வங்கதேச விடுதலைக்குப் பின் ஷேக் முஜிபுர் ரகிமான் சுட்டுக் கொல்லப்பட்டபின் சர்வாதிகார இராணுவ ஆட்சியில் வங்கதேச மக்கள் அடிமைப்பட்டுள்ளனர். இம்மக்களுக்கு வங்கதேச விடுதலை என்பது கொதிக்கும் எண்ணெய்ச் சட்டியிலிருந்து நெருப்புக்குள் விழுந்த கதையாகி விட்டது. இதேபோல் சர்வதேச அரசியல் பொருளாதார சூழலில் ஆதரவு வலையில் சிக்கித் தடுமாறுவது பாலஸ்தீன விடுதலையாகும்.

பாலஸ்தீனம் என்று சொல்லப்படும் நாட்டின் கணிசமான பகுதி இஸ்ரேல் கட்டுப்பாட்டிற்குள் இல்லாமல் அரபு நாடுகளின் கட்டுப்பாட்டிற்குள் உள்ளது. இந்தப் பகுதியில் பாலஸ்தீன அரசை நிறுவுவது எளிது என்று தோன்றலாம். அதிலும் பாலஸ்தீன விடுதலை முயற்சியைப் பல நாடுகள் அங்கீகரித்துள்ள நிலையில் இது ஏன் நடக்கவில்லை என்று ஆச்சரியமாக இருக்கலாம்.

பாலஸ்தீன விடுதலையை முன் எடுக்கும் பல்வேறு குழுக்கள் ஒவ்வொன்றிற்கும் சர்வதேச அரங்கில் தத்தம் சொந்த நலன்கள் நோக்கில் ஒவ்வொரு நாட்டின் ஆதரவு பின்னணி உள்ளது. இதன் காரணமாகவே சர்வதேச அரசியல் சூழ்ச்சியில் சிக்கிய பகடைக் காய்களாக இந்த இயக்கங்கள் உள்ளன.

## அரசு ஆதரவு - மக்கள் ஆதரவு:-

அரசு ஆதரவு என்பது வேறு; மக்கள் ஆதரவு என்பது வேறு. இந்தியாவிலுள்ள படித்த மக்களில் பெரும்பாலோருக்குக் கூட பாலஸ்தீனத்தைப்

பற்றியோ, அதன் விடுதலையின் நியாயத்தைப் பற்றியோ தெரியாது. எனவே பாலஸ்தீன விடுதலைக்கு இந்திய அரசின் ஆதரவு இருப்பதால் இந்திய மக்களின் ஆதரவு இருக்கிறது என்பது பொருள் ஆகாது.

மக்கள் ஆதரவில் அரசியல் சூழ்ச்சிகளுக்கான வாய்ப்புகள் அரசு ஆதரவில் உள்ள அளவிற்கு கிடையாது. பாலஸ்தீன விடுதலையை ஆதரிக்கும் இந்திய அரசு பாலஸ்தீன விடுதலை நியாயங்களை இந்திய மக்கள் புரிந்து கொள்வதற்காகத் தானும் எந்த நடவடிக்கையும் எடுக்காததுடன் பாலஸ்தீன விடுதலை இயக்கங்கள் தப்பித் தவறி எடுக்கும் நடவடிக்கையும் விரும்பாது. பாலஸ்தீன விடுதலையின் நியாயங்களைப் புரிந்த மக்கள் தமது தேசங்களின் விடுதலையைப் பற்றி சிந்தித்து விடுவார்கள் என்பதே இதற்குக் காரணம் ஆகும்.

பாலஸ்தீன விடுதலையை ஆதரிக்கும் நாடுகளுக்கிடையே ஒற்றுமை கிடையாது. சர்வதேச அரசியல் பொருளாதார சூழ்ச்சிகளே இதற்குக் காரணமாகும். சர்வதேச அரசியலும், பொருளாதாரமும் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்தவை ஆகும். முதலில் சர்வதேச அரசியல் பற்றி பார்ப்போம்.

## சர்வதேச அரசியல்:-

சர்வதேச அரசியலில் அமெரிக்க சார்பு நாடுகளாகக் கனடா, இங்கிலாந்து, பிரான்ஸ், இத்தாலி, மேற்கு ஜெர்மனி போன்ற வளர்ந்த நாடுகள் இருந்தன. சோவியத் சார்பு நாடுகளாக போலந்து, கிழக்கு ஜெர்மனி அங்கேரி, செக்கோஸ்லோவியா, ருமேனியா போன்ற நாடுகள் இருந்தன. இது தவிர வளரும் நாடுகளில் இந்தியா, கியூபா, அங்கோலா, நிகரகுவா வியட்நாம் போன்றவை சோவியத் சார்பு நாடுகளாக இருந்தன.

பாகிஸ்தான், இலங்கை, நிகரகுவாவைத் தவிர்த்த மற்ற தென் அமெரிக்க மற்றும் மத்திய அமெரிக்க நாடுகள் அமெரிக்க சார்பு நாடுகளாகும் இந்தப் போக்குகள் தற்சமயம் மாற்றத்துக்கு உள்ளாகி வருகின்றன.

இது தவிர சீனா சர்வதேச அரங்கில் ஒரு சக்திமிக்க நாடாகும். சோவியத் நாடு எதிர்ப்பு என்ற நோக்கில் சில பிரச்சினைகளில் அமெரிக்கா-சீனா வெளிநாட்டுக் கொள்கைகள் ஓரணியில் நிற்கின்றன. அல்பேனியாவைத் தவிர்த்து இந்த மும்முனை சர்வதேச அரசியல் சூதாட்டத்தில் சிக்காத நாடுகளே இல்லை என்று சொல்லலாம். இந்த மூன்று பெரும் சக்திகளும் அவர்களைச் சார்ந்த வளர்ந்த நாடுகளும் தத்தமக்கு ஆதரவான நாடுகளில் நடைபெறும் மனித உரிமை, தேச விடுதலை முயற்சிகளைப் பயங்கரவாதம் முத்திரை குத்தி ஒழிப்பதற்கு வெட்கப்படுவதில்லை. வெளிநாட்டுக் கொள்கைகளில் தமக்கு சாதகமற்ற நாடுகளில் உள்ள பிரச்சினைகளைத் தூண்டி ஆதரவளித்து மனித உரிமை மற்றும் தேச விடுதலை சர்வதேச ஆதரவாளர்களாக வெட்கமற்றுக் காட்டிக் கொள்கின்றனர். அணி சேரா நாடுகள் அமைப்புக்குள்

உள்ள ஒவ்வொரு நாடும் இந்த மும்முனை அரசியலில் சிக்கி உள்ளவையே ஆகும். மும்முனை மோதல் அணிசேரா அமைப்புக்குள்ளும் பிரதிபலித்து வருகிறது.

சிங்கள ஜெயவர்த்தனேக்கு ஆதரவளித்துவரும் அமெரிக்கா, ஆப்கான் விடுதலைக்கு ஆயுத உதவி பொருள் உதவி செய்து வருகிறது. காரணம் இது சோவியத்திற்கு எதிர்ப்பான போராட்டமாகும். சோசலிச சீனாவோ, இலங்கை, பாகிஸ்தான் போன்ற இனவேறி மற்றும் சர்வாதிகார அரசு-களுடன் நேசமாக உள்ளது. அதே நேரத்தில் கம்பூசியாவில் இருந்து வியட்-நாம் துருப்புகள் வாபஸ்பெற வேண்டுமென்று உறுதியாக உள்ளது ஏனெனில் வியட்நாம் சோவியத் சார்பு ஆகும் ஆப்பிரிக்காவில் உள்ள பல நாடுகளில் இப்படிப்பட்ட சர்வேதேச இரட்டைவேடப்போக்குகளுக்கு நிறைய எடுத்துக் காட்டுகள் சொல்லலாம்.

இத்தகைய சர்வதேச அரசியல் போக்குகள் சர்வதேசப் பொருளாதாரக் கொள்கையுடன் பின்னிப்பிணைந்துள்ளன. இதைப்பற்றி புரிந்துகொள்ள சர்வதேசப்பொருளாதார அமைப்பைப்பற்றி கீழே காணும் விவரங்களைத் தெரிந்துகொள்ளவேண்டும்.

இரண்டாம் உலகயுத்த முடிவில் இங்கிலாந்து பலகீனமான நாடாக இருந்தது. அமெரிக்கா தமது வியாபார நலனுக்காக உலகச்சந்தையைப் பெறுவதில் வெறியுடன் இருந்தது. காலனிய நாடுகளின் விடுதலையில் அமெரிக்கா பெரும் ஆர்வத்துடன் இருந்ததற்கு இதுவே முக்கியகாரணமாகும் இந்திய விடுதலைக்கு முன்னரே அமெரிக்காவின் சி. ஐ. ஏ. அமைப்பிற்கு முந்தைய அமைப்பு இந்தியாவின் உளவு வேலைபார்த்ததும் இந்திய விடுதலையில் அமெரிக்கா பெரும் ஆர்வம் கொண்டிருந்ததும் இந்த அடிப்படையில் கொள்ளவேண்டிய செய்திகளாகும். அமெரிக்காவின் ஆதரவுடன் இங்கிலாந்து பிரான்ஸ், மேற்குஜெர்மனி, ஜப்பான் ஆகிய நாடுகளும் நமது பொருளாதார பலத்தைப் பெருக்கிவந்தன. சோவியத் யூனியனும் அதன் சார்புசோசலிச நாடுகளும் ஒரு வித்தியாசமான பொருளாதார அமைப்பில் வளர்ந்து வந்தன இந்த இரண்டு போக்குகளிலும் சிக்காமல் சீனாவும் அல்பேனியாவும் சுய சார்புசோசலிச நோக்கில் வளர்ந்துவந்தன. இன்றைய தினம் சர்வதேச அரங்கில் உள்ள நாடுகள் பின்வரும் சர்வதேச பொருளாதார சூதாட்டத்தில் சிக்கியுள்ளன. வளர்ந்த நாடுகள் என்று சொல்லப்படும் நாடுகள் வளரும் நாடுகளைக்கொள்ளையடிப்பதற்கு ஏதுவான வகையில் சர்வதேச பொருளாதாரம் உள்ளது. வளர்ந்த நாடுகளின் உற்பத்திப்பொருட்களை விற்கும் சந்தையாக வளரும் நாடுகள் உள்ளன. <u>வளரும் நாடுகளிலிருந்து வளர்ந்த நாடுகளுக்குச் செய்யப்படும் ஏற்றுமதி பொருட்களின் விலையேற்றத்தை விட வளர்ந்த நாடுகளிலிருந்து வளரும் நாடுகளுக்கு செய்யப்படும் ஏற்றுமதி பொருட்களின் விலையேற்றம் மிகமிக அதிகமாகும்.</u>

இது தவிர வளரும் நாடுகளில் குறைவான கூலியில் கிடைக்கும் தொழில் நுட்ப உழைப்புச்சுரண்டல் மூலம் (Skilled Labours) சுற்றுப்புறச் சுகாதாரக் கட்டுப்பாடுகள் இன்மைக்காரணமாகத் தொழிற்சாலைகளையே வளரும் நாடுகளில் நிறுவி தமது பொருளாதாரக்கொள்கையை வளர்ந்தநாடுகள் விரிவுபடுத்திவருகின்றன. சுருக்கமாக வளரும் நாடுகளின் இயற்கை வளங்களையும் உடல்,அறிவு வளங்களையும் தமது பொருளாதார கொள்ளை நோக்கில் வளர்ந்த நாடுகள் சுரண்டிவருகின்றன.

இந்தக்கொள்ளையில் பங்காளிப்போட்டிகளும் பகைமை போட்டிகளும் உண்டு. வளர்ந்தநாடுகளின் சந்தைக்குள்ளேயும் பங்காளி போட்டிகள் உண்டு தம்முடைய கொள்ளைக்கு சாதகமான அரசுகளைப் பாதுகாப்பதிலும் அதற்கு எதிராகக்கிளம்பும் எதிர்ப்புகளைத்திசை திருப்பி மழுங்கடிப்பதிலும் வளர்ந்த நாடுகள் ஈடுபட்டுள்ளன; இவற்றை எல்லாம் பின்வரும் நிகழ்கால உதாரணங்கள் மூலம் புரிந்துகொள்ளலாம். சீனாவும் சோவியத்தும் கோதுமையைப்பெரும் அளவில் இறக்குமதி செய்பவை. ஆஸ்திரேலியாவும் சில அய்ரோப்பிய நாடுகளும் மேற்படி இரண்டு நாடுகளுக்கும் கோதுமை ஏற்றுமதி செய்கின்றன. கடந்த சில ஆண்டுகளில் அமெரிக்கா தனது நாட்டில் கோதுமை விளைச்சல் அதிகரிப்பு காரணமாக விவசாயிகள் பிரச்சினையை சமாளிக்கச் சோவியத்திற்குக் கோதுமையை மற்ற நாடுகளைவிடக் குறைந்த விலைக்கு விற்றது. இதனால் கோதுமையைச் சோவியத்திற்கு ஏற்றுமதி செய்து வந்த ஆஸ்திரேலியா உள்ளிட்ட சில அய்ரோப்பிய நாடுகளின் ஏற்றுமதி பாதிக்கப்பட்டது. அதே போல் வெளிநாட்டு வாத்தகத்தில் அமெரிக்காவிற்கும் ஜப்பானுக்கும் இடையில் ஜப்பானின் நிலை மிகவும் சாதகமாகவும் அமெரிக்காவின் நிலைமிகவும் பாதகமாகவுள்ளது. எனவே ஜப்பானிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு கடுமையான தடைகள் ஏற்படுத்த அமெரிக்கா முயல்கிறது, இது ஜப்பானின் அடிவயிற்றைக் கலக்குகிறது.

அன்னிய நாட்டு முதலீட்டில் அமெரிக்க சார்புநாடுகளுடன் போட்டியிட முடியாமல் தவிக்கும் சோவியத் நாடு மேற்கத்திய பன்னாட்டு நிறுவனங்களுடன் கூட்டு சேர முடிவு செய்துள்ளது. இதுவரை சேராது இருந்த சோவியத் சீன நாடுகள் அய். எம். எப். மற்றும் உலகவங்கி போன்ற சர்வதேச நிதி நிறுவனங்களில் சேர முயன்று வருகின்றன; சீனாவோ, அமெரிக்கா சார்பு பன்னாட்டுக் கொள்ளைக்குச் சாதகமாகத் தனது கதவுகளை அகலமாகத் திறந்து முதலாளிய முறையை நோக்கி வேகமாகப்பின்னேறுகிறது.

சர்வதேசப்பொருளாதாரக் கொள்ளைக்குச் சாதகமான முதுகெலும்பாக அய். எம்: எப், உலகவங்கி போன்ற சர்வதேச நிதிநிறுவனங்கள்உள்ளன: இந்த சர்வதேசக் கடன்வலையில் சிக்கிய நாடுகளின் பொருளாதாரக் கொள்கையை இந்நிறுவனங்கள் கட்டுப்படுத்துகின்றன. தனியார் துறையை மற்றும் பன்னாட்டுக் கூட்டை ஊக்குவித்தல் மக்கள் நல செலவினங்களை குறைத்தல்

மக்களிடமிருந்து அரசு பெரும் வருவாய் இவற்றைப் பெருக்கல், உள்நாட்டுத் தொழில் நுணுக்கமுயற்சிகளைச் சிதைத்தல் போன்றவை இவற்றில் சிறப்பு அம்சமாகும். நிகழ்கால இந்தியாவில் இதற்குப்பல ஆதாரங்கள் உள்ளன. எடுத்துக்காட்டுகளாக அண்மைகாலங்களில் வீட்டுமனை பதிவுசெலவு அதிகப் படுத்தியது, மாணவரின் தேர்வு கட்டணத்தை அதிகரித்து பல்கலைக் கழகங்கள் வியாபார நிலையங்களாக மாறிவருவது, பேருந்து கட்டண உயர்வு போன்றவையை எடுத்துக்கொள்ளலாம்.

சர்வதேச பொருளாதாரத்தில் இராணுவவியாபாரம் பெரும்பங்கை வகிக்கிறது. 'தேச இரகசியம்' என்ற பெயரில் வெளியில் தெரியாமல் தில்லு முல்லுகள் செய்யவும் கொள்ளை லாபம் அடிக்கவும் இதில் நல்ல வாய்ப்பு உண்டு. சர்வதேச அரசியலில் செல்வாக்கு நிலைபெறுவதற்கு இராணுவ பலம் ஒரு முக்கிய காரணமாகும். சர்வதேச அரசியல் சர்வதேசப் பொருளா-தார சூதாட்டத்தோடு பின்னிப்பிணைந்துள்ளது. எனவே சர்வதேச அரசியல் பொருளாதாரம் சூதாட்டத்தில் இராணுவ வியாபாரத்திற்கு முக்கியப் பங்கு உண்டு. இந்த சூதாட்டத்திற்கு நல்ல எடுத்துக்காட்டாக இந்தியா-பாகிஸ்தான் பகைமை இருக்கிறது.

1947 ஆகஸ்ட் 15 ல் இந்தியாவும் பாகிஸ்தானும் 'விடுதலை' அடைந்த போது இந்தியா மற்றும் பாகிஸ்தான் மட்டுமின்றி நிறைய சுதேச சமஸ்தானங்கள் இருந்தன. இதில் தென்னாட்டில் ஹைதராபாத் நிஜாமும் வடநாட்டில் காஷ்மீர் சமஸ்தானமும் மிகப்பெரியவை ஆகும். இதில் காஷ்மீரில் பெரும்பான்மை முஸ்லீம் மக்கள். மன்னரோ இந்து. ஹைதராபாத்சமஸ்தானத்தில் பெரும்பான்மை இந்து மக்கள். மன்னரோ முஸ்லீம். இந்த சமஸ்தானங்கள் இந்தியாவோடோ அல்லது பாகிஸ்தானோடோ சேராமல் தனித்தனி நாடுகளாக இருக்கப்போவதாக இம்மன்னர்கள்பிரகடனப்படுத்தினர். இந்தியப்பிரதமர் நேரு காஷ்மீருக்குள் நுழைந்தால் கைதுசெய்யப்போவதாகக் காஷ்மீர் மன்னா அறிவித்திருந்தார். சர்தார் வல்லபாய்பட்டேல் மிரட்டல் கெஞ்சல் நடைமுறை மூலம் ஒவ்வொரு சமஸ்தானமாக இந்தியாவுடன் இணைக்கச்செய்தார்.

''தான் பிறந்த மண்'' (காஷ்மீர்) என்ற போதை அன்றைய இந்திய பிரதமர் நேருவை ஆட்டிப்படைத்தது. ஷேக் அப்துல்லா என்ற சந்தர்ப்ப வாதி இந்தியாவில் காஷ்மீர் சூதாட்டத்திற்கு மிகவும் பயன்பட்டார்.

ஹைதராபாத்தில் நிஜாமின் காட்டுதர்பாரை எதிர்த்து மக்கள் குறிப்பாகத் தெலிங்கானா பகுதியில் மக்கள் கிளர்ந்தெழுந்தனர். இந்தமக்கள் எழுச்சியில் 'வர்க்கப்போராட்டம்' என்ற பெயரில் கம்யூனிஸ்டுகள் குளிர் காயமுனைந்தனர் ஆயிரக்கணக்கான கிராமங்கள் விடுவிக்கப்பட்டு உழைக்கும் மக்களின் கட்டுப்பாட்டிற்குள் பல மாதக்கணக்கில் இருந்தன. இந்த குழப்பத்தைப் பயன்படுத்தி ஹைதராபாத் நிஜாமை இந்தியாவுடன் இணைக்கும்

சூழ்ச்சியுடன் இந்திய ராணுவம் அங்கு சென்றது. ஹைதராபாத் நிஜாம் ஆட்சியைக் கவிழ்த்த இந்திய ராணுவம் உழைக்கும் மக்களின் எழுச்சியை ஒடுக்கியது. குளிர்காய்ந்த கம்யூனிஸ்டுகள் புரட்சியை வாபஸ் பெற்றதாக அறிவித்து தலைமைப் பொறுப்பிலிருந்து நழுவினார்கள். மக்களின்எழுச்சி-ஒடுக்கப்பட்டதோடு ஹைதராபாத் நிஜாம் பகுதி இந்தியாவோடு இணைக்கப் பட்டது.

இதே போல் பாகிஸ்தான் தனது இராணுவத்தின் துணையுடன் காஷ்-மீர் மக்களின் பெரும்பாலோர் முஸ்லீம்கள் என்பதைப் பயன்படுத்திக் காஷ்-மீரைப் பாகிஸ்தானுடன் இணைக்க முயற்சி செய்தது. இதற்கிடையில் காஷ்மீர் இந்து மன்னனை எதிர்த்து முஸ்லீம்கள் கிளர்ச்சி செய்தனர் இனி மேல் அரசாளமுடியாது என்ற நெருக்கடி தெளிவான பின் காஷ்மீர் அரசன் இந்திய அரசுடன் அவசரமாக பேரம்பேசி இந்தியாவுடன் காஷ்மீரை இணைப் பதாக அறிவித்தான். இதற்குள் காஷ்மீரின் கணிசமான பகுதி பாகிஸ்தான் இராணுவக் கட்டுப்பாட்டிற்குள் வந்துவிட்டது. காஷ்மீா இந்தியாவுடன் இணைந்ததாகச்சொல்லி இந்திய ராணுவம் விரைந்தது.

போா நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டு காஷ்மீரில் மூன்றில் ஒரு பகுதி இன்னும் பாகிஸ்தான் பக்கம் உள்ளது. பிரச்சனை அய். நா. சபைக்குச் சென்றது. காஷ்மீர் மக்களிடம் கருத்து வாக்கெடுப்பு நடக்கி பிரச்சனை தீர்ப்பது என்பதை முதலில் இந்தியா ஒப்புக்கொண்டது முஸ்லீம்கள் பெரும்-பான்மையாய் இருப்பதால் தனக்குச்சாதகமாக முடிவு அமையாது என்று உணர்ந்த இந்தியா கருத்து வாக்கெடுப்புக்கு உடன்படாமல் நழுவியது.

இந்த பிரச்சினை காரணமாக இந்தியா பாகிஸ்தான் இரு அரசுகளும் பின்வரும் மக்கள் விரோத போக்குகளை எதிர்ப்பின்றி கையாளுகின்றன. கல்வி, உடல்நலம் போன்றவற்றிற்கு குறைவான சதவீதத்தை செலவு செய்தல், இராணுவத்திற்கான செலவினைக்கூட்டுதல், அடிப்படை மனித உரிமைகளை ஒடுக்குதல் போன்றவையே இப்போக்குகளாகும்.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே நடந்துவரும் இராணுவ பலப்போட்டி, சர்வதேச இராணுவத்தொழில் வியாபாரிகளுக்கு மிகவும் சாதகமானது. பாகிஸ்தான் அமெரிக்காவைச்சார்ந்தும், இந்தியா சோவியத் நாட்டைச் சார்ந்தும் தம் இராணுவ பலத்தை தம்நாட்டு மக்களின் அடிப்-படைத்தேவைகளை, உரிமைகளை புறக்கணித்து வளர்த்துவந்தன 1962 சீனப் போருக்குப்பின்னர் சோவியத் சார்பு போக்கு இந்தியாவில் அதிகரித்தது இந்திய - சீன எல்லைத் தகராறின் பின்னணியைச் சுருக்கமாகப்பார்ப்போம்.

ஆங்கிலேயன் தனது நிர்வாக வசதிக்காக உருவாக்கப்பட்ட அமைப்-பே இந்தியா, இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையே உள்ளது இமயமலை மக்மோகன் என்ற ஆங்கிலேயர் சர்வேசெய்து உருவாக்கிய இந்திய - சீன எல்லைக்கோடு 'மக்மோகன்கோடு' (**Mac Mohan Line**) என்று அழைக்கப் படுகிறது. இதைச்சீனா ஏற்றுக்கொள்ளவில்லை. இதைச்சமாதான்மாகத்-

தீர்த்துக்கொள்ளும் முயற்சியில்இந்தியா ஒத்துழைக்கவில்லை.சீனர்கள் இரா-ணுவபலத்தால் தாம் நினைத்த எல்லைப்பகுதியை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துவிட்டார்கள், பெர்ட்ரண்ட்ரஸ்ஸல் இப்பிரச்சினையை பேச்சு வார்த்தை மூலம் தீர்க்க முனைந்தார். அவரின் சுயசரிதையில் இது தொடர்பாகக் காணப்படும் செய்திகளும் இந்திய சீனப்போர் தொடர்பான புத்தகங்களும் கட்டுரைகளும் மேற்சொன்னதையே உறுதிப்படுத்துகின்றன அன்றைய பிரதமர் நேரு உண்மை நிலையை மக்களிடையே உணர்த்தாததால், இன்றும் அப்பிரச்சினை சுமுகமாக தீர இயலாமல் இருக்கிறது. இன்றுவரை சோவியத் யூனியன் இந்தப்பிரச்சினையில் இந்தியாவின் நிலையை ஆதரிக்கவில்லை.

ஆக, மேற்கூறிய பிரச்சினைகள் இந்திய இராணுவச்செலவைக்கூட்டு-வதற்கு அனுகூலமாகிறது. இதனால் இராணுவ வியாபாரத்தின்மூலம் கொள்ளைஅடிக்கும் இந்திய ஆளும் கும்பலுக்கு இலாபம் அதிகமாகிறது. மக்களை உள்நாட்டுப்பிரச்சனையிலிருந்து திசைதிருப்பவும் துணைபுரிகிறது.

1971-73 கால கட்டத்தில் இந்திய அரசின் மொத்த செலவினத்தில் கல்விக்குச்செலவிடப்பட்டது 7·6%, உடல் நலத்துறைக்கு 3 · 2%, ஆனால் இராணுவத்திற்கோ 12 · 2% செலவிடப்பட்டது. பாகிஸ்தானோ தனது மொத்த செலவினத்தில் 34 · 5% இராணுவத்திற்கு செலவிடுகிறது. 1972-73க்குப்பின் இருநாடுகளிலும் இராணுவச் செலவு அதிகரித்துள்ளது, பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாய்களை ஒவ்வொருவருடமும் இருநாடுகளும் இரா-ணுவச்செலவுக்குக் குறிப்பாகப் பன்னாட்டுக்கொள்ளைச் சக்திகளிடம் ஆயுதம் வாங்குவதற்கு செலவிடுகின்றன. இந்த இராணுவ வியாபாரத்தால் பன்-னாட்டுக் கொள்ளை சக்திகளும் இந்தியா மற்றும் பாகிஸ்தானில் உள்ள அரசின் பெரும்புள்ளிகளும் கொள்ளை லாபம் பெறுகின்றனர். வெளிநாட்டு வங்கிகளிலும் தொழில் வியாபார நிறுவனங்களிலும் இந்திய பாகிஸ்தான் புள்ளிகள் முதலீடு செய்ய இது துணைபுரிகிறது. மக்கள் நல செலவினங்களைக் குறைத்து இருநாடுகளிலும் ராணுவ வீரர்களை பலியாக்கி இந்த கொள்ளை நடைபெறுகிறது. எனவே இந்திய பாகிஸ்தான் பகைமை என்பது சர்வதேச இராணுவ வியாபாரத்திற்கு மிகவும் சாதகமாக இருக்கிறது. தேசத்திற்கு ஆபத்து என்று சொல்லி உள்நாட்டு எதிர்ப்புகளை ஒடுக்க முடிகிறது.

வளர்ந்த நாடுகளின் பொருளாதாரக் கொள்ளைக்கு இராணுவ வியா-பாரம் முக்கியமாக இருப்பதையும், சர்வதேச அரசியலில் தேசிய விரோதப் போக்கிற்கு மிகவும் தொடர்புடன் இருப்பதையும் பின்வரும் தகவல் விளக்குகிறது.

சர்வதேச அரங்கில் 'சனநாயக' உரிமைகளுக்கு ஓரளவு மதிப்பு தரும் இடமாக இங்கிலாந்து இருக்கிறது. இந்த பெருமையையும் இங்கிலாந்து தனது வியாபார பேரத்திற்கு உட்படுத்தும் மூலதனமாக வளர்த்து வருகிறது. அண்மையில் இங்கிலாந்தில் ஒரு குறிப்பிட்ட விமானத்தொழில் சந்தையின்றி தவித்தது. இந்தியா பல கோடி ரூபாய் மதிப்பில் விமானம் மற்றும் ஹெலி-

காப்டர்களை வாங்க இருந்தது. இந்தியாவுக்கும் இங்கிலாந்துக்கும் இடையே இது தொடர்பாக இராணுவ ஆயுத பேரம் நடைபெற்றது. இங்கிலாந்திலுள்ள காலிஸ்தான் போராளிகளை இந்தியா வசம் ஒப்புவிப்பது உள்ளிட்டு பல நடவடிக்கைகளை இங்கிலாந்து எடுத்தால்தான் இங்கிலாந்து விமானங்களை,ஹெலிகாப்டர்களை, இந்தியா வாங்குவதாக பேரம்முடிந்தது 'குறைந்த விலை' 'நல்ல பொருள்' போன்ற சாதாரன வியாபார அம்சங்கள் காற்றில் பறக்கவிடப்பட்டு மனித உரிமைகளை மிதித்து தேச விரோதப்-போக்கில் சர்வதேச இராணுவ வியாபாரம் நடப்பதற்கு இது சரியான உதாரனமாகும். இப்படி வாங்கப்பட்ட வெஸ்ட் லேண்ட் ஹெலிகாப்டர் விபத்துக்குள்ளாகி சிலர் இறந்தனர், இறந்த ஒருவரின் மனைவி வழக்கு தொடுத்துள்ளார். அதில் அமெரிக்காவில் இந்த ஹெலிகாப்டர்கள் லாயக்-கற்றவை என்று முடிவான தகவலும் உள்ளது ('இந்தியா டுடே' 31-10-88)

## சர்வதேச கள்ளப்பணம் / சந்தை :-

பொதுவாக சர்வதேசப்பொருளாதாரத்தில் சர்வதேசக்கள்ளப்பணம் மற்றும் கள்ளச்சந்தை முக்கிய அம்சமாகும். இதனைப்பின்வரும் தகவல் தெளிவுபடுத்தும்,

இந்தியா, பன்னாட்டுக்கொள்ளைக்கு உட்படுத்தப்பட்ட பெரிய சந்தை ஆகும். இந்நிறுவனங்கள் அடிக்கும் கொள்ளை சட்டப்பூர்வமாகவும் சட்டத்-திற்குத்தெரியாமலும் இந்தியாவிலிருந்து வெளியேறுகின்றன, இப்படி சர்வ-தேச அரங்கில் அரசுகளின் நெறிமுறைகளுக்கு மாறாகச் சேர்க்கப்படும் பணம் சர்வதேச கள்ளப்பணம் ஆகும். இதேபோல் அரசுகளின் நெறிமுறைகளுக்கு முரணாக வியாபாரத்திற்கு உட்படுத்தப்படும் சந்தை கள்ளச்சந்தை ஆகும். எடுத்துக்காட்டாக தென்னாப்பிரிக்க நிறவெறி அரசுக்கு உலகில் பலநாடுகள் பொருளாதாரத்தடை விதித்துள்ளன ஆனால் அந்நாட்டுக்குத் தேவைப்படும் ஆயுதங்கள் உள்ளிட்ட அனைத்து பொருட்களும் சர்வதேச கள்ளச்சந்தையில் கிடைக்கின்றன. இதேபோல் அரசுகள் தாம் வெளிப்படையாக ஒரு கொள்-கையை பிரகடனப்படுத்திக்கொண்டே அதற்கு எதிர்மாறாக நடைமுறையில் ஈடுபட இந்த சர்வதேசக் கள்ளச்சந்தை துணைபுரிகிறது.

எடுத்துக்காட்டாக ஈரானுக்கு ஆயுத விற்பனை செய்வதில்லை என்பது அமெரிக்காவின் பகிரங்கமான கொள்கையாகும். ஆனால் சில அமெரிக்க பணையக்கைதிகளை விடுவிக்க அமெரிக்கா ஈரானுடன் இரகசிய பேரம் செய்து கொண்டது. இதன்படி ஈரானுக்குத் தேவைப்படும் ஆயுதங்களை அமெரிக்கா ஈரானுக்கு விற்று, அதில் கிடைக்கும் லாபத்தை நிகரகுவாவில் உள்ள சோசலிச அரசை ஆயுதப்போராட்டத்தின் மூலம் கவிழ்க்க முயலும் கான்ரர் (Contra) படையினருக்கு அமெரிக்கா வழங்கியது. இந்த மோசடி சிலவருடங்களுக்குமுன் வெளியானது. சர்வதேச அரங்கில் அமெரிக்க அரசின் செயல்பாடு ''சொல் ஒன்று, செயல்வேறு'' என்று இருப்பது வெளிப்பட்டு

பெரும் அவமானமானது. அமெரிக்காவில் இதுதொடர்பாக நடக்கும் விசாரணை நாடகங்கள் சர்வதேச அரங்கில் ஏற்பட்டுள்ள அவமானத்தைதுடைக்க முயலும் கண்துடைப்புவேலையே ஆகும். உலகில் பெரும்பாலான அரசுகள் இப்போக்கினை கடைபிடிக்கின்றன.

## அரசு என்பது என்ன?

சர்வதேச அரசியல் சூதாட்டத்தில் சர்வதேச பொருளாதார சூதாட்டம் பின்னிப்பிணைந்துள்ளது தெளிவாகிறது. இந்த சூதாட்டத்தின் சக்திகளை 'அரசு' என்பதோடு நிறுத்திக்கொள்வது அரைகுறையான முயற்சியாகும். அரசு என்பது பல சுயநலன்களின் தொகுப்பாகும். **(Combination of Vested Interests)** நீதி, நிர்வாகம், இராணுவம், கலாச்சாரம் போன்று பலதுறைகள் மூலம் கண்ணுக்குத்தெரிந்தும், தெரியாமலும் ஒடுக்கலை நடைமுறைப்படுத்தி, அரசு சக்தியுடன் விளங்குகிறது. அரசு என்ற தொகுப்பில் உள்ள நலன்களின் கூட்டுசக்தியே அரசு சக்தியாகும். மேற்சொன்ன அரசு தொடர்புடைய துறைகளில் இந்த நலன்களின் சக்திகள் இருக்கின்றன. இந்த நலன்களுக்கிடையே தொகு நிலைத்தன்மை **(Resultant Stabilidy)** இல்லாது போனால் அரசு மாற்றப்பட்டு தொகு நிலைத்தன்மைக்கு ஏற்று அரசு உருவாகிறது. அரசு என்ற தொகுப்பில் உள்ள நலன்களுக்கு இடையே உள்ள உறவுகளும் நேர்தன்மை ( + ) எதிர்தன்மை ( — ) என்றவாறு இயக்கத்தன்மையில் **(Dynamic)** மாறிக்கொண்டே இருக்கும்.

இதனைப்புரிந்துகொள்ள இந்திய அரசையே எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம். இந்திய அரசு என்பது பார்ப்பனர்கள், இந்திய தேசிய முதலாளிகள், பன்னாட்டுக் கொள்ளை சக்திகள் என்ற மூன்று பெரும் பிரிவுகளின் நலன்களின் தொகுப்பு ஆகும். இதில் பார்ப்பனர்களுக்கிடையில் அய்யங்கார் - அய்யர், காஷ்மீர் பார்ப்பனர் மற்ற பார்ப்பனர், சோவியத் சார்பு பார்ப்பனர் - அமெரிக்க சார்பு பாரப்பனர், சோவியத் சார்பு பார்ப்பனர் - சீன சார்பு பார்ப்பனர் என்று எதிர்த்தன்மைஉறவு கொண்ட பிரிவு நலன்கள் உண்டு. இந்தியாவில் உள்ள அமெரிக்க சார்பு பார்ப்பனர்களில் (சேர்) சோவியத் சர்ர்பு பார்ப்பனர்களில் (ஜி. பார்த்தசாரதி), சீன சார்பு பார்ப்பனர்களில் (சுப்பிரமணிய சுவாமி) ஆகிய மூவரும் சங்கராச்சாரி என்று வரும்போது ஒன்றுபட்டு நிற்கிறார்கள். இந்திய தேசிய முதலாளிகளுக்குள் சர்வதேச பின்னணியுடன் கூடிய வியாபாரச்சண்டைகள் உண்டு. அண்மையில் 'ரிலையன்ஸ் ஊழல்' என்ற பெயரில் அம்பானிக்கும். கோயங்காவிற்கும் நடந்துவரும் சண்டை இதற்கு சரியானஎடுத்துக்காட்டாகும், அமெரிக்கசார்பு இதழ்கள் கோயங்கா பக்கம் வரிந்துகட்டி நின்று ஊழலை வெளிப்படுத்தும் உத்தமர்களாகக் காட்சி அளித்ததும் சோவியத்சார்பு இதழ்கள் '' உப்புக்கண்டம் பறிகொடுத்த பாப்பாத்தி'' போல இருந்ததும் இந்த சண்டையில் சர்வதேசப் பின்னணியை வெளிப்படுத்துகிறது.

அமெரிக்க சார்பு நாடுகளிடையே பங்காளி சண்டைகள் உண்டு என்பதை ஏற்கனவே பார்த்தோம். அமெரிக்காவும் பிரான்சும் இதற்கு சரியான எடுத்துக்காட்டுகளாகும். இப்படி சர்வதேச அரங்கில் உள்ள அரசியல்-பொருளாதார மோதல்கள் இந்திய தேசிய அரசியல் பொருளாதார அரங்குகளிலும் பிரதிபலிக்கும்.

எனவே பார்ப்பனர்கள், இந்திய தேசிய முதலாளிகள், பன்னாட்டுக் கொள்ளை சக்திகள் என்ற மூன்று பெரும் பிரிவு நலன்களில் ஒவ்வொரு பெரும் பிரிவு நலன்களுக்குள் உள்ள சிறிய பிரிவு நலன்களுக்கிடையேயும் மூன்று பெரும் பிரிவ நலன்களுக்கு இடையேயும் ஒன்றுக்கொன்று தொடர்புடைய வகையில் நட்பு மற்றும் பகை முரண்பாடுகள் இயக்கத்தன்மையில் இருந்து கொண்டிருக்கும். இதனை பொறுத்து இந்நலன்களின் தொகுநிலைத் தன்மை இருக்கும். இந்தியாவில் உள்ள 'அரசு' என்ற அமைப்பின் இயக்கத்தன்மை இதைப்பொறுத்தே இருக்கும். சனதா அரசு சோவியத்து தூண்டுதலினால் கவிழ்க்கப் பட்டு பின் இந்திரா அரசு ஏற்பட்டும், இந்திரா கொலை செய்யப்பட்டு ராஜிவ் காந்தி அரசு பொறுப்பு ஏற்றதும் தொடர்பாக ஏற்கனவே பார்த்த விவரங்களை மேற்சொன்னதுடன் பொருத்திப் பார்த்தால் 'அரசு' பற்றிய உண்மை இன்னும் தெளிவாகும்.

'அரசு' என்பது பல சுயநலன்களின் தொகுப்பு என்பதைப் பார்த்தோம். இந்த சுயநலன்கள் அரசுஎன்ற அமைப்பைப் பயன்படுத்திக்கொண்டே அதனை கடந்தும் செல்ல ஆரம்பித்துவிட்டன. தமது தேசத்தைக் கடந்து மற்ற தேசங்களைக் கொள்ளை அடிக்கும் தேசங்கடந்த நிறுவனம்(Transnational) என்று முதலில் துவங்கிய போக்கு பன்னாட்டு நிறுவனம் (Multi National)என்ற நிலையை அடைந்து விட்டது. இந்தப் போக்கில் அமெரிக்காவில் உள்ள முதலாளிக் கும்பல், பிரான்சில் உள்ள முதலாளிக் கும்பல், ஜப்பானிலுள்ள முதலாளிக்கும்பல் போன்றவை பன்னாட்டு நிறுவன அமைப்பாக ஒன்று சேர்ந்து சர்வதேச பொருளாதாரக் கொள்ளையைச் செய்யலாம்.

உலகில் பல அரசுகள் உள்ளன. ஒவ்வொரு அரசும் சுய நலன்களின் தொகுப்பு ஆகும். அரசு என்ற அமைப்பிலுள்ள சுயநலன்களில் ஒன்றோ அல்லது சிலவோ மற்ற அரசு அல்லது அரசுகளில் உள்ள ஒன்றோ அல்லது அதற்கு மேற்பட்ட நலன்களுடன் தொடர்பு கொள்கையில் இத்தொடர்பின் வலிமை ஒரு குறிப்பிட்ட வளர்ச்சிக் கட்டத்தை அடைந்த பின் அரசுக்கு அப்பாற்பட்ட சக்திகளாக அரசுகளின் போக்குகளின் மீது செல்வாக்கு சக்திகளாக வளர்கின்றன. சர்வதேசக் கள்ள பணம், கள்ளச் சந்தை, இராணுவ போதைப் பொருள் வியாபாரம் போன்றவை இந்த போக்குகளில் வளர்ந்து வருகின்றன. இத்தகைய சர்வதேசப் பிற்போக்குகளுக்கு வலிவு சேர்க்கும் சக்தியாகப் பார்ப்பனியம் சர்வதேச அரங்கில் வளர்ந்து வருகிறது.

'அரே ராமா அரே கிருஷ்ணா' என்ற அமைப்பு, சி. ஐ. ஏ. உளவு வேலைகளுக்குத் துணைபுரியவும், போதைப் பொருள்களை கடத்தவும், சர்வ

தேசக் கள்ளப் பணம் மற்றும் கள்ளச் சந்தையில் முக்கிய பங்கு வகித்தும் வருகிறது.

சோவியத்நாடு இராமாயண, மகாபாரத ஏற்றுமதியில் சிக்கி அவை- பிரபலமான நாடகங்களர்கும் அளவுக்கு பண்பாட்டில் சீரழிந்து வருகிறது.

இத்துடன் சோவியத் நாட்டில் ஏகாதிபத்திய பண்பாடுகள் நுழைந்து வளர்ந்து வருவதையும், சோவியத் நாடு மேற்கத்திய பன்னாட்டு நிறுவனங்- களுடன் கூட்டுத் தொழில் வியர்பர்ரம் செய்ய முனவந்துள்ளதையும் இணைத்துப்பார்க்கவேண்டும்.

இதேபோல் சீனாவும் இராமாயணம். மகாபாரதம். பகவத்கீதைஏற்று மதிகளுக்கு உள்ளாகிவிட்டது. அமெரிக்கப்பன்னாட்டு நிறுவனங்களை அனு- மதித்து முதலாளித்துவ முறைகளை நோக்கிச் சீனா சோசலிசத்திலிருந்து பின்னோக்கி செல்கிறது. சுப்பிரமணிய சுவாமி என்ற பார்ப்பனர் அமெரிக்க சீனக்கூட்டு நலன்களைப் பிரதி பலிக்கும் வகையில் இந்தியாவில் செயல் படுகிறார்.

அமெரிக்க சார்பு, சோவியத் சார்பு, சீன சார்பு என்ற மும்முனை சர்வதேச அரங்கில் பாரப்பனீயம் வேகமாக வளர்ந்துவருகிறது. மகரிஹி மகேஹ்யோகி, சந்திரசாமி, சங்கராச்சாரிகள் இந்த சர்வதேசப்பார்ப்பனீய வளர்ச்சிக்குத் 'தொண்டு' புரிந்துவருகிறர்கள். எந்த தேசத்திற்கும் சொந்த மில்லாத பார்ப்பனாகள் இந்த வளர்ச்சிக்கேற்றவாறு சர்வதேசங்களுக்குக் குடி பெயர்கிறார்கள். 'அரசு' என்ற அமைப்புக்கு அப்பாற்பட்டு சர்வதேச பெர்ருளாதார சக்திகள் வளர்ந்துவருவதும், பார்ப்பனீயம் சர்வதேச சக்தி- யாக வளர்ந்து வருவதும் வருங்காலத்தில் சர்வதேச அரங்கில் முக்கிய பிரதி- பலிப்புகளை ஏற்படுத்தும். உளவு வேலை, போதை பொருள் வியாபாரம் கள்ளச்சந்தை, உரிமை போராட்ட உணர்வுகளை மழுங்கடித்தல் போன்ற- வற்றிற்கு சர்வதேச அரங்கில் பார்ப்பனீயம் ஏற்ற அமைப்பாக வளர்ந்து வருகிறது.

இந்தியத்துணைக் கண்டத்தில் காலனிகாலத்திற்கு முன் பார்ப்பனீய உற்பத்தி முறையை எந்தவித மாற்றமும் இன்றி தேக்கமுற்று நாற்றமெடுக்கச் செய்தது பார்ப்பனீயம். உற்பத்தி முறையில் சாதியின் செல்வாக்கு மற்றும் உபரி உற்பத்தி நாசம் 'முடக்கம் இதன் சிறப்பு அம்சங்களாகும். ஆங்கிலேயர் வந்தபின் காலனியத்தின் நுழைவு இந்தப்பார்ப்பனீய உற்பத்தி முறையைச் சிதைத்தது. அதன்பின் பார்ப்பனீயச் சுரண்டலுக்கும் காலனியச் சுரண்- டலுக்கும் இடையில் ஊடலும் கூடலும் மாறிமாறி ஏற்பட்டது 1947-ஆகஸ்டு 15-க்குப்பின் ஆட்சி அதிகாரம் பார்ப்பனீய இந்திய தேசியக் கூட்டுக்கும் பனியாவிடம் ஒப்படைக்கப்பட்டது, பன்னாட்டுக் கொள்ளைக்குக் கதவு திறந்து- விடப்பட்டது.

பன்னாட்டு கொள்ளைக்கு இந்தியத்துணைக்கண்டத்தில் உள்ள தேசங்கள் இரையாகி உள்ளன. இந்தக்கொள்ளைக்கு சாதகம் செய்தல், வெடித்துக் கிளம்பும் உரிமைபோராட்டங்களுக்குச் சில எலும்புத்துண்டுகளைப் போட்டு மழுங்கடித்தல் என்ற அடிப்படையில் இங்கு பொருளாதாரக்கொள்ளை நடைமுறைப்படுத்தப்படுகிறது.

இந்தக் கொள்ளைக்கு ஏற்றவகையில் தேசங்களிலுள்ள கனிவளங்களைப் பயன்படுத்துவது அல்லது முடக்கி வைப்பது மற்றும் சுற்றுபுறச் சூழலைக் கெடுப்பது ஆகியவைகள் அமுலில் உள்ளன. இதில் பார்ப்பனீயத்தின் பங்கு மிகவும் அதிகமாகும். சர்வதேசப்பொருளாதாரச் சுரண்டல் கிட்டத்தட்ட இந்தியத் துணைக்கண்டப் பொருளாதாரக் கொள்ளையை ஒத்துச்சிற்சில வித்தியாசங்களுடன் இருக்கிறது.

## வளரும் நாடுகள்-வளர்ந்த நாடுகள் :

உலகிலுள்ள நாடுகளை வளரும் நாடுகள் மற்றும் வளர்ந்த நாடுகள் என்று இரு பெரும் பிரிவாக பிரித்து அழைக்கின்றனர். அமெரிக்கா, ஜப்பான் பிரான்ஸ், இங்கிலாந்து, மேற்கு ஜெர்மனி என்று உயர்ந்த தொழில் நுட்பமடைந்து உலகில் மற்ற நாடுகளைச்சுரண்டி வரும் நாடுகள் வளர்ந்தநாடுகள் என்றழைக்கப்படுகின்றன. இந்த சுரண்டலால் பாதிக்கப்பட்ட நாடுகள் வளரும் நாடுகள் என்றழைக்கப்படுகின்றன. இது தவிர உலகை முதலாம் உலக, இரண்டாம் உலக, மூன்றாம் உலக நாடுகள் என்று மூன்று பிரிவுகளாகப் பிரித்து அழைக்கின்றனர். இது தவிர நான்காம் உலக, ஐந்தாம் உலக நாடுகள் என்று பிரிக்க முயற்சி செய்பவர்களும் உண்டு.

ஆனால் சர்வதேச அரங்குகளில் அரசியல், பொருளாதார நிலைப்பாடுகளும் மாற்றங்களும் இப்படிப்பட்ட பிரிவுகளை அர்த்தமற்றதாக ஆக்கி வருகின்றன. ஒருநாடு மற்றொரு நாட்டுடன் தொழில் வியாபார தொடர்புகள் மேற்கொண்டு சுரண்டி வருகிறது என்றால் சுரண்டப்படும்நாட்டிலிருந்து சுரண்டும் நாட்டிற்கு உபரிஉற்பத்தித் தொகு குவிப்பு மற்றும் இயற்கை வளங்கள் வெளியேற்றம் நடைபெறுகிறது என்று பொருளாகும். இந்த வளர்ந்த நாடுகள் என்று சொல்லப்படும் நாடுகளுக்குள்ளேயும் பாதக-சாதக நிலையிலுள்ள நாடுகள் உண்டு. வளரும் நாடுகளுக்குள்ளேயும் இந்த நிலைமை உண்டு. அல்பேனியாவைத் தவிர்த்து சோசலிச நாடு என்ற இலக்கணத்திற்கு உட்படும் நாடு எதுவும் கிடையாது. சர்வதேச அரசியல் பொருளாதாரத்தில் பெரும் அளவு ஒதுங்கி இருக்கும் நாடு அல்பேனியா ஆகும். நாத்திகத்தை அரசின் கொள்கையாக பிரகடனப்படுத்திய ஒரேநாடு அல்பேனியா ஆகும் 'சோசலிச'த்திலிருந்து 'விடுதலை' பெற்றுவரும் நாடுகள் அல்பேனியா அளவிற்கு நாத்திக கொள்கையை கடைபிடிக்காத நாடுகள் ஆகும்.

தற்போது தொலைக்காட்சி, வானொலி மூலம் அண்மையில் உள்ள நாடுகளின் நிகழ்ச்சிகள் அல்பேனியா இளைஞர் சமுதாயத்தைச் சீரழியச்

செய்து வருகின்றன. இவ்வாறு பிற்போக்குப் பண்பாட்டு நோயில் சிக்கி வரும் அல்பேனியா தனது தனித்தன்மையை இழந்து சர்வதேச அரசியல் பொருளாதார சூதாட்டத்தில் சிக்க இருக்கும் நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளது,

இன்றைய தினம் சர்வதேச அரங்குகளில் பொருளாதாரச்சீர்குலைவுகளும் அதன் காரணமாக அரசியல் சீர்குலைவுகளும் வரும் வருடங்களில் ஏற்படப் போகிறது என்பதற்கு அறிகுறிகள் தோன்றத் துவங்கியுள்ளன. அய்.எம்.எப். உலக வங்கி உள்ளிட்ட பன்னாட்டு நிதி நிறுவன வட்டி வலையில் சிக்கியுள்ள பல நாடுகள் தடுமாற ஆரம்பித்துள்ளன. ஒரு சில நாடுகளில் ஏற்றுமதி வருமானம் முழுவதையும் பயன்படுத்தி வட்டி கட்ட முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

'சிலி' அர்ஜெண்டைனா நாடுகள் வட்டி கட்ட முடியாது என்று அறிவித்து விட்டன. இந்த சர்வதேசக் கடன் பிரச்சினை சர்வதேசப் பொருளாதாரத்தையே சீர்குலைய செய்துவிடும் என்ற அபாயத்தை ஏற்படுத்தியுள்ளது முன்னேறிய நாடுகளுக்கிடையே வியாபாரப் பகைமை வளர்ந்து வருகிறது. அமெரிக்காவிற்கும், ஜப்பானிற்கும் இடையே வியாபாரப் போர் துவங்கி விட்டது. ஜப்பானியப் பொருட்களை அமெரிக்காவில் விற்பதற்கு அமெரிக்கா கடும் தடைகளை ஏற்படுத்தியுள்ளது.

சர்வதேச வியாபாரத்தில் அதிக உபரியை கைவசம் கொண்ட நாடுகளாக ஜப்பானும், மேற்கு ஜெர்மனியும் வளர்ந்து வருகிறது. சோவியத் நாடு தனது சோசலிச முகத் திரையைப் பகிரங்கமாகக் கழற்றி எறிந்து பன்னாட்டு நிறுவனங்களுடன் கூட்டுத் தொழில் வியாபாரம் செய்ய முன்வந்துவிட்டது. சீனாவிலும் இதே நிலைதான் அரசு என்ற அமைப்பிற்கு அப்பாற்பட்டு பன்னாட்டுக் கூட்டுச் சக்திகளும், பார்ப்பனீயமும் வளர்ந்து வருகின்றன.

சர்வதேச வியாபாரத்தில் ஆதிக்க நிலையில் ஜப்பான் முதல் இடத்திலும் மேற்கு ஜெர்மனி இரண்டாவது இடத்திலும் உள்ளன. இரண்டாம் உலக யுத்த முடிவில் தனது இராணுவ பட்ஜெட்டை மிகக் குறைவாக வைத்திருக்கும்படியான நெருக்கடியில் ஜப்பான் வைக்கப்பட்டது. இப்போது ஜப்பான் தனது இராணுவச் செலவை அதிகரிக்கத் தொடங்கியுள்ளது. தமது சர்வதேச அரசியல் வலிமைக்கு ஏற்ற அளவு பொருளாதார வலிமையை அமெரிக்காவும் சோவியத் நாடும் இழந்து வருகின்றன. இதன் பிரதிபலிப்பு இந்த இரு சக்திகளின் சர்வதேச அரசியல் வலிமை குறைவதில் தென்படத் துவங்கிவிட்டது. இதனைக் கீழ்வரும் போக்குகள் தெளிவுபடுத்துகின்றன.

1987-88 காலக் கட்டத்தில் ஈரான்-ஈராக் போரில் ஈராக்கின் கப்பல் போக்குவரத்தை தடுக்க ஈரான் அருகாமைக் கடலில் கன்னி வெடிகளை கடலில் மிதக்கச் செய்தது. இது அமெரிக்காவின் எண்ணெய் கப்பல் போக்கு

வரத்தை பாதித்ததுடன், அமெரிக்க எஜமானத் தன்மைக்கு சவாலாக அமைந்தது. எனவே அமெரிக்கா தனது கடல் கண்ணி வெடிகளை அகற்றும் கப்பல்களை அப்பகுதிக்கு அனுப்பியதோடு தமது நட்பு அய்ரோப்பிய நாடுகளைத் தத்தம் கப்பல்களை அனுப்புமாறு கோரியது. பிரான்ஸ், இங்கிலாந்து உள்ளிட்ட நாடுகள் அனுப்பத் தயங்கின. பின் மிகவும் வலிந்து கோரியே அமெரிக்கா இந்நாடுகளின் கப்பல்களை வரச் செய்தது. இது சர்வதேச அரங்கில் அமெரிக்காவின் மேலாண்மை குறைந்து வருவதை வெளிப்படுத்தியது.

சோவியத் நாட்டின் செல்வாக்கிலுள்ள கிழக்கு ஜெர்மனி அரசு அதிபர் அமெரிக்க செல்வாக்கிலுள்ள மேற்கு ஜெர்மனி அரசு அதிபர் பரிமாற்ற விஜயம் செய்யத் தொடங்கினர். மேற்கு ஜெர்மனி அதிபர் சோவியத் நாட்டிற்குச் சென்றார். கிழக்கு-மேற்கு ஜெர்மனிகள் ஒன்று சேரப் போவது உறுதியாகி விட்டது.

இதுவரை அமெரிக்க-சோவியத் நாடு மோதல்களின் பிரதிபலிப்பாக ஆப்கானிஸ்தான், கம்பூச்சியா போன்ற பல பிரச்சனைகள் இருந்தன. இப்பிரச்சனைகளை தீர்ப்பதில் தற்போது மோதலில் உள்ள பிரிவினரை விட, பின்னிருந்து இயக்கிய அமெரிக்காவும், சோவியத் நாடும் அதிக ஆர்வம் கொண்டு செயல்படுகின்றன. ஆப்கானிஸ்தான் பிரச்சினை, நடுத்தொலைவு ஏவுகணை அகற்றல் பிரச்சினை போன்றவற்றில் ஏற்பட்டுவரும் 'சமாதானங்கள்' இதனை வெளிப்படுத்துகின்றன. சர்வதேசப் பொருளாதாரக் கொள்ளையில் பங்குபெற சோவியத் நாடும், சினாவும் அய். எம். எப். நிறுவன கூட்டுத் தொடர்பிலும் செயல்பட ஆரம்பித்துவிட்டது. இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை இரண்டும் ஆதரித்தது இந்த வகையில்தான். இனி கம்பூச்சியா பிரச்சனை உள்ளிட்டு அமெரிக்கா-சோவியத் நாடு பகைமையைப் பின்னணி ஆதரவாகக் கொண்ட பிரச்சினைகள் சுமூகமாகப் போகின்றன அல்லது வலிமை குறையப் போகின்றன. சோவியத் நாட்டில் கோர்பசேவ் அறிமுகப் படுத்திய 'திறந்தவெளி' (glassnat) மற்றும் 'மறுசீரமைப்பு' (Perestroika) போன்றவற்றையும், போலந்து, ருமேனியா உள்ளிட்டு சோவியத் நாட்டின் செல்வாக்கில் இருந்த நர்டுகள் 'சோசலிசத்திலிருந்து' வேகமாக 'விடுதலை' பெற்று வருவதையும் இந்தப் பின்னணியில் புரிந்துகொள்ள வேண்டும்.

இதற்கிடையில் சர்வதேச வியாபாரத்தில் ஆதிக்கச் சக்திகளாக உள்ள ஜப்பானும் மேற்கு ஜெர்மனியும் சில காலம் சர்வதேச அரசியலில் இப்போது இருப்பதுபோல் இருந்து அதன்பின்தான் பெரிய சக்திகளாக வெளிப்பட முடியும். 'சோசலிச' அய்ரோப்பிய நாடுகளைத் தவிர்த்த இதர அய்ரோப்பிய நாடுகள் அய்ரோப்பிய பாராளுமன்றம், பொருளாதார கூட்டமைப்பு ஏற்படுத்தி தனிப்பெரும் சக்தியாக வளர்ந்து வருகிறார்கள். 'சோசலிச'த்தில் இருந்து விடுதலை பெற்றுவரும் போலந்து, ருமேனியா போன்ற நாடுகள் எதிர்காலத்தில் இந்த அமைப்பில் சேர வாய்ப்பு உள்ளது.

சர்வதேசப் பொருளாதாரமோ இன்னும் சில வருடங்களில் மிகப்பெரும் சீர்குலைவை நிச்சயமாக எதிர்நோக்கியுள்ளது. இவற்றின் தொகுவிளைவாக புதியபாணி சர்வதேச அரசியல் பொருளாதார சூதாட்டம் இன்னும் சில வருடங்களில் அரங்கேற உள்ளது. இதன் விளைவாய் இதுவரை சர்வதேச அரங்கில் தேச விடுதலை முயற்சிகளுக்கு கிடைத்து வந்த ஆதரவிலும், எதிர்ப்பிலும் மாற்றங்கள் ஏற்பட வாய்ப்புண்டு.

அதே நேரத்தில் தேச விடுதலை முயற்சிகளைச் சர்வதேச சூழ்ச்சி சக்திகளிடமிருந்து மீட்கும் முயற்சிக்கு மிகவும் சாதகமான காலக்கட்டம் இதுவாகும்.

இந்தியாவைப் பொறுத்தமட்டில் தேச விடுதலை முயற்சிகளுக்கு ஆதரவு எதிர்ப்பு ஆகிய இரண்டிற்கும் அரசியல் இயக்கங்கள், மனித உரிமை இயக்கங்கள், பெரும்பாலான மார்க்சிய-லெனினியக் குழுக்கள் ஆகிய அனைத்திற்கும் சர்வதேச ஆதிக்கச் சக்திகளிடமிருந்து உதவிகள் கிடைத்து வந்துள்ளன.

இந்தியா என்ற பெரிய சந்தை அமைப்பு நொறுங்கக் கூடாது, நொறுங்கினாலும் உண்டாகும் நாடுகள் தமது ஏகபோகக் கொள்ளைக்குள் வர வேண்டும். இதற்குப் பாதகமானது பார்ப்பன எதிர்ப்பு நோக்கிலான பெரியாரியல் வழி தேச விடுதலைப் போராட்டம். இத்தகைய புரட்சியைத் தடுக்க அரிய வழி தனித் தனிப் பிரச்சனைகளை மட்டுமே முன்னெடுத்து புரட்சி ஆற்றலை விரயப்படுத்துவது. எனவேதான் மேற்சொன்ன உதவிகள் சர்வதேச ஆதிக்கச் சக்திகளால் வழங்கப்படுகின்றன.

நிறைய கனிவளங்கள், மலிவான உடல்-மூளை உழைப்பு, பெரிய சந்தை ஆகிய காரணங்களால் இந்தியா சர்வதேசப் பொருளாதாரக் கொள்ளைக்கான 'கவர்ச்சிக் கன்னி'யாக இருக்கிறது. இந்தக் கொள்ளையில் தமது பங்கைப் பாதுகாக்கவும், வளர்க்கவும் மேற்சொன்ன 'உதவி' நடவடிக்கைகளில் அமெரிக்கா, சோவியத் நாடு மட்டுமின்றி இனிமேல் ஜப்பானும், மேற்கு ஜெர்மனியும் தீவிரமாக ஈடுபடும். இதில் அமெரிக்காவும், சோவியத் நாடும் ஏற்கனவே நன்கு காலூன்றி விட்டபடியால் அரசு எதிர்ப்பு முயற்சிகளுக்கும் 'உதவி' அளித்து வருகின்றன. அமெரிக்க சார்பாக இதுவரை இருந்து வந்துள்ள நாடான மேற்கு ஜெர்மனி இப்போக்குகளில் ஏற்கனவே பங்கேற்றுள்ள நாடாகும்.

மாறாக ஜப்பான் நன்கு காலூன்றிய பிறகுதான் அரசு எதிர்ப்பு முயற்சிகளுக்கு ஆதரவளிக்கும் படலம் தொடங்கும். இந்த ஆதரவு-எதிர்ப்பு இரண்டிற்குமான 'உதவி'களின் பின்னணியில் உள்ள நலன்கள் இங்குள்ள மக்கள் நலன்களுக்கு எதிரானது ஆகும்.

இந்தியத் துணைக் கண்டத்தில் சர்வதேசப் பொருளாதாரக் கொள்ளையின் புரவலர்களாகவும், தரகர்களாகவும் பார்ப்பனர்கள், இந்திய தேசிய முதலாளிகள் ஆகியோர் உள்ளனர். சர்வதேசக் கொள்ளை சக்திகளின் நேச

சக்தியான பார்ப்பனீயம் வளர்ந்து வருவதையும் இதற்கேற்றார்போல் பார்ப்பனர்கள் வெளிநாடுகளில் குடியேறி வருவதையும் ஏற்கனவே பார்த்தோம். பொது உரிமை-பொது உடைமை நோக்கில் உலகளாவிய மனிதநேயநோக்கில் பார்ப்பன எதிர்ப்போடு தேச விடுதலையை முன்னெடுக்கும் பெரியாரியல் தத்துவம் மட்டுமே உலக அரங்கில் பார்ப்பனீயத்தை எதிர்க்கும் வல்லமை பொருந்தியது மட்டுமின்றி, இந்தியாவில் குறிப்பாகத் தமிழ்நாட்டில் பார்ப்பனீயத்தின் துணையுடன் பன்னாட்டுக் கொள்ளை சக்திகளின் ஊடுருவலை முறியடிக்கும் திறன் கொண்டதாகும். பெரியாரியலிருந்து வழுவுதல், நழுவுதல் (எடுத்துக்காட்டாக ஆனைமுத்துவின் 'அகில இந்திய' போதைபோல்) போன்ற காரியங்கள் மட்டுமே சர்வதேசக் கொள்ளைச் சக்திகள் பெரியார் பெயர் சொல்லிக் கொண்டு இருக்கும் இயக்கத்தினுள் ஊடுருவ வாய்ப்பை ஏற்படுத்தும். மாறாக பெரியாரியலில் உறுதியாக இருப்பது இப்பாதகங்களை முறியடிப்பதோடு, சர்வதேச ஆதிக்க சக்திகள்-பார்ப்பனீயக் கூட்டைச் சர்வதேச அரங்கில் முறியடிக்கவும் துணைபுரியும்.

இன்று உலகெங்கிலும் பல பகுதிகளில் தத்தம் தேச விடுதலைக்காக ஆயுதம் ஏந்தி போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. பாலஸ்தீனம், தென் ஆப்பிரிக்கா, மேற்கு சகாரா, சூடான், ஸ்பெயின், லத்தீன் அமெரிக்காவில் உள்ள பல நாடுகள், தெற்காசியாவில் நாகாலாந்து, மிசோராம், திரிபுரா காஷ்மீர், பஞ்சாப், அஸ்ஸாம், தமிழ் ஈழம், பாகிஸ்தானில் உள்ள 'சிந்து' போன்ற பகுதிகளில் ஆயுதப் போராட்டங்கள் வெவ்வேறு அளவு தீவிரக் கட்டங்களில் நடைபெற்று வருகின்றன. தமிழ் ஈழ விடுதலைப் போராட்டம் தமிழ்நாடு இளைஞர்கள் மனதில் ஒரு புதுவகை எழுச்சியை ஏற்படுத்தி வருகின்றது.

தமிழ்நாடு வஞ்சிக்கப்படுவது பற்றிய உண்மைகள் அனைத்தும் அல்லது சிலது மட்டுமே தெரிவது இந்தஎழுச்சிக்கு அடித்தளமாக உள்ளது. மொழி, பண்பாடு, பொருளாதாரம் போன்ற பல துறைகளிலும் தமிழ்நாடு வஞ்சிக்கப்பட்டு உள்ளது. சிங்கப்பூரில் தமிழுக்கு உள்ள உரிமை கூட தமிழ்நாட்டில் தமிழுக்கு கிடையாது. அதுபோல் இலங்கையில் தமிழுக்கு உள்ள உரிமைகூட தமிழ்நாட்டில் தமிழுக்கு கிடையாது. தமிழ்நாட்டு ஆலயங்களில் தமிழிலும் வழிபடலாம் என்ற தமிழ்நாடு அரசின் ஆணையைக் கூட நடைமுறைப்படுத்த முடியா வண்ணம் தமிழ்நாட்டுப் பார்ப்பனர்கள் உச்ச நீதி மன்றத்தில் தடை உத்தரவு பெற்றுள்ளனர். தமிழ்நாட்டில் உள்ள மத்திய அரசு துறைகளில் தமிழ் புறக்கணிக்கப்பட்டு இருக்கிறது.

கலாச்சாரத் துறையில் பார்ப்பனீயக் கலாச்சாரமே ஆதிக்கம் வகிக்கிறது; தமிழர்களில் படித்தவரும், பதவிக்காரர்களும், பணக்காரர்களும் இந்த பார்ப்பனக் கலாச்சாரத்தை தூக்கிப்பிடிக்கும் விபீஷணர்களாக இருக்கிறார்கள்.

பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி உள்ளிட்ட தகவல் தொடர்பு சாதனங்கள் அனைத்தும் பார்ப்பனக் கலாச்சாரத்தையே தூக்கிப்பிடித்து உள்ளன. வெள்ளைக்காரன் காலத்தில் பார்ப்பனீயக் கலாச்சாரத்துடன்

காலனியக் கலாச்சாரம் ''நட்பு முரண்பாடர்க'' வளர்ந்து வந்தது. இப்பொழுது ஏகாதிபத்திய கலாச்சாரம் சேர்ந்து வளர்ந்து வருகிறது. டிஸ்கோர் நடனம் ஆடிக் கொண்டே பார்ப்பனீயக் கலாச்சாரத்திற்கு கட்டுப்பட்டு இருக்கும் இளைஞர்களின் செயல்பாடு மேற்சொன்ன நிலையின் சமுதாய வெளிப்பாடாகும்.

பொருளாதாரத் துறையில் விவசாயம், மின்சாரம், போக்குவரத்து, வியாபாரம், தொழில் உள்ளிட்ட அனைத்திலும் தமிழ்நாடு கடுமையாக வஞ்சிக்கப்பட்டுள்ளது. இந்தக் கொடுமைக்கு எடுத்துக்காட்டு சேது சமுத்திர திட்டமாகும். இத்திட்டம் செயல்படுமானால் தூத்துக்குடி துறைமுகம் உலகத் துறைமுகமாகி தென் தமிழ்நாட்டின் தொழில் வியாபார வளர்ச்சிக்கு உந்து சக்தியாக அமையும். இதனால் கொழும்பு துறைமுகத்தின் முக்கியத்துவம் பாதிக்கப்படும் என்று இலங்கை சிங்கள இனவெறி அரசு புலம்புகிறது. இந்த சிங்கள இனவெறி அரசை திருப்தி செய்யவே டில்லி பார்ப்பன அரசு சேது சமுத்திர திட்டத்தை குப்பைத் தொட்டியில் போட்டுள்ளது. அதே போல் சிங்கள இனவெறி அரசை திருப்தி செய்யவே தமிழ்நாட்டுக்குச் சொந்தமான கச்சத்தீவு தமிழ்நாடு மக்களின் ஒப்புதல் இன்றி இலங்கைக்கு டில்லி பார்ப்பன அரசு தார்ரை வார்த்துக் கொடுத்துள்ளது. தமிழ்நாட்டு மீனவர்களின் மீன்பிடித் தொழிலுக்கு ஆபத்தையும் தோற்றுவித்துள்ளது.

தமிழ்நாட்டில் இருக்கின்ற பெரும் தொழில் அதிபர்கள் பார்ப்பனர்களும் பனியா, மார்வாடி போன்ற இந்திய தேசிய முதலாளி கூட்டமுமேயாகும். தமிழ்நாட்டில் தப்பித்தவறி துவங்கப்படும் பெரும் தொழில்கள் இக்கும்பல்களாலேயே துவங்கப்படுகின்றன என்பது வெட்கக் கேடான உண்மை ஆகும்.

சமஸ்கிருதத்திற்கு முதலிடம் கொடுத்து தமிழர்களை அடிமைப்படுத்தும் ஆரியக் கலாச்சாரத்தை தூக்கிப்பிடிக்கும் பார்ப்பனர்களை தமிழ் தேசிய இனமாக சில மார்க்சிய-லெனினிய குழுக்கள் கருதுவது அபாயகரமும், பாதகமும் நிறைந்த பார்ப்பன சார்பு சதியாகும். இச்சதிக்கு சர்வதேச பின்னணி இருந்தால் ஆச்சரியமில்லை

மார்க்சிய-லெனினிய தேசிய இனத்திற்கான வரையறையில் கூட மொழி கலாச்சாரம் ஆகியவை முக்கிய கூறுகளின் வரிசையில் இடம் பெற்றுள்ளன. எனவே பார்ப்பனர்கள் தமிழ் தேசிய இன-மார்க்சிய-லெனினிய் வரையறைக்குள் வரமாட்டார்கள்.

தமிழ்நாடு மொழி; பண்பாடு, பொருளாதாரம் போன்ற பல துறைகளிலும் வஞ்சிக்கப்படுவது இந்திய தேசியத்தின் பெயரால் நடந்து வருகிறது. இந்திய தேசிய ஆட்சி அதிகாரம் எந்த தேசிய இனத்திலும் சாராத பார்ப்பன ஆதிக்கத்தில் இருப்பதை மண்டல்குழு அறிக்கை வெளிப்படுத்துகிறது;

எடுத்துக்காட்டாக மத்திய அரசில் உள்ள முதல்நிலைப் பதவிகள்

| மொத்தம் | தாழ்த்தப் பட்டவர்கள் | பிற்படுத்தப் பட்டவர்கள் | பார்ப்பனர்கள் |
|---|---|---|---|
| 1,74,026 | 9891 | 8169 | 1,55,966 |
| இதில் இராணுவத்துறை மட்டும் | | | |
| 1379 | 48 | 9 | 1322 |

இதன் காரணமாக டாட்டா, பிர்லா, போன்ற இந்திய தேசிய முதலாளிகள் வளர்ந்து வருவதும், டி. வி. எஸ். போன்ற பார்ப்பனீயக் கும்பல்கள் இந்திய தேசிய முதலாளி வரிசையில் வளர்ந்து வருவதும், இந்தியத் துணைக் கண்டம், பன்னாட்டுக் கொள்ளைச் சக்திகளின் வேட்டைக் காடாக வளர்ந்து வருவதும், தமிழ்நாடு போன்ற தேசங்களில் ஒரு குறிப்பிட்ட அளவிற்கு மேல் பொருளாதார வளர்ச்சி பெறும் பணக்காரர்கள் இந்திய தேசிய அடிவருடிகளாக மாறி சொந்த தேசத்திற்கு துரோகிகளாக இருப்பதும் இந்திய தேசிய உண்மையாகும். எனவே பார்ப்பனர்கள் இந்திய தேசிய முதலாளிக் கும்பல் இவர்களின் பக்கப் பலமாக இருக்கும் பன்னாட்டுக் கொள்ளைச் சக்திகள் துரோகிகள் ஆகியோரை எதிர்த்தே தமிழ்நாட்டின் தேச விடுதலை முயற்சி முன்னேற வேண்டும். தமிழ் ஈழ விடுதலைப் போரின் விளைவாக தமிழ்நாட்டில் அக்கறை உள்ள இளைஞர்கள் மனதில் தமிழ்நாட்டு விடுதலைக்கு ஆயுதப் போராட்டத்தை துவங்க வேண்டும் என்ற உணர்வு பொங்கி எழுந்துள்ளது. ஒரு தேச விடுதலைப் போராட்டத்தில் எந்தக் கட்டத்தில் எந்த முறையில் ஆயுதப் போராட்டத்தை முன்னெடுப்பது என்பதும் தேச விடுதலை முயற்சியில் சர்வதேச அரசியல் சூதாட்டத்தின் குறுக்கீடு பற்றியும் தெளிவுபடுத்தி மேற்சொன்ன உணர்வுகளை அறிவியல் அணுகுமுறை வடிகால்கள் மூலம் நெறிப்படுத்துவது அவசரமும் அவசியமும் ஆன காரியம் ஆகிவிட்டது.

தன் முனைப்பு, தனிநபர் சாகசம், (Heroism) சாகசம் போன்ற போதைகளில்இந்த உணர்வுகள் பலியாகாமல் தவிர்ப்பதும் முக்கியமாகும் சர்வதேச அரங்கிலும் குறிப்பாக தமிழ் ஈழத்திலும் நடைபெற்று வரும் விடுதலைப் போராட்டங்களில் இருந்து தமிழ்நாட்டு விடுதலை முயற்சி பெற வேண்டிய பாடங்கள் இந்த நோக்கில் மிகவும் முக்கியமாகும்.

முதலில் தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்தில் ஆயுதப் போராட்டம் எந்தக்கட்டத்தில் பரிணமித்தது என்பதை முக்கியமாக கவனிக்க வேண்டும். தமிழ் ஈழத்தில் உள்ள மக்கள் தனிநாடு கோரிக்கைக்குப் பெருமளவு ஒப்புதல் அளித்து அமைதி வழி முயற்சிகள் பயனில்லாமல் போன பின்னர்தான் 1974–ல் ஆயுதப் போராட்டம் ஈழத்தில் பரிணமித்தது.

மக்கள் என்ற நீரில் நீந்தும் மீன்களே கொரில்லாக்கள் என்ற மாவோவின் அடிப்படை இலக்கணத்திற்கு ஏற்பவே அங்கு ஆயுதப் போராட்டம் தோன்றி வளர்ந்தது. இன்றைய தினம் தமிழ்நாட்டில் உள்ள தமிழர்கள் தாம் வஞ்சிக்கப்பட்டிருப்பதையே உணராத நிலையில் தமிழ்நாட்டு விடுதலைக்கு அவர்கள் ஆதரவாக (நீராக) இருப்பார்கள் என்று எதிர்பார்ப்பது கனவேயாகும்.

அடுத்து பின்வரும் உண்மையைப் பற்றியும் தமிழ்நாட்டு விடுதலையில் அக்கறை உள்ளவர்கள் கவனம் செலுத்த வேண்டும். தமிழ் ஈழ மக்கள் தனி நாடு கோரிக்கைக்கு ஆதரவு அளித்த பின்னர் தோன்றி வளர்ந்த தமிழ் ஈழ விடுதலை ஆயுதப் போராட்டம் இன்று பார்ப்பன 'இந்திய தேசிய' (டில்லி) பிடியில் சிக்கித் தவித்து சாண் ஏறி முழம் சருக்கின கதையாக மாறி வருவதே அந்த உண்மையாகும். தமிழ் ஈழ விடுதலைப் போராட்டம் இந்த பரிதாபக் கட்டத்தை எவ்வாறு அடைந்தது என்பதை இனி பார்ப்போம்.

எந்தப் பிரச்சினையிலும் ஆதாரங்கள் என்று வரும்போது வெளிப்படையான ஆதாரங்கள் முதலில் இடம் பெறும். சார்பு ஆதாரங்கள் அடுத்து இடம் பெறும். அந்த முறையில் தமிழ் ஈழ விடுதலைப் போராட்டம் இந்திய தேசிய பிடியில் சிக்கியதற்கான வெளிப்படையான ஆதாரங்களைப் பார்ப்போம்.

பொதுவாக பேச்சு வார்த்தையை தூண்டுபவர்கள் இருசாராருக்கும் இடையில் நடுநிலை வகிக்க வேண்டியது குறைந்த பட்ச நிபந்தனையாகும். இந்த நிபந்தனைக்கு உட்பட்டு நடக்கும் பேச்சுவார்த்தை கூட ஒரு குறிப்பிட்ட சாரார் தமது வலுவைக் கூட்டிக் கொள்ள அவகாசம் கொடுக்க துணை புரியும் மோசடி நாடகமாக அமையலாம்.

இந்தியாவின் தூண்டுதலின்பேரில் ஜெயவர்த்தனே அரசும், தமிழ் ஈழ விடுதலை அமைப்புகளும் திம்புப் பேச்சுவார்த்தையில் கலந்துகொண்டன. சர்வதேச சுய நிர்ணய உரிமைச் சட்டங்களை ஆதரித்து கையெழுத்து இட்டு இருக்கும் இந்தியா தமிழ் ஈழ விடுதலை கோரிக்கையை கொள்கை ரீதியில் ஆதரித்து திம்பு பேச்சுவார்த்தையை தூண்டி இருந்தால் கூட குற்றம்சொல்ல முடியாது. அல்லது தமிழ் ஈழ விடுதலையை ஆதரிக்காமலும், எதிர்க்காமலும் நடுநிலை வகித்து இருந்தால் கூட பரவாயில்லை. ஆனால் இந்திய அரசின் நிலை என்ன தெரியுமா? 4-6-85 'இந்து' ஆங்கில நாளிதழில் இந்திய அரசால் உறுதிப்படுத்தப்பட்ட உண்மைகள் வருமாறு :

1. இந்தியா தமிழ் ஈழம் என்ற கோரிக்கையை ஒரு போதும் ஆதரிக்காது. அதற்கு இது உடன்பாடு இல்லை.
2. அங்குள்ள தமிழர்கள் இந்தியாவில் மாநிலங்களுக்கு உள்ளது போன்ற அதிகாரங்களைப் பெற்ற தமிழ் பகுதிகளில் இருக்கலாம்,
3. தமிழ் போராளிகளின் செயல்களை நாங்கள் மிகவும் குறுக்கிவிட்டோம். வன்முறையில் ஈடுபட வேண்டாம் என்று போராளிகளைக் கட்டயர்ப்படுத்தி வருகிறோம்,

4. 40 லட்சம் அமெரிக்க டாலர் மதிப்புள்ள ஆயுதங்களை போராளிகளிடமிருந்து நாங்கள் பறிமுதல் செய்து விட்டோம்

இவையெல்லாம் அன்றைய பிரதமர் ராஜிவ் காந்தி அமெரிக்க நிருபருக்கு கொடுத்த பேட்டியின் மூலம் வெளியான செய்திகள் ஆகும். இதே உண்மை 12—10—85 இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழில் ராஜிவ் காந்தியின் பேட்டியாக பின்வருமாறு வெளியானது. '' தனிஈழஅரசு என்பது இந்தியாவிற்கு உடன்பாடான கருத்து அல்ல. இலங்கை அரசியல் சட்டத்திற்கு உட்பட்டுதான் இனப்பிரச்சனைக்கு தீர்வுகாண வேண்டும். அதற்கான உதவிகளை இந்தியா செய்யும்.'' இப்படி தெளிவாக தமிழ்ஈழ விடுதலைக்கு எதிரான நிலை எடுத்த டில்லி அரசுக்கு ஈழவிடுதலை தொடர்பாக சமரசப்பேச்சுவார்த்தையை தூண்டுவதற்கு அருகதை உண்டா? இப்படிப்பட்ட டில்லி அரசு தூண்டிய பேச்சுவார்த்தையில் கலந்துகொண்ட தமிழ் ஈழவிடுதலை அமைப்புகள் எத்தகைய நெருக்கடிகளுக்கு உள்ளாகி இருக்கவேண்டும்? இவ்வாறு நெருக்கடிக்குள் இருக்கும்போதே தாங்கள் நெருக்கடிக்கு உள்ளாகவில்லை என்று இந்த அமைப்புகள் அவ்வப்போது கொடுத்த அறிக்கை இந்திய தேசிய பூணூல் வலிமையை எடுத்துக்காட்டுகிறது.

திம்பு பேச்சுவார்த்தைக்குப்பின்னால் அணிசேரா நாடுகளின் இளைஞர் அமைப்பு டில்லியில் ஒரு தேச விடுதலை கருத்தரங்கை நடத்தியது அணிசேரா நாடுகளில் தலைவராக ராஜிவ் காந்தி அன்று இருந்தார். அந்த கருத்தரங்கில் மேற்கு சகாரா, பாலஸ்தீனம் உள்ளிட்ட பல விடுதலை இயக்கங்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டார்கள். திம்பு பேச்சுவார்த்தையில் கலந்துகொண்ட தமிழ் ஈழவிடுதலை அமைப்புகள் அனைத்தும் புறக்கணிக்கப்பட்டன. ஈழப்போராளிகளால் வெளியில் சொல்ல முடியாத ரகசியத்தை யு. எஸ். அய்யர் என்னும் தமிழ்நாட்டு பார்ப்பனர் 'ஜென்டில்மேன்' (செப் 1985) ஆங்கில இதழில் பின்வருமாறு தெளிவுபடுத்தியுள்ளனர். ''தமது பயங்கரவாதப் போக்கை நிறுத்துமாறு இலங்கை தமிழர்களுக்கு பிரதமர் ராஜிவ் காந்தி கடும் எச்சரிக்கை கொடுத்திருப்பதாகத் தெரிகிறது. அறிவு நியாயம் அற்ற தமிழர்களிடம் பிரதமர் ராஜிவ் காந்தி கண்டிப்பாய் இருந்தால் இலங்கை பிரச்சனையில் 90% தீர்ந்துவிடும்''. இந்த செய்திக்கு வலிவு சேர்க்கும் ஆதாரத்தை 8—10—85 'இந்து' நாளிதழில் பின்வருமாறு வெளிப்படுத்தியுள்ளனர். பயங்கரமான ஆயுதங்கள் நிரம்பிய வெளிநாட்டு விமானம் திருவனந்தபுரத்தில் வழி தவறி இறங்கிய போது இந்திய அரசாங்கம் ஆயுதங்களும், வெடிமருந்துகளும் நிரம்பிய அந்த விமானத்தை கொழும்பு செல்ல அனுமதித்தது. அதற்கு சில வாரங்கள் கழித்து ஈழப் போராளிக்கு சிங்கப்பூரிலிருந்து கப்பலில் வந்த ஆயுதங்களை இந்திய அரசாங்கம் சென்னை துறைமுகத்தில் பறிமுதல் செய்தது.

ஈழப் போராளிகளுக்கு நெருக்கடி கொடுத்து ஈழ விடுதலை முயற்சியை பலகீனப்படுத்துதல், இலங்கை அரசின் இராணுவ வலிவு சேர்க்கும் முயற்சிக்கு மறைமுகமாகத் துணைநிற்பது மேற்சொன்னவற்றால் தெளிவாகிறது. இதனை உறுதிப்படுத்தும் ஆதாரங்கள் வருமாறு:

1985 நடுவில் அன்றைய பிரதமர் ராஜீவ் காந்தியை ஜெயவர்த்தனா டெல்லியில் சந்தித்தார். அதன்பின் ஜெண்டில்மேன் (ஜூலை 85) இதழில் ஜெயவர்த்தனா கொடுத்த பேட்டியின் முக்கியப் பகுதிகள் வருமாறு :

கேள்வி : டில்லியில் பிரதமர் ராஜிவுடன் நடத்திய பேச்சு வார்த்தையில் உங்களுக்கு தனிப்பட்ட திருப்தி கிடைத்ததா?

ஜெயவர்த்தனா ; ஆம், எனக்கு திருப்தி கிடைத்தது. முதல்முறையாக தனித்தமிழ் ஈழத்திற்கு ஆதரவு கிடையாது என்று இந்திய அரசு சொல்லிவிட்டது. இலங்கை வடக்கு கிழக்கு பகுதிகளை ஒன்றாக இணைத்து ஒரே வட்டாரமாகஆக்கும் கோரிக்கையையும் ஆதரிக்க முடியாது என்று இந்தியா சொல்லிவிட்டது, எந்த ஒரு குறிப்பிட்ட பகுதிக்கும் சுய ஆட்சி வழங்குவது ஆதரிக்க முடியாது என்று இந்தியா சொல்லிவிட்டது. இங்கு சனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கம் (அதாவது ஜெயவர்த்தனா அரசு) கோரினால் இந்திய இராணுவம் உதவிக்கு வரும்.

கேள்வி : உங்களுக்கும், இந்திய அரசுக்கும் ஏதாவது பிரச்சினையில் அதிருப்தி ஏற்பட்டதா?

ஜெய : இல்லை.

அதே இதழில் இலங்கை அமைச்சர் லலித் அதுலத் முதலி தெரிவித்த அதிர்ச்சி தரும் கருத்துக்கள் வருமாறு:

கேள்வி : நான்கு மாதங்களுக்கு முன்பிருந்தே இந்திய அரசு தமிழ் போராளிகள் மீது நெருக்கடியை அதிகரித்து வருவது உண்மையா? அவர்களைப் பேச்சுவார்த்தைக்கு வரவழைத்ததற்கும் இதற்கும் தொடர்பு உண்டா?

பதில் (அதுலத் முதலி): நேரடித் தொடர்பு இருக்கிறதாஎன்பது தெரியாது. ஆனால் இதற்குமுன் இல்லாத நெருக்கடிக்கு ஈழப் போராளிக் குழுக்கள் உள்ளாகியுள்ளனர் என்பதை நாங்கள் அறிவோம்.

இன்னொரு கேள்விக்கு பதிலளிக்கையில் அதுலத் முதலி பின்வரும் தகவலை வெளிப்படுத்தினார்.

''இனப்பிரச்சினையில் தமிழ்நாட்டின் நிலை இந்தியாவிற்கும், இலங்கைக்கும் உள்ள பரிமாற்ற உறவை பாதிக்கவோ, அழிக்கவோ கூடாது என்பது இந்திய அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டுவிட்டது.''

எப்படி சேது சமுத்திரத் திட்டம், கச்சத்தீவு போன்றவற்றில் தமிழ் நாட்டு மக்களின் உணர்வுகளை டெல்லி புறக்கணித்ததோ அதுபோல் இலங்கைப் பிரச்சினையிலும் தமிழ்நாட்டு உணர்வுகளை புறக்கணித்து வருகிறது. தாம் வஞ்சிக்கப்பட்டதையே உணராத அறிவும்-மானமும் அற்ற தமிழ்நாட்டு தமிழர்களின் நிலை ஈழ விடுதலைக்கு எதிரான டில்லி பார்ப்பன சூழ்ச்சியின்

நடைமுறைக்கு ஏதுவாக அமைந்ததில் ஆச்சரியம் இல்லை. தமது விடுதலையை முன்னெடுப்பது பற்றி முயலாமல் ஈழ விடுதலைக்கே தமது ஆற்றலை முழுமையாகச் செலவழித்த தமிழ்நாட்டு ஈழ விடுதலை ஆதரவாளர்களின் செயல்பாடு டெல்லியின் இந்த பார்ப்பன சூழ்ச்சி நாடகத்திற்கு இருவகைகளில் துணைபுரிந்தன, தமிழ்நாட்டு மக்கள் தாம் வஞ்சிக்கப்பட்டிருப்பதை உணரச் செய்து தமிழ்நாட்டு விடுதலைக்கு தமிழ்நாட்டு மக்களை ஆதரவு பலமாக மாற்ற வேண்டிய ஆற்றல் இல்லாமல் போனது ஒரு பலனாகும். பார்ப்பன எதிர்ப்பை முனை மழுங்கச் செய்து, ஈழ விடுதலை டெல்லி பார்ப்பன சதிவேலையில் வேகமாக சிக்குவதற்கு துணைபுரிந்தது இரண்டாவது பலனாகும். இந்தப் பின்னணியை அடுத்துப் பார்ப்போம்.

## ஈழ விடுதலைக் குழுக்களும் - டில்லி அரசும்:-

டில்லி பார்ப்பன அரசானது ஈழ விடுதலைக் குழுக்களை வரைமுறையின்றி முகாம்கள் அமைத்திட அனுமதித்து இந்த குழுக்களின் இடையில் உள்ள பிளவுகளை இலாவகமாக பயன்படுத்தி, இந்திய இராணுவப் பயிற்சி என்ற தூண்டில்மீனையும் நன்கு பயன்படுத்தி இந்த குழுக்களில் உள்ள ஒவ்வொரு குழுவும் மற்ற குழுக்களின் மீது குறை சொல்லும் எஜமான இடமாக டெல்லி மாறி டெல்லியின் பூணூல் கரங்களில் சிக்கிய பொம்மையாக ஈழ விடுதலை ஆகிவிட்டது. இப்போது நம் கண்முன் தெரியும் ஈழ விடுதலைப் போர்ராட்டம் திரைமறைவில் தனது வெளிநாட்டு கொள்கைக்கு ஏதுவாக இந்திய தேசிய பூணூல் பீடமான டெல்லி இயக்கும் பொம்மலாட்டமேயாகும் தாம் நெருக்கடியில் இல்லை என்று இந்த குழுக்கள் அவ்வப்போது அறிக்கை விட்டது இந்த பொம்மலாட்டத்தின் நகைச்சுவைப் பகுதியாகும்.

தமது பிடியின் வலிமையை ஒரே நேரத்தில் ஈழ விடுதலைக் குழுக்களுக்கும் ஜெயவர்த்தனாவுக்கும், சிங்கள மக்களுக்கும் உணர்த்தவே நவம்பர் 86ல் ஈழ விடுதலை இயக்கக் குழுக்கள் தொலைக்காட்சி மேற்பார்வையில் காவல் துறையின் கண்காணிப்பு பறிமுதல் நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டார்கள், 21—11—86ல் 'இந்து' ஆங்கில நாளிதழில் 'இங்கு இருக்கும் சூழ்நிலையில் முன்னேற்றம்' (improvement in climate) என்று ஒரு ஈழ விடுதலை இயக்கம் பத்திரிகையில் வெளியிட்ட அன்றே இக்குழுக்களின் தகவல் தொடர்பு கருவிகள் பறிமுதல் செய்யப்பட்ட விபரம் 22-11-86 'இந்து' நாளிதழில் வெளியானது.

சர்வதேச நிதி நிறுவனங்களிடம் இலங்கை பேச்சுவார்த்தை 1985-ல் நடத்தின சூழலில் இந்தப் பன்னாட்டுக் கொள்ளைக்கு ஏதுவாக ஒரு சமரச நிலையை உண்டாக்க இந்தியா மேற்கொண்ட முயற்சியே திம்பு பேச்சுவார்த்தை ஆகும். 1986-ம் ஆண்டும் இலங்கை நிதியமைச்சர் சர்வதேச நிதி நிறுவனங்களும் பேச்சு வார்த்தை நடத்திக் கொண்டிருந்த சூழலில்தான் நவம்பர் 86ல் பெங்களூரில் கூடிய தெற்காசிய பிராந்திய கூட்டுக்குழு கூட்டத்தில்,

செயவர்த்தனா - ராசிவ் - எம், ஜி. ஆர் - பிரபாகரன் சந்திப்புகளும் அதன் பின் டெல்லிக்கு வரிசையாக ஒவ்வொரு விடுதலை குழு தலைவரும் அழைக்கப்படுவதும் நடந்துவந்தது,

ராசிவ் - செயவர்த்தனா ஒப்பந்தம் உருவாவதற்கு முன்னேயே தமிழ்நாட்டைப்போல் ஒரு மாநில அரசு அளவுக்கு இப்போதைக்கு பெற்றுக் கொண்டுபின்பு அதிகாரங்களை பயன்படுத்தி தமிழ் ஈழத்தை முன்னெடுக்கலாம் என்ற நடைமுறை சாத்தியமற்ற சிந்தனை போக்கில் ஈழ விடுதலைக்குழுக்கள் செயல் பட்டன. ஆனால் சமரசத்திற்குப்பின்னால் எந்தக்கட்டத்திலும் முன்னெடுக்கப்படும் ஆயுதப்போராட்டம் சந்திக்கப்போவது இந்திய ராணுவத்தைதான் என்பது இந்த சிந்தனை போக்கின் பாதகமானஅம்சத்தை வெளிப்படுத்தியது. இராணுவம் விமானம், கடற்படை ஆகிய மூன்று துறைகளிலும் தென்னாட்டில் தளங்களைப்பெருக்கி தனதுவலிமையைக்கூட்டுவதில் டெல்லி பார்ப்பன அரசு வேகம்காட்டிவருவது நினைவில் கொள்ள வேண்டிய முக்கிய அம்சமாகும்.

சிங்கள ராணுவம் தமிழ் ஈழத்தில் தமிழ்ப் பெண்களை கற்பழிக்கத் தொடங்குவதற்கு பல ஆண்டுகளுக்கு முன்னரே இந்தியராணுவம் நாகலாந்து மற்றும் திரிபுரா விடுதலை போராளிகளின் சகோதரிகளை பொது இடத்தில் நிர்வாணம் ஆக்கி கற்பழித்ததும்,வங்கதேச விடுதலையின்போது அங்கு இந்திய ராணுவம் கற்பழிப்பு மற்றும் கொள்ளையில் ஈடுபட்டதும் இந்திய ராணுவத்தின் சிறப்பு அம்சங்களாகும்: இவையெல்லாம் எக்கனாமிக் அன்ட் பொலிடிக்கல் வீக்லி, மற்றும் இம்பிரிண்ட் போன்ற ஆங்கில இதழ்களில் வெளிவந்துள்ளன:

பிரிவினை தடைச்சட்டம் பயங்கரவாத தடைச்சட்டம் போன்ற மனித விரோதச்சட்டங்களுக்கு இலங்கைக்கு வழிகாட்டியாக இருந்ததே இந்தியா தான்:

இக்கொடுமைகளின் கதாநாயகி இந்திராகாந்தி மரணம் அடைந்த போது ஈழவிடுதலை குழுக்களின் தலைவர்கள் போட்டிபோட்டு கொண்டு சர்வதேச அரங்கில் தேச விடுதலை ஆதரவு சக்தி மறைந்துவிட்டதாகஒப்பாரி வைத்து அறிக்கை விட்டது என்பது இந்திய தேசியப் பிடியில் ஈழ விடுதலை எவ்வளவு கீழ்த்தரமாக சிக்கியுள்ளது என்பதை நிருபித்தது:

இந்த டெல்லி பார்ப்பன சூழ்ச்சிக்கு தடையாக இருப்பவர்களுக்கு உள்ள ஆபத்தினை பின்வரும் ஆதாரம் உணர்த்துகிறது.

"பிரதம மந்திரி ராசிவ் காந்தியும் இலங்கை குடியரசு தலைவர் செயவர்த்தனாவும் மறைமுகமான ஒப்பந்தத்தினை ஏற்படுத்தியுள்ளார்கள், இதன்விளைவாக தமிழ் ஈழவிடுதலைக்கு குரல்எழுப்பவும் எல்லா இலங்கை

தமிழர்களும் ஒழிக்கப்படுவார்கள் என்று ஜனதா தலைவர் ஜார்ஜ் பெர்னாண்டஸ் கருத்து தெரிவித்தார். இந்த மறைமுக ஒப்பந்தத்தை பற்றி முழு விபரங்கள் வெளியிட மறுத்த அவர்,

"என்னிடமிருந்து எடுத்துக்கொள்ளுங்கள். எல்லா இடத்தில் உள்ள இலங்கை தமிழர்களும் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் வேட்டையாடப்பட போகிறார்கள்" என்று கூறினார். இந்தியன் எக்ஸ்பிரஸ் 25-6-85

சிங்கள இனவெறியன் செயவர்த்தனா "ராசிவ் காந்தி துணையுடன் ஈழத்தமிழரின் கொரில்லா போராட்டத்தை கடுமையாக ஒடுக்கும் பணியை இன்னும் வலிமையாக நாங்கள் செய்யத் துவங்கலாம்" என்று பகிரங்கமாக அறிவித்திருக்கிறார். இந்தியன் எக்ஸ்பிரஸ் 25-6-85

இந்த பின்னணி தெரிந்தவர்களுக்கு 1987 ராசிவ் - செயவர்த்தனா ஒப்பந்தம் அதிர்ச்சியாக இருக்காது.

## சர்வதேச அரசியலில் சிக்கிய தமிழ் ஈழம்:-

சர்வதேச அரசியலில் ஏற்பட்டுவரும் மாற்றங்களில் குறிப்பிடத்தக்க அம்சமாக சோவியத் அமெரிக்க பகைமை குறைந்து கூட்டு கொள்ளையர்களாக மாறிவருவது உள்ளது. இந்த இரண்டு சக்திகளின் கவர்ச்சிக்கன்னியாக இந்தியா இருந்துவருகின்றது. இதன் விளைவு இலங்கைப்பிரச்சினையில் முன்பு நினைத்துப் பார்க்க முடியாத சாகச வேலையில் இறங்க இந்தியாவைத் தூண்டியது. ராசிவ்-செயவர்த்தனா ஒப்பந்தமே இச்சூழலில் போடப்பட்டது.

இராணுவம் மூலம் ஆட்சிக்கவிழ்ப்பு அபாயத்தில் சிக்கி இருந்த செயவர்த்தனாவும், போபர்ஸ் ஊழல் மூலம் நெருக்கடியிலிருந்த ராசிவும், தத்தம் பதவிகளைக் காப்பற்றிக் கொள்ள இந்த அவசர ஒப்பந்தத்தை ஏற்படுத்தினார்கள், ( கரண்ட் 17-10-87 )

தனித்தமிழ் ஈழம் என்ற கோரிக்கையை பின்தள்ளி இக்கோரிக்கையை முன்வைத்த குழுக்கள் எல்லாம் இந்த ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்த போட்டிபோட்டுக் கொண்டு நிற்பதும், குழுக்களிடையே யாருக்கு முக்கியத்துவம் கொடுப்பது என்பதையே முக்கிய பிரச்சனையாக இந்தியா ஆக்கியிருப்பதும் ஈழவிடுதலைப் போராட்டம் சாண் ஏறி முழம் சறுக்கியதும் இந்த ஒப்பந்தத்தின் சாதனைகளாகும்.

இதில் சங்கராச்சாரிகளின் பக்தர்களாக இக்குழு தலைவர்களில் சிலர் இருப்பதும் பார்ப்பன மூட நம்பிக்கையாளர்களாக இருப்பதும் தமது பிரச்சனையில் தலையிடுமாறு சங்கராச்சாரி, செயலலிதா, ஆர். வெங்கட்ராமன் போன்றோரை கேட்பதும் ஈழ விடுதலைக் குழுக்கள் பார்ப்பனியத்தில் சிக்கி இருப்பதனை வெளிப்படுத்தின. தமிழ்நாட்டிலும் பார்ப்பனர்களை எதிரிகளாக கொள்ளாமல் பார்ப்பனர்களை தமிழர்களாக ஏற்றுக்கொண்டு தனித்

தமிழ்நாடு என்ற இலக்கை முன்வைத்து சர்வதேச சூழ்ச்சியில் சிக்கி செயல் படும் குழுக்கள் உள்ளன. 'மண்ணுக்கு விடுதலை' என்பதே இக்குழுக்களின் அதிகபட்ச இலட்சியம் எனலாம், 'மக்கள் விடுதலை'க்கு பாதகமானதே இம்முயற்சிகளாகும்.

## ஈழப்போராட்டத்தின் குறைபாடுகள்:-

தியாகத்துடனும், வீரத்துடனும் வளர்ந்த ஈழ விடுதலைப் போராட்டம் இந்திய தேசிய பிடியில் சிக்கி டெல்லி பார்ப்பனபீடம் இயக்கும் பொம்மலாட்டமாக மாறியதற்கான அடிப்படைக் காரணங்கள் வருமாறு!

எல்லா ஈழ விடுதலைக் குழுக்களும் தம்மை சோசலிச நோக்கிலான இயக்கங்களாக பிரகடனப்படுத்திக் கொண்டாலும் தமது சமுதாய அமைப்பைக் கணக்கில் கொண்ட புரட்சிகரத் தத்துவத்தை எந்த ஈழ விடுதலைக் குழுவும் ஆயுதப் போராட்டத்தின் ஊடே வளர்த்தெடுக்கவில்லை. அதாவது தமது சமுதாய அமைப்பின் பொருள் உற்பத்திமுறை உற்பத்திவிசைகளுக்கும் உற்பத்தி உறவுகளுக்கும் இடையிலான முரண்பாடுகள், இவற்றில் உபரி உற்பத்தி அபகரிப்பின் பங்கு ஈழ விடுதலை நோக்கில் சர்வதேச அரசியல் பொருளாதார பின்னணியின் கூறுகள் இவற்றை உள்ளடக்கின புரட்சிகர தத்துவம் வளர்த்து எடுக்கப்படவில்லை. மாறாக சந்தர்ப்பவாத, சமரச, சாகச மற்றும் தனிநபர் முதன்மை சாகச கூறுகள் இந்த ஆயுதப் போராட்டத்தின் ஊடே வளர்ந்தன. இதன் காரணமாக விமர்சனங்களும், சுய விமர்சனங்களும் துரோகங்களாக கருதப்படும் அவல நிலை ஏற்பட்டது: ஆயுதப் போராட்டத்தினூடே கொள்கை ரீதியான போராட்டம் முறையாக பிணைக்கப் படவில்லை.

தத்துவத்தை மையமாக கொள்ளாமல் தனி நபரை மையமாகக்கொண்டு இக்குழுக்கள் செயல்பட்டதால் இத் தனி நபர்களை அடிமைப் படுத்துதல், சோரம் போகச் செய்தல், பலகீனங்களை பயன்படுத்துதல் மூலம் குழுக்கள் பொம்மைகள் ஆக்கப்பட்டன. இவற்றின் தொகுவிளைவாக இயக்கங்கள் மற்றும் தலைவர்களின் குறை அம்சங்கள் பெருகி நிறை அம்சங்கள் குறுகின. எனவே பார்ப்பனீயம் பற்றியும், இந்திய தேசியம் பற்றியும் புரிந்து கொள்ள இந்த இயக்கங்கள் தவறின. இக்காரணங்களால் சர்வ தேச அரசியலில் 'இந்திய தேசிய' நலன்களுக்கு அடிமைப்பட்டு பொம்மலாட்டமாக தமிழ் ஈழ போராட்டம் ஆகிவிட்டது. தமிழ் ஈழ விடுதலையின் முக்கிய எதிரி பீடமாக டெல்லி ஆகிவிட்டது. அதாவது இந்தியா என்ற தேசங்களின் சிறைக்கூடத்தில் வித்தியாசமான கைதியாக தமிழ் ஈழம் சிறை பிடிக்கப்பட்டுள்ளது எனவே இந்த சிறைக் கூடத்தின் தேசங்களின் விடுதலையும் தமிழ் ஈழ விடுதலையும் தவிர்க்கமுடியாதவாறு பிணைக்கப்பட்டுள்ளது.

## ஈழ விடுதலையும், பார்ப்பன சூழ்ச்சியும்:-

தமது அடிமை விலங்கை உடைப்பதை முதன்மைப் பணியாகவும், மற்றவரின் அடிமைவிலங்கை உடைக்க துணை நிற்பதை இரண்டாம் பணியாகவும்

கொள்ள வேண்டிய வழிமுறையே மறந்து, தமிழ்நாட்டு விடுதலைக்கான சக்திகள் தமிழ் ஈழ விடுதலைக்கு முற்றிலுமாக முதன்மையாகப் பயன்பட்டது அந்த சக்திகளை ஈழ விடுதலை அமைப்புகள் பயன்படுத்தியதும் இருபாலாருக்கும் கெடுதலாக அமைந்தது.

இந்திய தேசியத்தை உடைத்து நொறுக்கி தமிழ்நாடு விடுதலை நோக்கிலான முயற்சி தனிஈழத்திற்கு துணைபுரியும் முயற்சியாக அமையும் என்பது இன்றைய உண்மையாகும். எனவே, தமிழ்நாட்டு விடுதலை மற்றும் தமிழ் ஈழ விடுதலை முயற்சிகளுக்கும் இடையே பரிமாற்ற ஆதரவு உறவு இன்றைய வரலாற்றுக் கட்டாயமாகும்.

'மண்ணுக்கு விடுதலை' என்பதற்கும், 'மக்களுக்கு விடுதலை' என்பதற்கும் வேறுபாடு உண்டு. மக்கள் விடுதலைக்கு பாதகமான மண் விடுதலைகள் உலக வரலாற்றை நிரப்பியுள்ளன. சர்வதேச ஆதிக்கச் சக்திகளின் 'உதவி' என்ற தூண்டில் மீனாக சிக்கிய மக்கள் விடுதலை முயற்சிகள் ஒடுக்கப்படுவதும், மக்கள் விடுதலைக்கு பாதகமான மண் விடுதலையை ஈட்டுவதும் கடந்தகால-நிகழ்கால உலக வரலாறு உணர்த்தும் பாடமாகும். ஈழவிடுதலை முயற்சி அதற்கு விதிவிலக்கு ஆகாது. தத்தம் கொள்கைகளை, செயல்பாடுகளை கடுமையான விமர்சனத்துக்கு உட்படுத்தாமல் சந்தர்ப்பவாதம், சமரசம், சாகசம் ஆகிய பலகீனங்களுக்கு உட்படும் விடுதலை முயற்சிகள் சர்வதேச சூழ்ச்சி வலைக்கு எளிதில் பலியாகும் அபாயம் உண்டு. சர்வதேச அரங்கிலேயே ஈடு இணையற்ற சூழ்ச்சிமிகு சக்தி பார்ப்பனீயம். இது சர்வதேச ஆதிக்க சக்திகளுக்கு நெருக்கமான சக்தியாக வளர்ந்து வருகிறது. இன்றைய தினம் ஈழ விடுதலை முயற்சி பார்ப்பன சூழ்ச்சியில் சிக்கித்தவிக்கிறது.

ஈழ விடுதலையை கடுமையாக எதிர்த்துக்கொண்டே போர் நிறுத்த ஆதரவாளர்களாகவும், விடுதலைப் புலி ஆதரவாளர்களாகவும் முதலைக் கண்ணீர் விடும் சங்கராச்சாரிகளும், ஆர். எஸ். எஸ்ஸும், தினமணிகளும், பார்ப்பன ஜெயலலிதாக்களும் ஒப்பந்த எதிர்ப்பாளர்களைவிட போர் நிறுத்த எதிர்ப்பாளர்களை விட ஆபத்தானவர்கள், அபாயகரமானவர்கள்.

இன்றுவரை இலங்கைப் பிரச்சினையில் தமக்குள் முரண்பட்ட நிலைகளை எடுத்துவரும் பார்ப்பனர்கள் ஈழ விடுதலை எதிர்ப்பு என்பதில் ஓரணியில் நிற்கின்றார்கள். எடுத்துக்காட்டாக ராசிவ்-செயவர்த்தனா ஒப்பந்தத்தை தீவிரமாக ஆதரிக்கும் துக்ளக் 'சோ'வும், கடுமையாக எதிர்த்து வரும் முன்னாள் வெளியுறவுச் செயலர் வெங்கடேஸ்வரனும் ஈழ விடுதலை எதிர்ப்பு என்பதில் ஓரணியில் நிற்பதைக் காணலாம். ஈழ விடுதலை முயற்சி இந்திய தேசிய பாரப்பன ஆட்சியிடம் சிக்கித் தவிக்கிறது, எனவே மக்கள் விடுதலை என்ற நோக்கிலான ஈழ விடுதலை ஆதரவானது பார்ப்பன எதிர்ப்பை உள்ளடக்கியதாக இருக்கவேண்டும் என்பது தெளிவாகிறது. ஈழ விடுதலை இயக்கங்களில் டெல்லி பார்ப்பன சூழ்ச்சிக்கு 'பெரும் தலைவலியாக' இருந்து பெருமை பெற்றது விடுதலைப் புலிகள் இயக்கம் மட்டுமே. இரண்டும்

கெட்டாினாக இருந்தது ஈரோஸ் இயக்கம். மற்ற இயக்கங்கள் எல்லாம் டெல்லி பார்ப்பன அரசின் கேவலமான கொத்தடிமைகள் ஆயின. ERRLF ஐச் சார்ந்த வரதராஜபெருமாள் அறிவித்துள்ள 'தனித் தமிழ் ஈழம்' என்பது மக்கள் விடுதலையுமல்ல, மண்விடுதலையுமல்ல. மாறாக சர்வதேச அரங்கில் அவருக்கு 'மரியாதையான' அகதி அந்தஸ்தைப் பெற்றுத்தரும் நேர்க்கிலானது ஆகும்.

தமிழ்நாட்டு விடுதலை மற்றும் தமிழ் ஈழ விடுதலை முயற்சிகளுக்கு இடையே பரிமாற்ற ஆதரவு-உறவு இன்றைய வரலாற்று கட்டாயமாகும் என்பதை ஏற்கனவே பார்த்தோம்.

இந்தப் பரிமாற்ற ஆதரவு உறவு தத்துவம், செயல்பாடு ஆகிய இரண்டிலும் வெளிப்பட வேண்டும். மாறாக தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்தில் நடந்த தவறுகளை தமிழ்நாட்டில் அரங்கேற்றும் வகையில் இந்தப் பரிமாற்ற ஆதரவு அமைந்துவிடக் கூடாது. விடுதலை முயற்சிகள் சர்வதேச சூழ்ச்சிவலையில் சிக்கும்போது இத்தகைய பாதகம் ஏற்படலாம்.

தமிழ் ஈழ விடுதலை இயக்கங்கள் இந்திய தேசியப் பிடியில் இருந்து விடுதலைப் பெற வேண்டியது தமிழ் ஈழ விடுதலைக்கான முன் நிபந்தனை யாகி விட்டது. இந்திய தேசிய அதிகார பீடமான 'டெல்லி' இந்த முன் நிபந்தனை சாத்தியமாகும் அளவுக்குப் பலகீனமாக வேண்டும். இந்தியத் துணைகண்டத் தேச விடுதலை எழுச்சிகள்தான் இந்த பணியைப் பிரதான மாகச் செய்யவேண்டும். இதற்குச் சர்வதேச அரசியலில் இந்திய தேசத்தின் நிலைப்பாடு குறித்து ஏற்கனவே சொல்லப்பட்டதைப் பற்றித் தெளிவு பெற வேண்டும். அதற்குமுன் தேச விடுதலை நோக்கில் சர்வதேச அரசியலைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டும்.

சர்வதேச அரங்கில் இன்றைய தினம் வளர்ந்த நாடுகள் தமது பொருளாதாரக் கொள்கைக்கு வசதியான வகையில் வளரும் நாடுகளைச் சிக்க வைக்க சர்வதேச அரசியலைப் பயன்படுத்தி வருகின்றன. தேசிய சுய நிர்ணய உரிமை உள்ளிட்ட பல மனிதஉரிமை சர்வதேச சட்டங்களில் பெரும்பாலான நாடுகள் கையெழுத்து இட்டிருக்கின்றன.

தமது நலன்களுக்கு ஏற்றவகையில் சில மனித உரிமை மீறல்களை வன்மையாக கண்டிப்பதும் தமக்குச் சாதகமான நாடுகளில் நடைபெறும் மனித உரிமை மீறல்களை பயங்கரவாதத் தடுப்பு முயற்சிகளாக நியாயப் படுத்துவதும், சர்வதேச அரசியலின் சிறப்பு அம்சமாகும்.

இந்தப் போக்கில்தான் தமக்குச் சாதகமான தேச விடுதலை முயற்சிகளை வலிந்து ஆதரிப்பதும், தமக்கு பாதகமான தேசவிடுதலை முயற்சிகளை பயங்கரவாத முத்திரைக்குத்தி ஒழிக்கத்துணை போவதுமான நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. தனது தொழில் வியாபார நலன்களுக்குக் காலனி விடு-

தலைக்குப் பகிரங்க ஆதரவு கொடுத்து வந்த அமெரிக்க வல்லரசு இன்றைய தினம் நிகரகுவா சோசலிச அரசைக் கவிழ்க்கக் கீழ்த்தரமான முயற்சியில் ஈடு பட்டதும் தனது சொந்த நலன்களுக்காகவே ஆகும்.

பாலஸ்தீன விடுதலை, தென் ஆப்பிரிக்க விடுதலை, லத்தீன் அமெரிக்க நாடுகளின் விடுதலை முயற்சிகளுக்குத் துணை நிற்கும் சோவியத் வல்லரசு ஆப்கானிஸ்தான் தனது ராணுவத்தின் துணையுடன் பொம்மை அரசு மூலம் கட்டுப்பாட்டில் வைத்து இருந்ததும், மார்க்சிய-லெனினியத்திற்கு விரோத மான இந்திய தேசியத்தை ஆதரித்து இந்தியத் துணைக் கண்டத்தின் இந்திய தேசிய ஒடுக்கலுக்குத் துணை நிற்பதும் வெட்கக்கேடான உண்மைகளாகும்.

சீன அரசோ தனது ஓரளவு அமெரிக்கச் சார்பு வெளிநாட்டுக் கொள்-கைக்கு இணக்கமான வகையில் இலங்கை சிங்கள இனவெறி அரசுக்கு ஆயுதம் வழங்கி துணை நின்றது. இந்த வல்லரசு ஆளும் அவற்றைச் சார்ந்து வளர்ந்த நாடுகளும், வளரும் நாடுகளின் பொருளாதாரத்தில் தமது கொள்ளையை தக்க வைக்கும் அல்லது அதிகரிக்கும் நோக்கில் வளரும் நாடுகளின் அரசியலில் குறுக்கிட்டு வருகின்றன. இதற்கு இந்தியாவையே எடுத்துக்காட்டாகக் கொண்டு கீழ்க்கண்டவாறு விளக்கலாம்.

திருமதி. இந்திரா காந்தி மரணம் வரை இந்தியா சோவியத் வல்லரசு சார்பாகவே செயல்பட்டது. இதனால் தொழில் வியாபாரத்தில் குறிப்பாக இராணுவத்தில் சோவியத் அரசின்ஈடுபாடுஅதிகரித்து வந்தது.

இந்தியாவின் பிரிவினைத் தடைச் சட்டத்தை எதிர்க்காமல் இந்திய தேசிய காட்டுமிராண்டி ஒடுக்குமுறையைக் கண்டிக்காமல், தேச விடுதலைப் போராட்டங்களை ஆதரிக்காமல் அவ்வப்போது இந்திய தேசிய அரசுக்கு நற்-சான்றிதழ் சோவியத்நாடு வழங்கி வந்தது. நெருக்கடி நிலையை ஆதரித்தது இராமாயணம், மகாபாரதம்,பகவத்கீதை உள்ளிட்ட பார்ப்பனிய பண்பாட்டு ஊடுருவலை ஊக்குவித்து தமது சோசலிச சீரழிவை துரிதப்படுத்தியது. வெளிநாட்டுக் கொள்கையிலும், தொழில் ராணுவ வியாபாரத்திலும் இந்தியாவுடன்அதிருப்தி கொண்ட அமெரிக்க வல்லரசு பாகிஸ்தானைவலிந்து ஆதரித்ததுடன் இந்தியாவை சுற்றியுள்ள பங்களாதேஷ், இலங்கை போன்ற நாடுகளை அமெரிக்க சார்பு நாடுகளாக வளர்த்து வந்ததுடன், இந்தியாவில் உள்ள தேச விடுதலை இயக்கங்களுக்கும், மாநிலக் கட்சிகளுக்கும் மறைமுக ஆதரவினை இரண்டு காரணங்களுக்காகக் கொடுத்துவந்தது.இந்த ஆதரவைக் கொண்டு இந்தியாவுடன் தொழில்-வியாபார வெளிநாட்டு அரசியல்பேரத்தில் தனது வலிவைக் கூட்டிக் கொள்வது மற்றும் இந்தியா சிதறும் போது சிதறும் பகுதிகளைத் தமது ஏகபோகக் கொள்ளைக்கு உட்படுத்துவது ஆகியவையே அந்த இரண்டு காரணங்களாகும்.

இந்திரா அரசின் மீது வளர்ந்த நெருக்கடி கால அதிர்ச்சிகளைப் பயன் படுத்தி அரியணை ஏறிய ஜனதா கவிழ்ந்ததற்கு இந்த சர்வதேச அரசியல் ஒரு

முக்கிய காரணமாகும். இந்தியாவின் அதிகார பீடங்கள் பார்ப்பன ஆதிக்கத்தின் கீழ் இருப்பதன் காரணமாகவும் இந்திய தேசிய பண்பாட்டில் பார்ப்பனீயம் மேலாண்மை வகிப்பதாலும் இந்தியாவில் பன்னாட்டு சக்திகளின் பிரதிநிதிகள் பார்ப்பனர்களாகஇருப்பதும் பார்ப்பனஆதிக்கத்தில் பன்னாட்டு கூட்டு நிறுவனங்கள் இருப்பதும் மறைக்க முடியாத அளவிற்கு வெளிப்பட்டுவிட்டன.

மேற்சொன்ன போக்கில் இந்திராவின் மரணம் ஒரு கணிசமான திருப்பத்தை ஏற்படுத்தியது. சோவியத் சார்பு புள்ளிகள் இந்தியாவின் ஆதிக்க பீடங்களில் இருந்து அகற்றப்படுவது அல்லது மதிப்பு குறைக்கப்படுவது ஆகியவற்றுடன் அமெரிக்க சார்பு புள்ளிகளின் ஆதிக்கங்கள் வளர்ந்து வந்தன. புதிய பொருளாதாரக் கொள்கை, புதிய கல்விக் கொள்கை, புதிய தொழில் கொள்கை, புதிய மருந்துக் கொள்கை போன்றவற்றின் மூலம் தனியார் துறையும், பன்னாட்டுக் கொள்ளையும் ஊக்குவிக்கப்படுகின்றன. அதே நேரத்தில் சோவியத் சார்பு நிலையில் இருந்து அமெரிக்க சார்பு நிலைக்கான திருப்பம் நேர்கோட்டுப் பாதையில் அமையாமல் குறுக்கும் நெடுக்குமான பாதையிலேயே அமையும் என்பதை ஏற்கனவே கண்டோம். ஏற்கனவே இருந்துவரும் தொழில் வியாபார வர்த்தக ராணுவ உறவுகளே இதற்குக் காரணமாகும்.

அமெரிக்க ஆதரவுடன் நடைபெற்று வந்த தேச விடுதலை முயற்சிகள் இந்தியாவின் அமெரிக்கச் சார்பு முன்னேற்றத்திற்கு ஏற்றார்போல் பின்னேறுவது நடக்க இருக்கும் வரலாறு ஆகும். அதேநேரத்தில் அமெரிக்கச் சார்புவலுவான அடித்தளத்துடன் உறுதிப்படுத்தப்படும் வரை இங்கு பிரிவினை முயற்சிகளுக்கான அமெரிக்கா ஆதரவு தொடர்ந்து இருந்துகொண்டுதான் இருக்கும். இனிமேல் இந்தியாவில் உள்ள பிரிவினை முயற்சிகளுக்குச் சோவியத் அரசின் ஆதரவு மெல்ல மெல்ல கிடைத்துவரும். இதன் வேகமும் இந்திய அரசின் அமெரிக்க சார்பிலான வேகத்தைப் பொருத்தே அமையும்.

தமிழ் ஈழப் பிரச்சினையை இந்திரா காந்தி சோவியத் சார்பு நிலைக்கு துணைபுரியும் வகையில் கையாண்டவர். அவர் விட்ட இடத்திலிருந்து பின் வந்த பிரதமர் ராஜிவ்காந்தி முதலில் அமெரிக்கச் சார்பாகவும் பின் சோவியத் சார்பான நிலைக்கு ஏதுவாகவும் ஈழச் சிக்கலை கையாண்டு வருகிறார். அமெரிக்கா, சோவியத் போன்ற நாடுகளின் பக்கபலத்துடன் இந்தியா இச்சிக்கலை கையாண்டு வருகிறது. இந்தியா என்ற பெரும் சந்தையை இழக்க விரும்பாத சோவியத் வல்லரசு தமிழ் ஈழ விடுதலையில் வெளிப்படையாக இந்தியாவை பகைத்துக் கொள்ளாத நிலைப்பாடு எடுத்து இருக்கிறது இதன் காரணமாகத்தான் ஈழ விடுதலை பற்றி இந்தியாவிற்கு வந்த சோவியத் அதிபர் கோர்பசேவ் மவுனம் சாதித்து விட்டார்.

இந்தியாவோ நேரு குடும்பம் என்ற ஒரே ஒரு பிணைப்பில் மட்டுமே ஒன்றாக இருக்கிறது. நெருக்கடி காலத்தில் ஜனநாயக உரிமைகளுக்கு உரக்க

குரல் கொடுத்த சக்திகள் எல்லாம் கூட இந்திராவின் மரணத்திற்கு பின்னால் வாரிசு பாணியில் ஜனநாயக விரோதமாக ராஜிவ் காந்தி பிரதமர் பொறுப்பேற்றதை கண்டிக்கவில்லை. இந்திய அரசியலுக்கு அடித்தளம் கிடையாது என்பது வெட்ட வெளிச்சமாகத் தெரிகிறது. ராஜிவ் காந்திக்கு அடுத்து சோனியா காந்தியை கொண்டுவர நடைபெற்ற முயற்சியும், அருண் நேரு இதேநோக்கில் முயன்று பெற்ற தோல்வியும் இதனை உறுதிப்படுத்திவிட்டன 'இந்தியா சிதறுண்டு போவதை யாராலும் தடுக்க முடியாது' என்ற தோழர். பெரியாரின் கணிப்பு சரியாகப் போகிறது.

## தோழர். பெரியாரின் கணிப்பின் எதிரொலிகள்:-

இங்கிலாந்து இராணுவத் துறையைச் சார்ந்த மனவியல் அதிகாரி லாரன்ஸ் என்பவர் "இந்தியா பல தனி நாடுகளாக பிரிந்து போகும். கி. பி. 2000த்தில் இந்தியா முழுவதும் ஒரே நாடாக இருக்காது." என்று குறிப்பிட்டுள்ளார். *(இந்தியன் எக்ஸ்பிரஸ் 21-10-1982)*

அமெரிக்காவின் பார்வையில் நேரு-இந்திரா காந்தி குடும்பம் இந்தியாவில் ஒற்றுமை மற்றும் நெருக்கத்துடன் தொடர்புடையதாகும். கி.பி.2000ல் ஒன்றுபட்ட இந்தியா சிதறுண்டுவிடும் என்று அங்கு கணித்துள்ளனர். பஞ்சாபில் காலிஸ்தான் தனி நாடு கோரிக்கை எழுவதற்கு முன்பே கணிக்கப்பட்ட கணிப்பு இது. இந்தியா என்பது நாம் சொல்லிக் கொள்வது போல் பெரிய சக்தி கிடையாது. 'காகிதப் புலி' என்ற சீனச் சொற்றொடர் இந்தியாவை சரியாகக் குறிக்கிறது. இந்தியாவின் பலவீனம் பல தீர்க்கப்படாத உள்நாட்டு மற்றும் சர்வதேச சிக்கல்களில் உள்ளது. கவனிக்கக் கூடிய அளவுக்கு பிரிவினை இயக்கங்கள் வளர்ந்துள்ளன. இதனால் இந்தியா பிரிவினைக்குள்ளாவது உண்மையில் சாத்தியமுடையதே.

இதனை சுதந்திரம் மற்றும் ஒற்றுமை, பாதுகாப்பு பற்றிய தேசியக் குழுவின் தலைவர் தர்பாரா சிங் "**Destablisation and Subversion New Challanges**" *(நிலைகுலைப்பு கவிழ்ப்பு புதிய சவால்கள்)* என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். *(பிளிட்ஸ் 18-7-87 இதழ் இதனை வெளியிட்டுள்ளது)*

உலகப் புகழ் பெற்ற ஜெர்மன் நாவலாசிரியர் 'குண்டர்ர் கிராஸ்' 'இந்தியா ஒரு நாடல்ல — அது ஒரு கண்டம்' என்கிறார். 1888ல் ஜான் ஸ்டேரிஹி என்பவர் 'அய்ரோப்பியரின் கருத்துப்படி இயற்கை அமைப்பு ரீதியாக, அரசியல் ரீதியாக சமூக அல்லது மத ரீதியாக ஏதாவது ஒரு வகையில் ஒற்றுமையுடைய இந்தியா என்றும் இருந்ததில்லை. இன்றும் இல்லை.' என்று கருத்து வெளியிட்டார். இந்திய அரசியல் நிர்ணய சபையில் டாக்டர். அம்பேத்கார் "இந்தியா ஒரு தேசம் என்று நம்புவதில் ஒரு பெரிய மயக்கத்தில் (**Delusion**) ஆழ்ந்திருக்கிறோம்" என்பதே என் கருத்து என்றார். கி. பி, 2024-ல் எப்படி இருக்கும் என்பது பற்றிய ஆய்வினை 1974-ல் மிலோவான் டிஜியாஸ்என்ற அறிஞர் வெளியிட்டார். அதில் "இந்தியா மீது எனக்கு அனுதாபம் இருந்தாலும் நீண்ட காலத்திற்கு ஒன்றாகவே இருக்கும் என்று

றன் நம்பவில்லை, இன்றுள்ள மொழிவாரி பிரிவுகள் தென்மேற்கு, தெற்கு தென்கிழக்கு பகுதிகள் அனேகமாக தனியரசுகளாக பிரிந்துவிடும்.'' என்று எழுதியுள்ளார். (இத்தகவல்களை இல்லஸ்ட்ரேடட் வீக்லி 06-09-87 இதழ் வெளியிட்டுள்ளது.)

''வரலாற்றில் மிதக்கும் கணவாய் இருந்து வந்த இந்திய ஒற்றுமைக்கு முதன்முறையாக கடந்த 40 வருடங்களில் ஒரு பொருளாதார உள்ளடக்கம் கொடுக்கப்பட்டு வருகிறது. இன்று நமது சமூக அரசியல் அமைப்பில் ஒரு நம்பிக்கை நெருக்கடிக்கு (**Crisis of Confidence**)இருப்பதாகத் தெரிகிறது' என்று திரு. கே. கே. நர்ராயணன் '**Imagas and Insights**' (பிம்பங்களும் உள் உண்மைகளும்) என்ற ஆங்கில நூலில் எழுதியுள்ளார்.

''இந்தியா மிகவும் ஆட்சி செலுத்தப்பட இயலாத நாடு'' இந்தியா டுடே 15—07—1987ல் கருத்து வெளியிட்டது.) அண்மைக்கால அரசியல் போக்குகளால் தேச ஒற்றுமையைச் சிதைக்கும் வகையில் 'இந்தியா' என்ற உணர்வு வேகமாக மறைந்து வருகிறது. [பிளிட்ஸ் 11—07—1987 இதழ் வெளியிட்டது.]

மத்திய அரசு வருமான வரி, தீர்வை வரி பேர்ன்றவற்றின் மூலம் திரட்டும் நிதியை மத்தியஅரசுக்கு எவ்வளவு, எந்தெந்த மர்நில அரசுக்கு எவ்வளவு என்பதை நிர்ணயிக்கும் அமைப்பின் பெயர் நிதிக்குழு ஆகும். இந்தக் குழு உறுப்பினர்களை நியமனம் செய்யும் முறையிலும், எந்தெந்த மாநிலத்திற்கு எவ்வளவு நிதிஒதுக்குவது என்ற செயல்முறையிலும் மத்திய அரசு தெளிவான நெறிமுறையின்றி ஏகபோகமாக செயல்படுகிறது. நிதிக்குழுவின் செயல்பாட்டு முறை இந்தியா சிதறுண்டு போகும் என்ற வாய்ப்பை ஏற்படுத்தி உள்ளது. [இதனை 'எக்கனாமிக் அண்ட் பொலிடிகல் வீக்லி' 24—8—87 இதழ் வெளியிட்டுள்ளது.]

''தமிழ்நாட்டின் மாநிலக் கட்சிகள் பிரிவினையைக் கைவிட்டுவிட்டன. அந்த விரும்பத்தகாத பிரிவினை கோரிக்கையை நோக்கி மீண்டும் எங்களைத் தள்ள வேண்டாம்'' என்று மறைந்த முதல்வர் எம். ஜி. ஆர். தமிழக சட்ட சபையில் கருத்து வெளியிட்டார். [இதனை 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' 5 பிப்ரவரி, 1983-ல் வெளியிட்டது.]

இந்தியாவில் இராணுவம் உள்ளிட்ட உயர்நிலை அதிகாரிகள் மற்றும் பெரும் அரசியல்வாதிகளின் உறவினர்கள் வெளிநாடுகளில் உள்ளனர். நெருக்கடி வரும்போது இந்த நபர்கள் வெளிநர்டுகளுக்கு குடிபெயர்வதற்கான பொருளியல் அடித்தளம் ஏற்கனவே உருவாகிவிட்டது.

எனவே இந்தியாவில் உள்ள தேசங்களில் தேச விடுதலை முயற்சிகளில் சர்வதேச சக்திகளின் குறுக்கீடு அதிகமாக போகிறது. ஈழ விடுதலை ஆயுதப் போராட்டத்தில் தூண்டப்பட்டு ஆயுதப் பயிற்சி போதையில் மிதக்கும்

இளைஞர்கள் இந்த சர்வதேச சதிகளின் பகடைக் காய்களாக மாறும் ஆபத்தும் இருக்கிறது. இதன் காரணமாக தமிழ் ஈழ விடுதலை போராட்டத்தில் நடந்த தவறுகள் தமிழ்நாட்டில் அரங்கேறும் வாய்ப்பு அதிகரித்துள்ளது. தமிழ் ஈழத்திலோ தனி நாடு கோரிக்கையை மக்கள் ஏற்றுக்கொண்ட பிறகு தான் ஆயுதப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. தாம் வஞ்சிக்கப்பட்டுள்ளதையே தமிழ்நாட்டு மக்கள் உணராத நிலையில் ஆயுத போராட்டத்தை முன்னெடுப்பது அந்த முதல் நிபந்தனை கூட பூர்த்தி செய்யாத நிலையில் எடுக்கப்படும் முயற்சி ஆகும். மக்களின் ஆதரவின்றி ஆயுதப் புரட்சியை முன்னெடுத்தால் என்ன ஆகும்? என்பதற்கு சேகுவராவின் பொலிவியா புரட்சி பாடமாக இருக்கிறது.

## சேகுவாரா என்பவர் யார்?
## பொலிவியா புரட்சி என்பது என்ன?

1928 ஜுன் 14ல் தென் அமெரிக்காவில் உள்ள அர்ஜெண்டினா நாட்டில் பிறந்தவர் எர்னஸ்டோ சேகுவாரா ஆவார். செல்ல பெயரான 'செ' கியூபா புரட்சியில் புனைபெயராக அமைய 'செகுவாரா' என்ற பெயரே பிரபலமாகியது. மருத்துவம் படித்து பட்டம் பெற்று] பின் சமூக சேவை நோக்குடன் தென் அமெரிக்க நாடுகளில் 'செ' சுற்றுப்பயணம் மேற்கொண்டார். தாம் சென்ற பகுதிகளில் சமூக அநீதியை எதிர்ப்பதில் குறிப்பாக கவுடமாலா நாட்டில் நடந்த புரட்சியில் தாமாகவே கலந்து கொண்டார். அது தோல்வி அடைந்த பின்பு மெக்சிகோ சென்றார். அந்நேரத்தில் மெக்சிகோவில், கியூபா புரட்சியை முன்னெடுப்பதற்காக பிடல் காஸ்ட்ரோ என்பவர் தலைமையில் ஆயுதம் தாங்கிய படை 'கிராண்மா' என்ற படகில் கியூபாவுக்கு செல்வதாக இருந்தது. மெக்சிகோவில் பிடல் காஸ்ட்ரோவின் சகோதரர் ரவுல் காஸ்ட்ரோவின் நட்பை பெற்ற 'செ' ஆயுதப்படையில் மருத்துவராக செல்ல முடிவு செய்தார்.

1956 நவம்பர் 25ல் 82 பேருடன் கிராண்மா படகு மெக்சிகோ கடற்கரையை விட்டு புறப்பட்டது. கடுமையான சோதனைகளைக் கடந்து 2 டிசம்பர், 1956ல் அப்படகு கியூபா தீவின் கடற்கரையை தொட்டது. கரையில் இறங்கி தீவினுள் நுழையும் போது வழிகாட்டியாக செயல்பட்டவன் காட்டி கொடுத்ததால் அரச விமானப் படையின் எதிர்பாரா தாக்குதலுக்கு உள்ளாகி, அதிகமான போராளிகளை தொடக்க காலத்திலேயே இழக்க நேரிட்டது.

கியூபாவின் பட்டிஸ்டா மன்னரின் கொடுங்கோன்மையை எதிர்த்து அனைத்து தரப்பு மக்களும் பலவழிகளில் போராடிக் கொண்டிருந்தனர். பிடல் காஸ்ட்ரோவின் ஆயுதப்படை இந்த புரட்சிகர சூழலை பயன்படுத்தி புரட்சியில் வென்று சோசலிச ஆட்சியை அமைத்தது. ஆட்சி பொறுப்பில் கிறிது காலம் அமைச்சராக இருந்த 'செ' தென் அமெரிக்க நாடுகளின் புரட்சியை

தூண்டும் முகத்தான் பொலிவியா புரட்சியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார்.

1966 நவம்பரில் 'செ' மாறுவேடத்தில் பொலிவியாவிற்குள் நுழைந்தார்: 'செ'யின் தலைமையில் நடந்த கொரில்லா போருக்கு கிராம மக்கள் துணை நிற்காதது மட்டுமின்றி சந்தேகத்துடன் கொரில்லாக்களைப் பார்த்தனர். சில சமயம் எதிரியைப் போல் கருதினார்கள். இந்த புரட்சியில் முக்கிய சம்பவங்களை 'செ' டைரியில் எழுதி வந்தார். அதுவே 'பொலிவியன் டைரி' என்ற பெயரில் புத்தகமாக வெளிவந்தது. பொலிவியோ புரட்சியில் தோல்விக்கான காரணங்களை ஒளிவுமறைவின்றி 'செ' அதில் வெளிப்படுத்தி உள்ளார். 1967 அக்டோபர் முதல்வாரத்தில் அரசு படையால் 'செ' கொலை செய்யப்பட்டார். மக்களின் ஆதரவின்றி முன்னெடுக்கப்படும் ஆயுதப் போராட்டம் தோல்வியைத் தழுவும் என்பதற்குப் பொலிவியா புரட்சி பாடமாக இருக்கிறது.

தமிழ் நாட்டு மக்கள் தாம் வஞ்சிக்கப்பட்டுள்ளதையே உணராத நிலையில் தமிழ்நாட்டு விடுதலைக்கு முன்னெடுக்கப்படும் ஆயுதப் போராட்டம் பொலிவியா புரட்சியை விட மோசமான தோல்வியையே தழுவும். ஏனெனில் பொலிவியா புரட்சிக்கு தலைமை தாங்கிய 'செ' கியூபாபுரட்சியில் பங்கேற்று அனுபவம் பெற்ற தியாகச் செம்மலாவார். முன் தயாரிப்புக்கு கியூபா அரசு உதவியும் கொடுத்தது. அனுபவம் மிக்க வீரர்களுடன், தியாகச் செம்மல்களான தலைவர்களுடன் போதுமான முன் தயாரிப்புகளுடன் துவங்கிய பொலிவியா புரட்சி தோல்வியை தழுவியது எனில் இந்த சாதக அம்சங்களின்றி உணர்வு மயமாகத் தூண்டப் பெற்று துவங்கப்படும் தமிழ்நாடு விடுதலைக்கான ஆயுதப் போராட்டம் இன்னும் பரிதாபகரமான தோல்வியை தழுவும் என்பதில் அய்யமில்லை. மக்களின் ஆதரவின்றி முன்னெடுக்கப்படும் ஆயுதப் போராட்டங்கள் தோல்வியடைவது மட்டுமின்றி மக்களின் ஆதரவுடன் பின்னால் நடைபெற வாய்ப்புள்ள ஆயுதப் போராட்டத்தை தாமதப் படுத்தும் என்பதும் முக்கியமான பாடமாகும். மக்களின் ஆதரவுடன் துவங்க பெற்ற தமிழ் ஈழ விடுதலைப் போராட்டம் இந்திய தேசியத்தில் சிக்குண்டு தவிப்பது பற்றி ஏற்கனவே பார்த்தோம். ஆயுதப் போராட்டத்தின் ஊடே புரட்சிகரத் தத்துவத்தை வளர்த்தெடுக்காதது இதற்கு அடிப்படை காரணம் என்பதையும் பார்த்தோம்.

தமிழ்நாட்டின் விடுதலையை பொறுத்தமட்டில் பெரியாரியல் என்ற புரட்சிகர தத்துவம் இருக்கிறது.

தமிழ்நாடு உள்ளிட்ட தேசங்களை அடிமைப்படுத்தி ஆண்டுவரும் 'இந்திய தேசியம்' 'மார்க்சிய லெனினிய' வரையறைக்குட்படாத புதிய பாணி 'தேசியம்' ஆகும். இந்திய அரசு எந்திரமும், பண்பாடும் பார்ப்பனரிடம் சிக்கியுள்ளது: ஒவ்வொரு தேச பண்பாட்டையும் ஒடுக்குவதே பார்ப்பன

இந்திய தேசியப் பண்பாடாகும். பார்ப்பனர்களும், இந்திய தேசிய முதலாளிகளும் இந்திய தேசத்தின் பெயரால் இங்குள்ள தேசங்களை அடக்கி ஆண்டு பன்னாட்டுக் கொள்ளைக் காடாக மாற்றியுள்ளனர். பார்ப்பன இந்திய தேசியத்தை எதிர்த்து பொது உரிமை உடைய பொது உடைமை நோக்கில் தனிநாடு கோரும் வழியே பெரியாரியல் உணர்த்தும் வழியாகும்.

இந்திய தேசியம் நெருக்கடிக்கு உள்ளாகி இருப்பதை அசாம், நாகாலாந்து, மிசோரம், திரிபுரா, பஞ்சாப், காஷ்மீர் பகுதியில் வெவ்வேறு அளவுகளில் நடைபெற்றுவரும் ஆயுதப் போராட்டங்களும், தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகம், மகாராட்டிரம் போன்ற தேசங்களில் வெவ்வேறு அளவுகளில் எழுச்சியுடன் வளர்ந்துவரும் உரிமைப் போராட்டங்களும் உணர்த்துகின்றன. இவ்வாறு தேச விடுதலை எழுச்சிகள் சமச்சீரற்ற தன்மையில் இருக்கின்றன.

தேசிய ஒடுக்கலும் பின்வருமாறு சமச்சீரற்ற தன்மையில் இருக்கிறது இந்தியாவில் உள்ள ஒவ்வொரு தேசத்தின் தொழில் வியாபார விவசாய வளர்ச்சிக்கு வெவ்வேறு அளவுகோல்களைக் கடைபிடித்து, பொருளாதார அரங்கில் தேசிய ஒடுக்கல் சமச்சீரற்ற தன்மையில் அமைந்துவிட்டது. விவசாயத்தில் சில குறிப்பிட்ட மாநிலங்களுக்கு அதிக சலுகை, தொழில் வளர்ச்சியில் சில குறிப்பிட்ட மாநிலங்களுக்கு அதிக சலுகை, போக்குவரத்தில் வேறு சில மாநிலங்களுக்கு சலுகை, இயற்கை கனி வளங்களுக்கான (பெட்ரோல்) ராயல்டி தொகையிலும் மாநிலங்களுக்கு மாநிலம் வேறுபாடு கடைபிடிக்கப் பட்டு ஒட்டு மொத்தமாக பொருளாதாரத் துறையில் தேசிய ஒடுக்கல் சமச்சீரற்ற தன்மையில் அமைந்து உள்ளது. உண்மையில் இந்தியாவில் உள்ள ஒவ்வொரு தேசத்தின் பொருளாதாரமும் 'இந்திய தேசிய பொருளாதாரம்' என்ற நுகத்தடியில் சிக்கி உள்ளது. 'இந்திய தேசிய' பொருளாதாரம் என்பது பார்ப்பன 'இந்திய தேசிய' பன்னாட்டுக் கூட்டுக்கொள்ளையை அடித்தளமாகக் கொண்டது. இந்த கூட்டுக்கொள்ளையை அதிகரித்தல், தேசங்களிலுள்ள வெவ்வேறு அளவுகளிலான உரிமைப்போராட்டங்களை மழுங்கடித்தல் என்ற அடிப்படையில் மேலே சொன்ன சமச்சீரற்ற தன்மை அமைந்துள்ளது.

இந்தியாவில் உள்ள தேசங்களில் 'இந்திய தேசிய'த்தின் பேயரால் நடைமுறைப்படுத்தபடும் தேசிய நசுக்கல் சமச்சீரற்ற தன்மையில் நடந்துவருகிறது மேலும் தேச விடுதலை எழுச்சிகளும் சமச்சீரற்ற தன்மையில் நடந்து வருகின்றன. அய்ரோப்ப கண்டத்தை பல அம்சங்களில் ஒத்திருக்கும் இந்தியத் துணைக் கண்டத்தில் அனைத்திந்திய அளவில் இயக்கம் கட்டி புரட்சி நடத்துவதற்கான பொருளியல் அடித்தளம் கிடையாது. மாறாக இந்தியாவில் உள்ள ஒவ்வொரு தேசமும் தனது விடுதலைக்காக போராடுவதும் மற்ற தேசங்களின் விடுதலை முயற்சிக்குப் பரிமாற்ற ஆதரவு-உறவு என்ற நிலையில் தொடர்பு கொள்வதுமே நடைமுறை சாத்தியமாகிறது. தேசங்களின் விருப்பமான கூட்டமைப்பிற்குப் பெரியாரியல் என்றுமே உடன்பட்டதாகும். இதனைப் பின்வருமாறு தோழர். பெரியார் கூறுகிறார்.

''எல்லா உணர்ச்சிகளையும் விட சுய மரியாதை உணர்ச்சியே மேலானதும், மதிக்கத்தக்கதுமாகும் என்பதின் தத்துவத்தை உணர்ந்தவர்களுக்கு இந்த இயக்கத்தில் உண்மையான சந்தேகமே தோன்ற இடமிருக்காது. அது இன்றைய தினம் வேண்டுமானால் ஏதோ சிறு வகுப்பாருடன் போராடத் தோன்றியதாகத் தோன்றலாம். இதுவே அல்ல அதன் லட்சியம்; ஒரு இயந்திரத்தை சுழற்றும் போது முதலில் சுற்றும் சிறு வேகம் போல் இன்று ஒரு சிறு வகுப்பார் உணர்ச்சியோடு போராடுவதாகக் காணப்படுவது மற்றபடி. பின்னால் அது உலகத்தை ஒன்றுபடுத்த உலக மக்களையே ஒரு குடும்பச் சகோதரர்களாகச் செய்யும் முயற்சியின் போதுதான் அதன் உண்மைச் சக்தியும், பெருமையும் வெளியாகும். குடி அரசு 17-2-1929

இதே நோக்கில்தான் 'இந்திய தேசிய'த்தையும், 'இந்திய தேசிய'த்தின் பெயரால் பிழைப்பு நடத்தும் பார்ப்பன-பனியா-மார்வாடிக் கும்பலையும் எதிர்க்கிறது பெரியாரியல்.

பார்ப்பன-பனியா-மார்வாடிக் கும்பலின் துணையோடும் பன்னாட்டுக் கூட்டுக் கொள்ளை இங்கு நடைபெறுகிறது. எனவேதான் தமிழ் மொழியின் தமிழ் நாட்டின், தமிழ் இனத்தின் விடுதலை பார்ப்பன-'இந்திய தேசிய'-முதலாளி-பன்னாட்டு கூட்டு எதிர்ப்பில் அடங்கியுள்ளது.

குண்டு துளைக்காத கவசம் அணிந்து, குண்டு துளைக்காத கண்ணாடி கூண்டிற்குள் நின்று, குண்டு வரஇயலாத தொலைவில் மக்களை நிறுத்தி முன்னாள் பாரத பிரதமர் 'ராஜிவ்' உரையாற்ற வேண்டிய அளவுக்கு 'இந்திய தேசிய' சுதந்திரம் நெருக்கடியில் சிக்கியுள்ளது. இந்தப் பின்னணியில் ராஜிவுக்கு பின் பிரதமரான வி. பி. சிங் தற்காலிக சமநிலையில் காலம் தள்ள வேண்டி உள்ளது. ஒன்றுபட்ட இந்தியாவில் ஓரளவு 'ஜனநாயக' காற்றை சுவாசிக்க கடைசியாக கிடைத்துள்ள நிலையற்ற சந்தர்ப்பமே தேசிய முன்னணி ஆட்சியின் துவக்ககாலத்தின் முக்கிய அம்சமாகும். இதன் சர்வதேச பின்னணியை பின்னர் பார்ப்போம்.

தமிழ்நாட்டில் காவிரிப் பிரச்சினை, மீனவர் பிரச்சினை, விவசாயப் பிரச்சினை, மின்சாரப் பிரச்சினை, பல்வேறு திட்டங்கள் புறக்கணிப்பு, வறுமை, வேலையின்மை உள்ளிட்ட அனைத்து பிரச்சினைகளும் பார்ப்பன-இந்திய தேசிய - பன்னாட்டுக் கூட்டு ஒடுக்கு முறையுடன் தொடர்புடைய பிரச்சினைகளாகும். இந்தப் பிரச்சினைகளுக்காக அந்தந்த துறையில் பாதிக்கப்பட்ட மக்கள் தனித்தனியாக வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு அளவுகளில் போராடி வருகின்றனர். இந்தப் போராட்டங்களில் தம்மை பிணைத்துக் கொண்டு பிரச்சினைகளின் அடிப்படையை தெளிவுபடுத்தி பார்ப்பன 'இந்திய தேசிய' - பன்னாட்டுக் கூட்டு எதிர்ப்பு நோக்கில் ஒருங்கிணைந்து முன்னெடுப்பதன் மூலமே தமிழ்நாடு விடுதலைக்கு ஆதரவாக மக்களை மாற்ற முடியும். தேர்தல் அரசியல் கட்சிகளுக்கு போர்க்குணமுள்ள தொண்

டர்கள் குறைந்துவருவதும், இந்த தலைவர்களின் போலித்தன போக்குகளை கூர்மையாக்கி வரும் பிரச்சினைகள் அம்பலமாக்கி வருவதும் கருத்தில் கொள்ளவேண்டிய அம்சங்களாகும். பிரச்சினைகளை முன்னெடுப்பதற்கான போராட்ட வடிவங்களை வளர்த்தெடுக்க இயலாத அளவுக்கு மேற்சொன்ன இயக்கங்கள் தடுமாறுவதும் தெளிவாகிவருகின்றது. அதே நேரத்தில் எந்த வித ஆக்க பூர்வமான பலனும் இல்லாமல் கடுமையான இழப்புகளை சந்தித்து வந்துள்ள மார்க்சிய - லெனினிய கூடாரங்கள் தம் தத்துவங்களை கடுமையான விமர்சனங்களுக்கு உட்படுத்தவேண்டிய நெருக்கடிக்கு உள்ளாகும் அளவிற்குப் பிரச்சினைகள் கூர்மை அடைந்து வருகின்றன. கடுமையான விமர்சனப் போராட்டத்தை நடத்தி சர்வதேசத் தூண்டில்முள்களால் சிக்குண்ட அறிவு நாணயமுள்ள மார்க்சிய-லெனினிய போராளிகளை வென்றெடுப்பதற்கு ஏற்ற தருணம் இதுவேயாகும். இத்தகைய விமர்சன போராட்டங்களை நடத்துவது, மக்களின் போராட்டங்களில் பங்கெடுத்து அவர்களைத் தெளிவுபடுத்தி பார்ப்பன இந்திய தேசிய எதிர்ப்புநோக்கில் ஒருங்கிணைப்பது போன்றவை எல்லாம் தன் முனைப்பு, சாகசம், தனிநபர் சாகசம் போன்ற பலகீனங்களுக்கு இடம் கொடுக்காத கடுமையான உழைப்பு தரவேண்டிய 'சூத்திர' வேலையாக இருக்கிறது. இந்த கடுமையான பாதையிலிருந்து தெளிவு அற்ற இளைஞர்களை திசைதிருப்பும் கவர்ச்சிகர பாதையாக ஆயுதப் போராட்டத்தை உடனே முன்னெடுக்கும் பாதை இருக்கிறது. இது பார்ப்பன இந்திய தேசிய பன்னாட்டு கூட்டு சக்திகளுக்கு ஏற்ற பாதையாகவும் இருக்கிறது. இந்த கூட்டுசதிகளைப்பற்றி அடுத்து பார்ப்போம்.

''இந்தியா சிதறுண்டு போவதை யாராலும் தடுக்க முடியாது'' என்று தோழர் பெரியார் கணித்தார். தோழர் பெரியாரின் கணிப்பு சரியானது என்பதற்கான அறிகுறிகள் தெளிவாக தெரிந்துவிட்டன இந்தியா சிதறுண்டு போகும் நிலையில் பார்ப்பனர்கள் என்ன நிலை எடுப்பார்கள்?

இந்த வினாவிற்கான விடையைப் பெற பார்ப்பனர் போக்குபற்றி புரிந்து கொள்ள வேண்டும்.

இங்கு பொதுவுடைமை இயக்கம் முளைவிட்டபோது அதில் ஊடுருவி தலைமை பீடத்தைப் பற்றி பொதுவுடைமை இயக்கங்கள் மறந்தும் பொது-உரிமைபற்றி கவலைப்படாமல்உண்மையான பொதுவுடமைநோக்கில் செயல் படா வண்ணம் மலடாக்கி விட்டனர் பார்ப்பனர். பின்னர் மனித உரிமை இயக்கங்கள் முளைவிட்ட போது அதிலும் ஊடுருவி தலைமைப் பீடத்தைக் கைப்பற்றி மனித உரிமை பறிப்பில் உள்ள வருணாச்சிரமப் போக்கை மறைத்து உண்மையான மனித உரிமை முயற்சிகளை திசை திருப்பி விட்டனர். வெள்ளைக்காரர்களுடன் ஊடல்-கூடல் உறவு கொண்டிருந்த, இந்திய தேசிய பார்ப்பனர்கள் இரண்டாம் உலகப் போரில் ஹிட்லர் வெற்றி பெறுவதாக-தோன்றிய போது ஜெர்மானிய ஆதிக்கத்தின் கீழ் இந்தியா வந்துவிடும் எனக் கருதி ஜெர்மன் மொழியை படிக்க ஆரம்பித்தவர்கள் பார்ப்பனர்கள். எனவே

தவிர்க்க இயலாமல் எது நடந்தாலும் அதையும் தமக்குச் சாதகமாக்கிக் கொள்ள முயலும் இயல்பு உடையவர்கள் பார்ப்பனர்கள் எனவே இந்தியா சிதறுண்டு போகும் போது சிதறும் பகுதிகளில் தமது ஆதிக்கத்தைத் தக்க வைத்துக் கொள்ளும் முயற்சிகளில் பார்ப்பனர்கள் ஈடுபடுவதில் அதிசய-மில்லை. மேலும் சர்வதேச அரங்கில் இந்தியா சிதறுண்டு போவதில் ஆர்வ-முள்ள அந்நிய சக்திகளுக்கும் பார்ப்பனர்கள் மிகவும் நேச சக்திகளாக விளங்கினால் அது ஆச்சரியமல்ல. இந்திய மார்க்சிய லெனினியம் இந்தப் பார்ப்பன முயற்சிக்கு மிகவும் துணையாக இருக்கிறது. பார்ப்பனரைத் தமிழராகக் கருதி ஆரிய எதிர்ப்பினை முனை மழுங்கச் செய்து தனித் தமிழ் நாடு கோரும் முயற்சி பார்ப்பனீயத்தின் ஆதிக்கத்தைக் காக்க வைக்கும் முயற்சியேயாகும்.

தேசிய இன விடுதலை முயற்சியில் எழுச்சிகரமாக நடைபெறும் போது சர்வதேச அரங்கில் வல்லரசுகள் எடுக்கும் நிலைப்பாடுகளை ஏற்கனவே பார்த்தோம், இதைத் தவிர்த்து இந்தியாவில் நடைபெறும் தேசிய இன விடு-தலைப் போராட்டங்களை ஆளும் பார்ப்பன-இந்திய தேசிய - பன்னாட்டு கூட்டுக் கொள்ளையர்கள் தங்களது ஆதிக்க நிர்வாகத்தைக் கொண்டு பிளவு படுத்தி ஒழிக்க முயல்வார்கள். ஈழ விடுதலைக் குழுக்கள் பல பிளவுகளாக உடைந்ததிலிருந்து இதனை நாம் புரிந்து கொள்ளலாம். இதனை 'ரா' தான் செய்தது என்று ஏற்கனவே 'விடுதலை' வெளிப்படுத்தியுள்ளது. மேலும் 'ரா' வின் சதிக்கு சான்றுகள் இந்தியாவிலும் உண்டு. இந்திய அரசின் 'ரா' (உளவுத்துறை) தீவிரவாதிகளை தமது பக்கம் இழுத்து போட்டிகுழுக்களை உருவாக்கி தேசிய இனவிடுதலைப் போராட்டதை ஒழிக்க முயன்றதற்கு ஆதாரங்களுண்டு. அவை பின்வருமாறு:-

அண்மையில் காலிஸ்தான் தீவிரவாதக்குழு ஒன்று நவீன ராக்கெட் லான்சர்களைப்பயன்படுத்தி இந்திய இராணுவ முகாமின் சுவரை சேதப் படுத்தியது. இதில் ராணுவ வீரர்கள் யாரும் சொல்லப்படவில்லை, இந்த லான்சர்கள் தீவிரவாதிகளுக்கு எப்படி கிடைத்தன என்பதுபற்றிய ஆதாரங்-கள்' ரா' வின் செயல்பாட்டை நமக்கு உணர்த்தும்.

## ஆதாரம் 1- சண்டே 8-5-88

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலிலிருந்து 'ரா' ராக்கெட் லான்சர்-களை இந்தியாவிற்கு வரவழைத்தது. 1987 நவம்பர் 19ல் டில்லி விமான நிலையத்தில் விமான லக்கேஜிலிருந்து சில புல்லட்டுகள் வெளிப்பட்டன.

சுங்க சோதனையின்போது அதில் ஆயுதங்கள் இருப்பது வெளிப்பட்டது பயங்கரவாதிகளின் ஆயுதங்களை சுங்க அதிகாரிகள் கைப்பற்றிவிட்டதாக மகிழ்ந்தபோது ஒரு 'ரா' அதிகாரி அதைத்தங்களுடையது என்று சொல்லி எடுத்துச் சென்று விட்டார். இதை அறிந்த பத்திரிக்கையாளர் 'தீரன்பகத்' என்பவர் பத்திரிக்கையில்இதனை வெளிப்படுத்திய பின்னும்கூட எம்.பி க்கள்

இதை நாடாளுமன்றத்தில் எழுப்ப பயந்தார்கள். சில பத்திரிக்கையாளர்களும் இதைப் பிரசுரிக்க பயந்தார்கள்.

## ஆதாரம் 2- சண்டே 15-5-88

'ரா' ஆயுதங்களைக் கடத்தியது என்பதை தீரன்பகத் வெளியிட்டார். இராஜ்ய சபையில் ஜெனரல் அரோரா இந்த ஆயுதங்கள் பஞ்சாப் பயங்கரவாதிகளுக்கு வழங்கப்பட்டது என்று தெரிவித்தார். தீரன் பகத்தின் தகவலை அமைச்சர் ப சிதம்பரம் ஒப்புக்கொண்டார். ஜெனரல் அரோராவின் தகவலை அவர் மறுத்தார்.

## ஆதாரம் 3- சண்டே 15-5-88

'ரா' காபூலிலிருந்து இறக்குமதிசெய்த ராக்கெட் லான்சர்கள் பஞ்சாப் தீவிரவாதிகளுக்குக் கொடுக்கப்பட்டதாகத் தெரிகிறது

## ஆதாரம் 4- இல்லஸ்ட்ரேடட் வீக்லி 10-7-88

பஞ்சாப் பயங்கரவாதிகளை முறியடிக்க அரசாங்கமே ஒரு பயங்கரவாத குழுவை உருவாக்கியது. இதற்கு 'சந்தோஷ்சிங்யா' என்பவர் தலைமை தாங்கினார். இவர் ஏற்கனவே கொலைக்குற்றத்திற்கு மூன்று ஆண்டுகள் சிறைத்தண்டனை அனுபவித்தவர். இவர் 40 காலிஸ்தான் போராளிகளைக் கொன்றதாக தெரிகிறது.

## ஆதாரம் 5- கரண்ட் 19-3-88
## குல்தீப் நய்யார் கட்டுரை :-

தமிழ்நாட்டில் பிரிவினை முயற்சி புதுப்பிக்கப்பட்டு பயங்கரவாதம் தலைதூக்கலாம். பலருக்கு வெடிமருந்து செய்யவும், துப்பாக்கிகளை இயக்கவும் தெரியும். இலங்கை போராளிகள் அரசியல் கட்சிகளில் அடிமட்டத்தில் ஊடுருவி உள்ளனர். தமிழ்நாடு பஞ்சாப் ஆகலாம். மேற்கூறிய ஆதாரங்கள் 'ரா' வின் செயல்பாட்டை தெளிவாக்குகின்றன. 'புதிய ஜனநாயகம்' 31-5-88 இதழும் இதனை வெளிப்படுத்தியது. தமிழ் நாட்டிலும் சாகச முயற்சி மற்றும் பார்ப்பனர்களை தமிழர்களாக ஏற்றுக்கொள்ளுதல் சர்வதேச அரசியல்-பொருளாதாரம் வல்லரசுகளில், சூழ்ச்சி போன்றவற்றை தெரிந்துகொள்ளாத பல குழுக்கள் மூலம் பஞ்சாப்போன்ற நடவடிக்கைகளில் 'ரா' செயல் படலாம் என்பதை எச்சரிக்கையுடன் கவனத்தில் கொள்ள வேண்டும்.

தமிழ்நாட்டிலும் 'ரா' துணையுடன் தனித்தமிழ்நாடு குழு செயல்படுவதை புதிய ஜனநாயகம் 1-3-90 வெளிப்படுத்தியது. 'ரா' வின் சதிவேலைகளைஅம்பலப்படுத்திய இளம் பத்திரிகையாளர் தீரன் பகத் 1989ல் சாலை

விபத்தில் இறந்தார். இது விபத்தல்ல. மாறாக, 'ரா' செய்தகொலை என்ற தகவலை எம். பி. யானவுடன் அகாலி தலைவர் 'மன்' வெளிப்படுத்தினார். 'ரா' அக்ரகாரம் என்பதை 'இந்தியா டுடே' வெளியிட்டுள்ளது.

ஆயுதப்போராட்டத்திற்கும் தேசவிடுதலைப் போராட்டத்திற்கும் உள்ள தொடர்பை விளக்காமல் துப்பாக்கி தூக்கவில்லை என்பதற்காக பெரியாரின் இயக்கத்தை அமைதி வழி இயக்கமாக சித்தரித்து பெரியாரை சரியாகப்புரிந்து கொள்ளாமல் முட்டாள்தனமாக கொச்சைப்படுத்தி பார்ப்பனரைத் தமிழராகக் கருதி முன்னெடுக்கப்படும் தமிழ்நாட்டு விடுதலைக்கான ஆயுதப் போராட்டம் பார்ப்பன இந்திய தேசிய பன்னாட்டுக் கூட்டு சதிகளுக்கு ஏதுவான பாதையாகும்.

ஆயுத போராட்டம் இன்றி சமாதான முறையில் தனிநாடு காண்பது என்பது முயற்கொம்பே. மாறாக அறிவியல் அணுகுமுறையில் எப்போது எப்படி என்பது தான் முக்கியமாகும்.

தமிழ்நாடு தனிநாடு ஆவது மூலமும் பிரச்சினைகள் தீர்ந்துவிடாது என்பதை தனிநாடாக்கி மக்கள் விரோத அரசுகளைக் கொண்ட பங்களாதேஷ் போன்றநாடுகள் உணர்த்துகின்றன. இதற்கான அடிப்படைக் காரணம் வருமாறு. தெளிவான புரட்சிகர தத்துவமின்றி சர்வதேச அரசியல் சூதாட்டத்தில் சிக்கி தனிநாடாகி சர்வதேச பொருளாதார கொள்ளைகளுக்கு இடமளிக்கும் மக்கள் விரோத அரசுகள் அமைந்ததே அடிப்படைகாரணம். எனவே தனித்தமிழ்நாடு ஆனபின் சர்வதேச அரசியல் பொருளாதார சிக்கல்களுக்கு பலியாகாமல் உண்மையான பொது உரிமை பொதுஉடமை நோக்கில் தமிழ்நாட்டு விடுதலை முன்னெடுப்பது இன்னும் சிக்கலான பணியே ஆகும். எனவே தனித்தமிழ் நாடு என்பது ஒரு முடிவே கிடையாது. மாறாக அது ஒரு திருப்புமுனையே ஆகும் சர்வதேச அரங்கில் ஏகாதிபத்தியத்திற்கும் பார்ப்பனீயத்திற்கும் உள்ள நெருக்கம் அதிகரித்து வருகிறது. எனவே இந்திய துணைக்கண்டத்தில் பார்ப்பன ஏகாதிபத்திய எதிர்ப்போடு முன்னெடுக்கப்படும் தேசவிடுதலை எழுச்சிகள் உலகில் மற்ற பகுதிகளின் ஏகாதிபத்திய-பார்ப்பன எதிர்ப்போடு முன்னெடுக்கப்படும் தேசவிடுதலை முயற்சிகளுடன் பரிமாற்ற ஆதரவு கொள்ள வேண்டும். சர்வதேச அரங்கில் உள்ள தேசவிடுதலை முயற்சிகளில் ஏகாதிபத்திய மற்றும் பார்ப்பன சார்பு நோக்கிலான பிற்போக்கு கூறுகள் வீழ்த்தப்படவேண்டும். இந்த 'மக்கள் விடுதலை' நோக்கில் செய்யப்படும் முயற்சிகள் காரணமாக விடுதலை யாரும் தேசங்களின் விருப்பமான கூட்டமைப்பே உலகளாவிய சோசலிசத்திற்கு வழிவகுக்கும்

ஆயுதப் போராட்டத்தின் போது பின்வரும் உண்மையையும் கருத்தில் கொள்ள வேண்டும். இந்தியாவில் உள்ள ஒவ்வொரு தேசமும் வெவ்வேறு அளவுகளில் ஒடுக்கப்பட்டு வருகின்றன. ஊதியத்தையும், வேலைத்தன்மையையும் கணக்கில்கொண்டு பார்க்கையில் மாநில அரசு ஊழியர்கள் சூத்திரர்

களாகவும், மத்திய அரசு மற்றும் பொதுத்துறை ஊழியர்கள் பார்ப்பனர் களாகவும் உள்ளனர். காவல்துறையிலும் இதேநிலைதான். அதிலும் இந்தியாவிலேயே குறைந்த வருமானம் உடைய அரசு ஊழியர்கள் தமிழ்நாட்டு அரசு ஊழியர்களாவார்கள். எனவே இந்தியாவிலேயே குறைந்த வருமானம் உடைய காவல்துறையினர் தமிழ்நாட்டு காவல்துறையினர் ஆவர். எனவே பார்ப்பன இந்திய தேசியத்தால் அவர்களும் பாதிக்கப்பட்டவர்களே. மேலும் தேசிய விடுதலை போராட்டங்கள் ஆயுதப் போராட்டக் கட்டத்தை அடையும்போது அவற்றை ஒடுக்க இந்தக் காவல்துறை பயன்படாது என்பதையும் ரா்ணுவமும் மற்ற மத்திய அரசுப் படையுமே ஒடுக்கும் என்பதையும் ஏற்கனவே நடந்துவரும் ஆயுதப் போராட்டங்கள் உணர்த்துகின்றன.

மேலும் தேச விடுதலை எழுச்சிகள் ஒரு குறிப்பிட்டக் கட்டத்தை அடையும் போது ராணுவத்திலும்,அதன் பிரதிபலிப்பு வெளிப்படும். சோவியத் 'அக்டோபர் புரட்சியின்' போது ராணுவத்தில் ஒரு பிரிவு 'புரட்சியில்' இணைந்தது, 'புரட்சியின்' வெற்றிக்கு முக்கிய காரணங்களுள் ஒன்றாக அமைந்ததை நினைவில் கொள்ளவேண்டும்.

வஞ்சிக்கப்படும் தமிழ்நாடு பிரச்சாரத்தையும் பார்ப்பன எதிர்ப்பையும் பகுத்தறிவு பிரச்சாரத்தையும், பின்னிப் பிணைத்து முன்னெடுப்பதன் மூலம் தமிழ்நாட்டு மக்களை ஆதரவு புலமாக வென்றெடுப்பதும், சர்வதேச சூழ்ச்சி சக்திகளை முறியடிப்பதும் மக்கள் விடுதலை என்ற நோக்கில் முன்னேறுவதற்கு பெரிதும் உதவும்.

இந்த முறையில் முன்னேறும் போது தமிழ் ஈழத்தைப் போல் தமிழ் நாட்டு மக்களும் தனிநாடு கோரிக்கைக்கு ஆதரவாக மாற போவது நிச்சயம். அப்போது ஆயுதப் போராட்டங்கள் முன்னெடுக்க வேண்டியது கட்டாயமான வேலையாகும். அறிவியல் நோக்கில் வன்முறையை கையாளுதல் என்ற பெரியாரியல் அணுகுமுறையில் பார்ப்பனர்கள் இந்திய தேசிய முதலாளிகள் இவர்களின் பன்னாட்டு பங்காளிகள் மற்றும் இந்திய தேசிய அடிவருடியான துரோகிகள் ஆகியோரை எதிர்த்து மக்கள் ஆதரவுடன் முன்னெடுக்கப்படும். ஆயுதப் போராட்டமே பெரியாரியல் தத்துவ வழிமுறையாகும்.

## தோழர். பெரியார் கூறுகிறார் ...

நான் ஆயுதப் பிரயோகம் செய்ய வேண்டும் என்றும், அக்கிரகாரம் கொளுத்தப்படவேண்டும் என்றும் சொன்னதும்,சொல்லி வருவதும் உண்மை. ஆனால் அவை இப்பொழுதல்ல, அதற்கான காலம் இன்னும் வரவில்லை. வரக்கூடாதென்று ஆசைப்படுகிறேன். இப்படிப்பட்ட காரியங்களில் ஈடுபடுவதற்கு காலம் எப்போது வரும் என்றால் அரசியல் சட்டத்தை கொளுத்துவது முதலிய இன்னும் நான்கைந்து கட்டங்கள் நடத்தி அவற்றால் ஒன்றும் பயனில்லை. வெற்றிக்கு பயன்படவில்லை என்று கண்டு பலாத்காரத்தைத்

தவிர வேறு வகையில்லை என்ற முடிவுக்கு வந்தபிறகுதான் நாம் அவற்றில் இறங்கவேண்டியவர்களாக இருக்கிறோம். — விடுதலை 25-11-1957

எனவே பெரியாரியலின்படி முன்னெடுக்கப்படும் போராட்டங்கள் மக்களை 'விடுதலை'க்கு ஆதரவுப் புலமாக வென்றெடுக்கும் போராட்டங்கள் ஆகும்.

அமெரிக்காவும், சோவியத் நாடும் இன்று சர்வதேச அரங்கில் பொருளாதாரத்தில் நலிவடைந்து வருவதன்காரணமாக இச்சக்திகளின் அரவணைப்பில் இருந்த சர்வாதிகார அரசுகள் (எடுத்துக்காட்டு: சிலி, ருமேனியா போன்றவை) வேகமாக கவிழ்ந்து வருகின்றன. எனவே 'ஜனநாயகப்' போர்வை உடைய, மக்கள் விரோதத்தை உள்ளடக்கமாகக் கொண்ட அரசுகள் மூலம் பன்னாட்டுக் கொள்ளையை நடைமுறைப் படுத்துவதில் சர்வதேச ஆதிக்கச் சக்திகள் முயன்று வருகின்றன. ஆனால் கூர்மையாகி வரும் பிரச்சினைகளும் மக்கள் போராட்டங்களும் இம்முயற்சியை சீர்குலைக்கும் வல்லமை உடையவையாகும். எனவே சர்வதேச ஆதிக்கச் சக்திகளின் கடைசி தந்திரமாகவே சர்வாதிகார ஆட்சி அமையும்.

தெற்காசியப் பகுதியில் இந்தியா மிகவும் சக்தி வாய்ந்த நாடாகக் கருதப்படுகிறது. உலகிலுள்ள மிகப் பெரிய இராணுவங்களில் இந்திய தேசிய இராணுவமும் ஒன்றாகும். பார்ப்பதற்கு மிகப்பெரிய கட்டிடமாகத் தெரியும் இந்தியா, சரியான அடித்தளம் இல்லாமல் கட்டப்பட்ட கட்டிடமாகும். இதனைத் தெளிவாக அறிந்திருந்த முன்னாள் பிரதமர் ஜவஹர்லால் நேரு ''இந்தியாவின் வரலாறு முழுவதும் ஒற்றுமை என்பது கனவாகவே நிறைந்திருந்தது என்றும், அதனை நடைமுறையில் உருவாக்க எல்லா இந்திரும் முயல வேண்டும்.'' என்று வலியுறுத்தினார். (இல்லஸ்ட்ரேட் வீக்லி 6—9—87) இதே கருத்தை 29-3-88 தேதியிட்ட இல்லஸ்ட்ரேட் வீக்லி இதழில் 'கலவரக் குழப்பத்தில் இந்தியா' என்ற தலைப்பில் வெளிவந்த கட்டுரையில் பின்வரும் கருத்து காணப்படுகிறது. ''கடந்த காலத்திலும், நிகழ் காலத்திலும் நடந்துவரும் பெருமுயற்சிகள். கற்பனையான இந்தியாவை உயிருள்ள, நிஜமாக மாற்றச் செய்யும் முயற்சிகள் ஆகும்.'';

'இந்திய தேசியம்' என்பது பார்ப்பனர்கள் வெள்ளைக்காரர்களுடன் சேர்ந்து உருவாக்கிய சதியாகும். உண்மையான தேச விடுதலை முயற்சிகள் சிதைக்கப்பட்டு மனித உரிமை முயற்சிகள் கெடுக்கப்பட்டு 1947-ல் 'இந்திய தேசம்' சுதந்திரம் பெற்றது. இந்த சுதந்திரத்தின் போது கம்யூனிஸ்டுகள் உள்ளிட்டு அனைவரும் மயங்கிய போது தோழர். பெரியார் மட்டுமே தெளிவாக, ''இது பார்ப்பன-பனியா, மார்வாரி, முல்தானிக் கும்பலுக்கு செய்து கொடுத்த (உரிமை மாற்று ஏற்பாடு) 'மேட் ஓவர்' என்ற உண்மையை எடுத்துச் சொன்னார். 'இந்திய தேசிய' சுதந்தர நாளை துக்க நாள் என்று

பிரகடனப்படுத்தினார். அண்ணா போன்றோர் அப்போது இந்த அறிவிப்பை எதிர்த்தார்கள். தோழர். பெரியாரின் கணிப்பு எவ்வளவு சரியானது என்பதை இன்றைய நிகழ்ச்சிகள் நிரூபிக்கின்றன.

இந்த பார்ப்பன-'இந்திய தேசிய' கொள்ளையும், பன்னாட்டு கூட்டுடன் இங்கு கொள்ளை நடைபெறப் போவதையும் தோழர். பெரியார் தொலை நோக்குப் பார்வையுடன் எச்சரித்தார்.

''வடநாட்டு வணிக முதலைகள் - மேல்நாட்டு வணிக வேந்தர்களுக்கு கங்காணிகளாக தென்னாட்டு மக்களை சுரண்டுவதற்கு திட்டமிட்டு வேலை செய்யப்பட்டு இதற்கு தேசிய முலாம் பூசப்படுகிறது. குடியரசு 27-12-1948

நம் வாழ்வில் நாம் பயன்படுத்தும் பொருள்கள், நாம் காணும் பொருள்கள் அனைத்தும் பார்ப்பன-இந்திய தேசிய-பன்னாட்டு கூட்டுக் கொள்ளையரின் உற்பத்திப் பொருள்களாகும். ஆங்கிலேயர் காலத்தில் வெளியேறிய செல்வத்தை விட அதிக செல்வம் இப்போது இந்தியாவை விட்டு வெளியேறுவது இந்தக் கூட்டுக் கொள்ளையின் சிறப்பு அம்சமாகும்.

கடைந்தெடுத்த பிற்போக்கான காந்தி போதைக்கு போலி முற்போக்கான 'நேரு போதை' என்ற பூச்சு பூசி அந்த அடிப்படையில் 'இந்திய தேசியம்' சுதந்திரம் கண்டது. இது எவ்வளவு ஜனநாயக விரோத அம்சம் கொண்டது என்பதை இந்திய அரசியல் சட்டம் உருவான விதம் தெளிவுபடுத்தியது. சுதந்திர இந்தியாவில் பொதுமக்கள் வாக்கெடுப்பு மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்டு இந்திய அரசியல் நிர்ணய சபை உருவாகவில்லை. மாறாக ஆங்கிலேய ஆட்சியில் பார்ப்பனர்களும், பணக்காரர்களும் படித்தவர்களும் மட்டுமே ஓட்டுப்போட்டு தேர்ந்தெடுத்த பிரதிநிதிகளால் உருவாக்கப்பட்டதுதான் இந்திய அரசியல் நிர்ணய சபை.

1947-ல் நேரு வெளியிட்ட அறிக்கையில் இந்தியாவில் உள்ள பிராந்தியங்கள் குழுவாக இணைவதற்கு விருப்பம் அளிக்க வேண்டுமென்றும், அப்படி இணைந்த குழுக்கள் பின்னர் விரும்பினால் தனியாக பிரிந்துசெல்லும் விருப்பமாக அது நீடிக்கப்படலாம் என்றும் குறிப்பிட்டுள்ளார். (சண்டே 10-5-1987) 1942-ல் டெல்லியில் கூடிய காங்கிரசு காரியக் கமிட்டியில் நிறைவேறிய தீர்மானம் ''எந்த வரையறைப் பகுதியும் தனது விருப்பத்திற்கு எதிராக இந்திய கூட்டாட்சியில் இணையுமாறு கட்டாயப்படுத்தப்பட மாட்டாது'' என்பதாகும்.

இந்திய அரசியல் நிர்ணய சபை உருவாக்கிய இந்திய அரசியல் சட்டத்தில் மேற்கண்ட தீர்மானத்திற்கு சாவு மணி அடிக்கப்பட்டது. 'இந்திய தேசிய' சுதந்திரப் போராட்டத்தில் மக்களை கவருவதற்காக வைக்கப்பட்ட 'முற்போக்கு' தீர்மானங்களை எல்லாம் பிற்காலத்தில் சாவு மணி அடித்து ஒழித்தது, மலடாக்கியது 'இந்திய தேசிய'த்தின் சாதனைகளாகும். சுதந்திரத்திற்குப் பின் இத்தகைய சாவுமணிகள் அடிக்கப்பட்ட வேகத்தைப் பார்த்து

காந்தியே 'காந்தி போதை'யிலிருந்து (தன் கொள்கையிலிருந்து) தெளிவுற ஆரம்பித்தார். வகுப்புரிமையை எதிர்த்த தென்னாட்டு பார்ப்பனர்களைக் காந்தி கண்டித்தார். 'நேருவும் பட்டேலும் காந்தியை பெரும் தலைவலியாக கருதினார்கள். திராவிடர் கழகத்துடன் காந்தி நெருக்கமாகத் தொடங்கியதை 1948 குடியரசு வெளிப்படுத்தியுள்ளது.

''திராவிடர் கழகத்தாருக்குள் ஒரு சிலருக்கு காந்தியாரிடம் நட்பு பெறவும், அவரிடம் தங்கள் கொள்கைக்கு ஆதரவு தேடவும் ஆசை துடித்துக் கொண்டிருந்தது. 1948-ஆம் ஆண்டு முடிவதற்குள் இது விஷயத்தில் ஒரு குறிப்பிடத்தகுந்த மாறுதல் கூட திராவிடர் கழகத்தில் ஏற்படலாம் போல் நிலைமை இருந்தது.'' (குடி அரசு 7-12-48)

''காந்தியார் உயிரோடு இருந்திருப்பாரானாலும் இந்த ஏழு, எட்டு மாத அனுபவத்தைக் கொண்டு ஏதாவது அவர் செய்யக் கூடும். அவரும் கொல்லப்பட்டு விட்டார்.'' (குடி அரசு 10-4-48). எனவேதான் வாழ்ந்த காந்தியை கண்டித்த தோழர். பெரியார் செத்த காந்தியைப் பாராட்டினார். [பிற்போக்கான கொள்கைகளை கடைபிடித்த காந்தியை கண்டித்த தோழர். பெரியார், காந்தி தனது இறுதி காலத்தில் திருந்தி வந்து கொண்டிருந்ததால் அவர் இறந்த பின் பாராட்டினார்.

இந்திய தேசிய 'சுதந்திர' ஆட்சியில் (1947-க்குப்பின்) 'நேரு குடும்பம்' என்ற போதை வளர்த்தெடுக்கப்பட்டது. இந்திய தேசியத்திற்கு இதுமுக்கிய தூணாக அமைந்தது. தத்தம் மாநிலத்தில் சொந்த செல்வாக்குடன் இருந்த தமிழ்நாடு காமராசர், ஆந்திர சஞ்சீவ ரெட்டி, கர்நாடக நிஜலிங்கப்பா, மேற்கு வங்க அதுல்யா கோஷ் போன்றவர்களும், 'இந்திய தேசிய'த்தின் மாநிலத் தூண்களாக விளங்கினர். அஸ்திவாரம் இல்லாத 'இந்திய தேசிய' கட்டடம் இத்தூண்களின் பலத்திலேயே நின்றது. எனவேதான் நேரு செத்த பின்னர் தென்னாட்டு மக்களுக்கு அறிமுகமில்லாதவரான லால் பகதூர் சாஸ்திரி காமராசரின் முயற்சியால் பிரதமராக முடிந்தது. சாஸ்திரி மறைந்த பின் இத்தலைவர்களின் ('இந்திய தேசிய' மாநிலத் தூண்களின்) துணையோடு இந்திரா பிரதமரானார்.

தாமாகவே நீண்ட காலத்தில் நொறுங்க இருந்த ஏக இந்திய அரசியல் குறுகிய காலத்தில் நொறுங்குவதற்கான வாய்ப்பை ஏற்படுத்திய பெருமை மறைந்த முன்னாள் பிரதமர் இந்திரா காந்தியையேச் சாரும். தனது சுயநல ஆதாயத்திற்காக 'இந்திய தேசிய'த்தின் மாநிலத் தூண்களாக விளங்கிய காமராசர் போன்ற தலைவர்களை அரசியல் ரீதியில் இந்திரா ஒழித்தார். 1966-ல் காங்கிரசில் ஏற்பட்ட பிளவிற்கு பார்ப்பனர், பார்ப்பனரல்லாதார் பிரச்சினையும் காரணமாக இருந்தது. ('நெருக்கடியான ஆண்டுகள்' - குல்தீப் நய்யார்) ஏக இந்திய அரசியலமைப்பு நேரு குடும்ப போதை என்ற ஒரே தூணில் மட்டுமே நிற்குமாறு மற்ற தூண்களை வீழ்த்தினார் இந்திரா.

'இந்திய தேசியம்', பார்ப்பன எதிர்ப்பு மற்றும் உண்மையான தேச உரிமைப் போராட்டங்களால் நெருக்கடிக்கு உள்ளானதை அறிந்த இந்திரா 'பிந்தரன் வாலா' க்களை உருவாக்கி 'இந்திய தேசிய' எதிர்ப்பு முயற்சிகளை சீர்குலைத்தார். இவை இந்திராவின் தற்காலிக அரசியலுக்கு பலன் தந்தாலும் தொலைநோக்கில் சமாளிக்க முடியாத மிகப்பெரும் அபாயமாக மாறப்-போவதை அவரின் அரசியல் தெளிவின்மை காரணமாக அவர் உணரவில்லை நேரு அளவிற்கு வரலாற்றுப் பார்வையில் அரசியல் தெளிவு இந்திராவுக்கு கிடையாது.

சர்வதேச அரசியல் சூதாட்டத்தில் இந்திராவின் நிலைப்பாடு பிடிக்காத ஆதிக்கச் சக்திகள் இந்திரா வளர்த்துவிட்ட பிரச்சினையைப் பயன்படுத்தி இந்திராவைக் கொலை செய்தார்கள் என்பதை தக்கர் அறிக்கை உள்ளிட்ட செய்திகள் உணர்த்துகின்றன. அரசியல் ஞான சூன்யமான ராஜீவ் காந்தி இந்திராவின் கருப்பையில் அவதரித்தார் என்ற ஒரே தகுதியைவைத்து பிரதம ரான நிகழ்ச்சி ஏக இந்தியா, 'நேரு குடும்ப போதை' என்ற தூணில் மட்டுமே தாங்கப்படும் உண்மையை உறுதிப்படுத்தியது.

முந்தைய ஜனதா ஆட்சியில் சர்வதேச அரங்கில் ஒன்றுக்கொன்று ஒத்துப் போகாத நலன்களின் பிரதிநிதிகள் இருந்ததையும், ஜனதா கவிழ்ந்ததற்கு இது முக்கிய காரணமாக இருந்ததையும் கவனத்தில் கொள்ள வேண்டும். ஆனால் இப்போது தேசிய முன்னணி ஆட்சி அமைத்துள்ள வேளையில், சர்வ தேச அரங்கில் அமெரிக்க-சோவியத்-சீன பகைமைகள் குறைந்துவருவதையும் புதிய பாணி சர்வதேச அரசியல் அரங்கேறும் மாற்றுக் கட்டம் (Changing Phase) என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

'இந்திய தேசிய' அரசியல் அமைப்பு 'நேரு குடும்ப போதை' என்ற ஒரே தூணில் மட்டும் நின்று கொண்டிருந்தது. இந்த தூணையும் எதிர்-பார்த்ததற்கு மேலாக சீக்கிரமாக செல்லரித்து, பலவீனமாகி விழும் வாய்ப்பை ஏற்படுத்திய பெருமை ராஜீவ் காந்தியைச் சாரும். இது இந்தியாவில் ஏற்கனவே நிறைய மூலதனத்தைப் போட்டு கொள்ளை அடித்து வரும், மேலும் கொள்ளையடிக்க திட்டமிட்டு வரும் பன்னாட்டு கொள்ளை சக்தி-களின் அடிவயிற்றைக் கலக்கியுள்ளன. எனவே ஏக இந்திய அரசியலமைப்பை காப்பதில் இந்தக் கொள்ளைச் சக்திகளின் நலன் அடங்கியிருக்கிறது. சர்வ தேச அரங்கில் அமெரிக்கா-சோவியத்-சீனா பகைமைகள் குறைந்து வருவதன் காரணமாக இக்கொள்ளைச் சக்திகள் ஏக இந்திய அரசியல் அமைப்பைக் காக்க குறைந்த பட்ச கூட்டு முயற்சியில் ஈடுபட்டால் வியப்பில்லை. இவர்-களின் கங்காணி இயக்கங்களும், தலைவர்களும் இதற்குப் பயன்படுவர். இம் முயற்சிகளை நடைமுறைப் படுத்த வல்லரசுகள் தீவிரமாக இறங்கிவிட்டன என்பதை நிகழ்கால நடப்புகள் உணர்த்துகின்றன.

## பார்ப்பனர்கள் துரோகம் - எச்சரிக்கை:-

ஆனால் இந்த கூட்டு முயற்சியை அர்த்தமற்றதாக்கும் வகையில் இந்தியாவில் உள்ள தேசங்களில் சமுதாயம், பொருளாதாரம், மொழி, கலாச்சாரம் உள்ளிட்ட அனைத்து துறைகளிலும் பிரச்சினைகள் கூர்மையாகி வருகின்றன. போராட்டங்களும் கூர்மையாகி வருகின்றன. இதன் காரணமாக ஏக இந்திய அமைப்பு சீர் குலைந்தாலும்,சீர்குலைவுக்குப் பின்னும் தமது பொருளாதாரக் கொள்ளையை பாதிப்பின்றி தொடர 'இந்திய தேசிய' எதிர்ப்பு முயற்சிகளிலும் இந்தப் பன்னாட்டு கொள்ளைச் சக்திகளின் ஊடுருவல் உள்ளது: 'இந்திய தேசிய'த்தை பாதுகாக்கும் முயற்சிகளில் பார்ப்பனர்கள் முன்னணியில் இருப்பது போலவே, 'இந்திய தேசிய' எதிர்ப்பு முயற்சிகளிலும் பார்ப்பனர்கள் முன்னணிக்கு வரத் தொடங்கிவிட்டனர். 'இந்திய தேசிய' சீர்குலைவு வேகத்திற்கு ஏற்றார்போல் பார்ப்பனர்கள் 'இந்திய தேசிய' எதிர்ப்பு முயற்சிகளில்-அதாவது தனி நாடு போராட்டங்களில் - முன்னணிக்கு வருவர். எந்த தேசிய இனத்திலும் சாராத தன்மை காரணமாக இவர்களுக்கு எந்த தேசத்தின் மீதும் இயற்கையாகவே பற்று இருக்க வாய்ப்பில்லை; எனவே பார்ப்பனர்கள் துரோகம் செய்ய இயற்கையாகவே அதிக வாய்ப்புண்டு.

தேசிய முன்னணியின் 'ஜனநாயக பரிசோதனை' தோல்வி பெற்றதும் பன்னாட்டு கொள்ளைச் சக்திகளின் ஆதரவுடனும்,இராணுவத் துணையுடன் புதிய பாணி சர்வாதிகார ஆட்சி இங்கு இன்னும் சில வருடங்களில் அரங்கேற போவது உறுதி. இது ஈழப் பிரச்சினையிலும் கடுமையான விளைவுகளை ஏற்படுத்தும். அதாவது இப்போது ஈழ விடுதலை முயற்சிக்கு கிடைத்துள்ள நெருக்கடி குறைவான காலம் தற்காலிகமானதே. அதன்பின் கடுமையான காலம் காத்திருக்கிறது. இந்தச் சர்வாதிகார ஆட்சியில் பலன்பெறுகின்ற பக்கத்திலும் பார்ப்பனர்கள் இருப்பார்கள். எதிர்க்கின்ற 'தியாகி'கள் மத்தியிலும் பார்ப்பனர்கள் இருப்பார்கள். காலாவதியான அரசியல்வாதிகளை முன்னிறுத்தி எதிர்க்கின்ற பார்ப்பன தியாகிகளுக்கு கொடுமை எதுவும் நடக்காது. நெருக்கடியை கடுமையாக எதிர்த்து இந்திராவை 'துக்ளக்'கில் கொச்சைப்படுத்திய துக்ளக் சோ எந்தவித சித்ரவதைக்கும் உள்ளாகவில்லை. கம்யூனிஸ்டு தலைவர் பி.இராமமூர்த்தி (அய்யரைப்) போலவே 'இந்திய தேசிய' சர்வாதிகாரத்திலும் கூட பார்ப்பனர்கள் சித்திரவதைக்குள்ளாக மாட்டார்கள். அதே நேரத்தில் 'சோ' போல் சர்வாதிகார எதிர்ப்பு வீரர்களாக திகழ முடியும். பார்ப்பனர்களுக்கு டெல்லி அதிகார பீடத்திலும் சர்வதேச அரங்கிலும் உள்ள தொடர்புகள் காரணமாக சர்வாதிகார எதிர்ப்பு நாடகத்தில் பிரமிக்கத் தக்க போலி சாகசங்களை அரங்கேற்றுவார்கள். உண்மை எதிர்ப்பை கெடுப்பார்கள். பெரியாரியல் மட்டுமே இந்த சூழ்ச்சியை முறியடிக்கும் திறன் கொண்டது.

பெரியாரியல் என்ற தத்துவ வலிமையின் பெருமையை புரிந்து கொள்ள சர்வதேச அரசியல் பொருளாதார சூழ்ச்சிகளைப் பற்றியும், தேச விடுதலை

முயற்சிகளுக்கு இதனால் ஏற்படும் ஆபத்துகள் பற்றியும் தெளிவு பெற வேண்டும். இதற்கு ஈழ விடுதலை முயற்சியை எடுத்துக்காட்டாக கூறலாம்.

இன்று உலகில் வல்லரசு நாடுகளான அமெரிக்காவும், சோவியத்தும் பொருளாதாரத்தில் நலிவுற்று உள்ளன. இதனால் தங்களுக்குள் இருக்கும் ஆதிக்கப் போட்டி மனப்பான்மையை குறைத்துக்கொண்டு பங்காளிகளாக மாறி உலக நாடுகளை சுரண்ட ஆரம்பித்துள்ளது. சமீபத்தில் சோவியத்து நாடு தனது சோசலிச கொள்கையிலிருந்து மாறி நானும் ஒரு பன்னாட்டுக் கொள்ளைச் சக்தி என்பதனை வெளிப்படுத்தியது. சோவியத் நாட்டில் லித்வேனியா, எஸ்தோனியா, ஆர்மீனியா, அஜெர்பெய்ஜான், ஜார்ஜியா போன்ற தேசங்கள் தனிநாடுகளாக அறிவித்துள்ளன. அறிவிக்க உள்ளன. இந்த நேரத்தில் சோவியத் நாட்டின் அரசு பிரதிநிதிகள், இந்தியாவில் தேசிய இன பிரச்சினைகள்எப்படி கையாளப்படுகின்றன என அறிந்து சென்றுள்ளனர். மேலும் சோவியத் நாடு மேற்கத்திய நாடுகளுடன் கூட்டு சேர்ந்து தொழில், வியாபாரம் துவக்கியுள்ளது. சோவியத்தும்,அமெரிக்காவும் தங்களது ராணுவ செலவு அதிகரிப்பின் காரணமாக, தங்களிடம் உள்ள அணுஆயுதங்களை ஒழிப்பதில் முன்நின்று அணு ஆயுத ஒழிப்புக் கொள்கையை தூக்கி பிடித்து வருகின்றன. இவைகள் அவ்விரண்டு நாட்டிற்கும் ஏற்பட்டுள்ள கடும் நெருக்கடியின் விளைவால் வந்தநடவடிக்கையாகும். அடுத்து இவ்விரண்டு நாடுகளும் பங்காளிகளாக செயல் படுவதற்கு முன்னுதாரணமாக தங்களுக்குள் 'இராணுவப் பயிற்சி கூட்டணி' அமைத்து 'பயிற்சி'யை பரிமாறிக் கொண்டு வருகிறது. மேலும் இந்தியாவில் இருந்து இராணுவ பயிற்சிக்கு சோவியத்திற்கு மட்டுமே அனுப்பப்பட்டு வந்த 'இந்திய இராணுவ அதிகாரிகள்' தற்போது அமெரிக்காவிற்கும் பயிற்சிக்கு அனுப்பப்படுகின்றனர். கடந்த ஆண்டுகளில் சோவியத்து இராணுவத்தளபதியும், அதன்பின் அமெரிக்க ராணுவத் தளபதியும் இந்தியாவிற்கு வந்து போனதை கருத்தில் கொள்ளலாம்.

இப்போக்குகளின் விளைவால், இந்தியாவில் இனி அமெரிக்க-சோவியத் சுரண்டலுக்கு அவரவருக்கு உள்ள செல்வாக்கு விகிதத்தில் 'கதவு' திறந்து விடப்படும். தங்களுக்குள் இருந்த போட்டியின் காரணமாக, இந்தியாவில் நடைபெற்று வந்த தேசிய இன போராட்டங்களை தங்கள்நலனுக்காக தூண்டி வந்த வல்லரசு நாடுகள் குறைத்துக் கொள்ளும். அமெரிக்காவின் தூண்டுதலின் பேரில் நடைபெற்று வந்த கூர்க்கா, திரிபுரா, மிசோ, பஞ்சாப், நாகாலாந்து பிரச்சினைகள் தற்போது அடங்கியும், வலிமை குறைந்தும் வருகின்றன.

இந்திய-சீன நல்லுறவு வளரும் வேகத்திற்கு ஏற்றாற்போல, இதுவரை சீன சார்பு மார்க்சிய-லெனினிய குழுக்களுக்கும், நாகா, திரிபுரா விடுதலை கொரில்லாக்களுக்கும் கிடைத்து வந்த உதவிகள் வேகமாக குறையும்.

உலக நாடுகளை சுரண்டுவதற்கு போட்டி போட்டு வந்த பன்னாட்டுக் கொள்ளை சக்திகள் தங்களது சுரண்டலை, போட்டியின்றி நடத்துவதற்கு பங்காளியாகி பின்வரும் செயல்களில் இறங்கும் எனக் கூறலாம்.

1) தேசிய இனங்களின் விழிப்புணர்வால், இந்தியாவில் தங்களது விடுதலைக்கு போராடும் குழுக்களிடம், பன்னாட்டு கொள்ளைச் சக்திகள் ஊடுருவி தங்கள்-தங்கள் சார்பு போக்கை உறுதி செய்து கொள்ளும்.

2) இந்திய தேசிய சுதந்திர ஆட்சியில் சமூக, அரசியல், பொருளாதார அரங்குகளில் நடைபெறும் மக்கள் போராட்டங்களை ஒடுக்க இராணுவத்தை பயன்படுத்துவது அதிகமாகி வருகிறது. ஆரம்பத்தில் நாகாலாந்து, மிசோரம் திரிபுரா போன்ற வடகிழக்கு பகுதிகளில் செயல்பட்ட இந்திய இராணுவம் இப்போது பஞ்சாப், காஷ்மீர் என்று தனது செயற்பாட்டு தளத்தை விரிவாக்கி உள்ளது. இவை தவிர வெளிநாட்டு கொள்கையிலும் இந்தியாவின் செல்வாக்கை வெளிப்படுத்த இலங்கையிலும், மாலத் தீவிலும் இராணுவம் பயன்படுத்தப்பட்டது. இத்தகைய அரசியல்வாதி முடிவுகளால் ஏற்பட்ட நடவடிக்கைகளில் இராணுவம் பெற்ற இழப்பு பிரயோசனமானதுதானா? என்ற வாதங்கள் இராணுவ உயர் அதிகாரிகள் மட்டங்களில் ஏற்பட்டுள்ளதாக பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன. பொதுவாக உலக அரங்கில் எந்த ஒரு நாட்டிலும் இராணுவ சர்வர்திகாரம் அரங்கேறுவதற்கு முன் இப்படிப்பட்ட போக்குகள் நடைபெறுவதுண்டு. மேலும் எப்பாடு பட்டாவதுஒன்றுபட்ட இந்தியாவை தமது சுரண்டல்தளத்தை காப்பதில் பன்னாட்டு கொள்ளைச் சக்திகளின் நலன்கள் அடங்கியுள்ளன.

எனவே இந்தியாவில் நடைபெறும் 'தேசிய இனங்களின்' போராட்டங்களை பயன்படுத்தி, இந்தியாவின் தலைமை பலவீனப் பட்டபோது, காலாவதியான அரசியல்வாதிகளை முன்னிறுத்தி 'இந்தியாவில் இராணுவ சர்வர்திகாரத்தை' பன்னாட்டுக் கொள்ளைச் சக்திகள் அமைத்துக் கொள்ளும். இவற்றிற்கு ஏற்கனவே சோவியத்திலும், அமெரிக்காவிலும் இராணுவப் பயிற்சி பெற்ற அதிகாரிகள் பெரிதும் துணை நிற்பார்கள்.

3) ''இந்தியா சிதறுண்டு போவதை யாராலும் தடுக்க முடியாது'' என்ற தோழர். பெரியாரின் கூற்றுப்படி இந்தியாவின் தலைமை பலவீனம் அடையும் போது தேசங்கள் தனித்தனியாக சிதறும். அப்போது பன்னாட்டு கொள்ளைச் சக்திகள் தங்களது சார்பு நிலையின் காரணமாக சிதறுண்டு போன இந்தியாவின் தனித்தனி நாடுகளில் தனது சுரண்டலை போட்டியின்றி நடத்திக்கொள்ளும்.

ஈழ விடுதலையை தமது உயிர் லட்சியமாக பிரகடனப்படுத்திய ஈழ விடுதலை குழுக்களில் பல ராசிவ்-செயவர்த்தனா ஒப்பந்த அமுலில் தத்தமக்கு முக்கியத்துவம்வேண்டும் என்ற சண்டையில் ஈடுபடும்அளவுக்கு கீழிறங்கியதை கணக்கில் கொண்டால் சர்வதேச சூழ்ச்சி வலைகளில் சிக்குண்ட தெளிவான தத்துவம் இல்லாத இயக்கங்கள் மேலே சொன்ன போக்குகளுக்கு துணை நிற்பார்கள் என்பது தெளிவாகும். 'தனி நாடு-ஆயுத போராட்டம்' என்றவுடன் மயங்கும் தெளிவற்ற இளைஞர்கள் இந்த இழிசெயல்களுக்கு சுயநினைவின்றியே பலியாவார்கள்.

சர்வதேச அரசியல் பொருளாதாரம் மற்றும் வல்லரசுகளின் சுரண்டல்
தந்திரங்கள் போன்றவற்றில் தெளிவுபெற்று சரியான தத்துவத்தின் துணை-
யுடன் மட்டுமே இந்த பேரபாயத்திலிருந்து பிழைத்து வெற்றியை ஈட்டுவது
இயலும். உலகளாவிய, விரும்பி இணைந்த சோசலிச கூட்டமைப்பை
நோக்கி முன்னேற முடியும்.

✖ ✖ ✖ ✖ ✖ ✖ ✖ ✖ ✖

## இணைப்பு

## பார்ப்பன-'இந்திய தேசிய'-பன்னாட்டுக் கூட்டுக் கொள்ளை என்பது என்ன?

இத்தகைய பன்னாட்டுக் கொள்ளைக்கு வழிவிடும் டில்லி அதிகாரப்
பீடங்கள் பார்ப்பனச் சேரிகள் என்பதைப் பார்த்தோம். முன்னாள் பிரதமர்
ராஜிவ் காந்தியின் 'புதிய பொருளாதாரக் கொள்கை' இந்தப் பன்னாட்டுக்
கொள்ளைக்கான வாய்ப்புகளை வரைமுறையின்றி கூட்டியுள்ளது. இப்போது
அரங்கேறியுள்ள தேசிய முன்னணி ஆட்சியில் உலக வங்கி போன்ற சர்வதேச
ஈட்டிக்கார நிறுவனங்களில் முக்கிய பொறுப்புகளில் இருந்தவர்கள் இந்திய
தேசிய ஆட்சியில் முக்கிய பொறுப்புகளுக்கு இடம் பெயர்ந்துள்ளனர்.

இந்த இந்திய தேசிய கூட்டு நிறுவனங்களில் இட ஒதுக்கீடு அமுல்படுத்-
தப்படுவதில்லை. எனவே-இவை பார்ப்பன ஆதிக்கத்தில் உள்ள அக்ரகாரங்-
களாக உள்ளன. இதில் சாதாரண கிளார்க் வேலைக்கே ஆயிரக்கணக்கில்
சம்பளமும், மருத்துவம், குடியிருப்பு, பயணச்செலவு உள்ளிட்டு பல சலுகை
கள் நிறைய உண்டு. தமிழ்நாட்டில் உள்ள பெரும்பான்மையான கிராமங்-
களில் அந்தந்த கிராமத்து மிகப்பெரிய 'நிலப் பிரபுக்களின்' வருட வருமான
மானது மேற்சொன்ன நிறுவனங்களில் பணிபுரியும் 'பாட்டாளி'களின் வருட
வருமானத்தை விட குறைவே ஆகும்.

டி.வி. எஸ். போன்ற பார்ப்பனர்கள் இந்திய தேசிய முதலாளிக் கும்பல்
வரிசையில் இடம் பெற்று வளர்ந்து வருவது இந்திய தேசிய சுதந்திர சாதனை
ஆகும். இவ்வாறு பார்ப்பன இந்திய தேசிய கும்பல் பன்னாட்டு ஆதிக்கச்
சக்திகளுடன் சேர்ந்து கொள்ளையடிப்பதையும், இந்தக் கொள்ளை காரண-
மாக பல்லாயிரக் கணக்கான கோடிரூபாய் செல்வம் சட்ட பூர்வமாகவும்,
சட்டத்திற்கு முரணாகவும் வெளியேறிக் கொண்டிருப்பதை பேர்பாக்ஸ்,
போர்ஸ், உளவு கடத்தல் போன்ற ஊழல்கள் வெளிக் காட்டிவிட்டன. இது-
வே பார்ப்பன இந்திய தேசிய கூட்டுக்கொள்ளையாகும். இந்தக் கூட்டுக்
கொள்ளையின் சிறப்பம்சமாக இந்தியாவில் உள்ள ஒவ்வொரு தேசத்திலும்

தேசிய ஒடுக்கல் சமச்சீரற்ற தன்மையில் இருப்பதையும், இந்தக் கூட்டுக் கொள்ளைக்கு எதிரான விடுதலை எழுச்சிகள் சமச்சீரற்ற தன்மையில் இருப்பதையும் ஏற்கனவே பார்த்தோம் பார்ப்பனர்களும், பார்ப்பனீயமும் சர்வ தேச அரங்கில் ஆதிக்க சக்தியாக வளர்ந்துவருவது இக்கூட்டுக் கொள்ளையின் சர்வதேச பரிமாண வெளிப்பாடு ஆகும்.

டில்லி ஆட்சி அதிகாரம் முழுவதும் பார்ப்பனமயமாக இருந்து வந்துள்ளது. இன்னும் குடியரசுத் தலைவர், துணைக் குடியரசுத் தலைவர், தலைவர், தலைமை நீதிபதி, முப்படைத் தளபதி, தேர்தல் தலைமை அதிகாரி, ரிசர்வ் வங்கி தலைவர், ஆடிட்டர் ஜெனரல், ரா, சி. பி. ஐ. (CBI) IB போன்ற புலனாய்வுத் துறை தலைமைப் பதவிகள் உள்ளிட்ட அனைத்து முக்கிய பதவிகளிலும் பார்ப்பனர்களே உள்ளனர். ராஜிவ் ஆட்சிக்குப் பின் அரங்கேறியுள்ள தேசிய முன்னணி ஆட்சியில் பிரதமர் வி. பி. சிங். துணைப் பிரதமர் தேவிலால் பார்ப்பனரல்லாதோரே. மத்திய அமைச்சரவையில் பார்ப்பனர் எண்ணிக்கை முன்பு இருந்ததைவிட குறைவாக இருக்கிறது. ஆனாலும் அப்பார்ப்பனர்கள் முக்கிய பொறுப்புகளில் செல்வாக்கு மிக்கவர்களாக உள்ளனர். தேசிய முன்னணி ஆட்சி வந்தவுடன் உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதியாக பார்ப்பனரை நியமித்துள்ளது. உலக வங்கியில் பெரிய அதிகாரியாக இருந்த பார்ப்பனர் இப்போது நிதி அமைச்சருக்கு நிதிச் செயலாளராக உள்ளார். புலனாய்வுத் துறை ('ரா') தலைமைப் பொறுப்பில் இருந்து ஓய்வு பெற்ற வட நாட்டு பார்ப்பனர் கிரிஸ் சந்திர சக்சேனா தேசிய முன்னணி ஆட்சியில் மத்திய அமைச்சரவை செயலக ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார். இலங்கை இந்திய ஒப்பந்த சமயத்தில் இவர் 'ரா' தலைமைப் பொறுப்பில் இருந்தார். இவரின் தம்பி நரேஷ் சந்திரா இப்போது உள்துறை செயலராக உள்ளார். தென்னாட்டு பார்ப்பனர்களை விட வடநாட்டு பார்ப்பனர்களுக்கு முக்கியத்துவம் கூடியுள்ளது. [தமிழ்நாட்டு பார்ப்பன பத்திரிகைகள் தமிழ்நாடு புறக்கணிக்கப் படுவதாக முனகத் தொடங்கியிருப்பதன் இரகசியம் இதுதான்.]

இவை தவிர தேசிய முன்னணி ஆட்சியும் பாரதீய ஜனதா கட்சி எனும் பார்ப்பனர் நலன் காக்கும் R. S. S. கட்சியின் ஆதரவில்தான் தொங்கிக் கொண்டிருக்கிறது. இந்திய அரசின் 'ஜீவநாடி'களாக பார்ப்பனர்கள் இருப்பதும், இந்திய அரசின் முக்கிய பொறுப்புகளில் அமரும் பார்ப்பனரல்லாதார் இந்த பார்ப்பன 'ஜீவநாடி'களை அனுசரித்தே இருக்கும் நெருக்கடியில் உள்ளனர் என்பதும் முக்கியமான உண்மையாகும்.

ஆட்சி அதிகாரம் பார்ப்பன ஆதிக்கத்தில் இருக்கும் சூழ்நிலையில் இந்திய தேசிய பன்னாட்டு கூட்டுக் கொள்ளை வரைமுறையின்றி நடைபெறுகிறது. நாம் அன்றாடம் பயன்படுத்தும் விவசாய உரம், பூச்சி மருந்து, சோப்பு, பவுடர், பற்பசை, மருந்து உள்ளிட்ட பெரும்பாலான பொருட்கள் இந்திய தேசிய பன்னாட்டு கூட்டு நிறுவனங்களின் உற்பத்திப் பொருள்களாகும். 1984 'இந்து' ஆங்கில இதழ் சர்வேயின்படி இந்தியாவில் 70% தொழில் வணிகங்கள் பன்னாட்டு கூட்டில் நடைபெறுவன ஆகும்.

## "தோழர். பெரியார்" - வார்த்தை உபயோகம் பெரியார் தொண்டர்களுக்கு ஒரு விளக்கம்:-

பெரியார் மையம் தனது வெளியீடுகளில் 'தோழர். பெரியார் ஈ.வெ.ரா' என்று பயன்படுத்துவதன் காரணத்தை பெரியார் மைய வெளியீடுகளான 'பெரியாரியல் பார்வையில் இந்திய தேசியம்', '—— துக்ளக் போன்றவை தி. மு. க.வை எதிர்ப்பதன் ரகசியம் என்ன?' என்ற இரண்டு புத்தகங்களிலும் சுருக்கமாக வெளியிட்டிருந்தது.

பெரியார் மைய வெளியீடுகளை பாராட்டி வரும் மடல்களில் சிலவற்றில் 'தோழர் பெரியார் ஈ. வெ. ரா.' என்ற வார்த்தை உபயோகம் 'படிப்பதற்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது', 'மனம் மிகவும் துன்பப்படுகிறது, 'மனம் ஒப்புக் கொள்ளவில்லை'. 'மிகுந்த வேதனை அடைகிறேன்' என்பனபோன்று எழுதும் அளவில் விளைவுகளை ஏற்படுத்தியதாக தெரிய வருகிறது.

இது தவிர ''ஏன் தோழர் ஈ. வெ. ரா.'' என்று போடாமல் 'தோழர் பெரியார்' என்று போட வேண்டும்?'' என்றும் விமர்சனங்கள் வந்துள்ளன. எனவே 'தோழர் பெரியார்' என்ற வார்த்தை உபயோகம் தொடர்பான ஒரு விளக்கத்தை வெளியிடுவது சரியாக இருக்கும் என்று தெரிகிறது.''

தோழர் பெரியார் தனக்குப் பின் வாரிசாக குறிப்பிடுவது யாரை என்பது அவராலேயே கூறப்பட்டுள்ளது. ''எனக்குப் பிறகு யார் என்று கேட்கிறார்கள் இது அர்த்தமில்லாத கேள்வி. எனக்குப் பிறகு எனது கொள்கைகள் அவைகளைக் கூறும் எனது நூல்கள்தான். ஆணவமாக இதைச் சொல்லவில்லை, உண்மைநிலை அதுதான்''

(பெரியார் 87-வது பிறந்தநாள் விழா மலர் - பக்கம் 40)

தோழர். பெரியாரின் கொள்கைகளைத் தாங்கிய பல ஏடுகளும், நூல்களும் இப்போதே மறைந்துவிட்டன. அவற்றை தேடி எடுத்து பாதுகாப்பதற்கு இதுவரை முறையான முயற்சிகள் இல்லை. தற்போது கைவசம் இருக்கும் பழைய ஏடுகள் அழிவை நெருங்கிக் கொண்டிருக்கின்றன. அவைகளை நுண் படம் மூலம் **(Micro Film)** மூலம் பாதுகாக்க இதுவரை முறையான முயற்சிகள் எடுக்கப்படவில்லை

தோழர்கள் காரல் மார்க்ஸ், லெனின் போன்றோருக்கு நூல் வரிசை தொகுப்பு **(Col ected Works)** வெளிவந்துள்ளன. மத்திய அரசு தோழர்கள் காந்தி, நேரு போன்றோருக்கு அவர்களின் அனைத்து பேச்சுகளும் எழுத்துகளும் உள்ளடக்கியதான 'கூட்டுத் தொகை நூல் வரிசை' வெளியிட்டுள்ளது. மகாராட்டிரத்தில் தோழர். டாக்டர் அம்பேத்கார் தொண்டர்களின் சீரிய செயல்பாட்டின் விளைவாக அம்மாநில அரசு அவரின் 'கூட்டுத்தொகை நூல் வரிசை' வெளியிட்டுள்ளது. ஆனால் திராவிடக் கட்சிகள் ஆட்சியிலிருந்தும் தமிழ்நாட்டில் தோழர். பெரியார் அவரின் அனைத்து பேச்சுக்களும், எழுத்துக்களும் உள்ளடக்கியதான 'கூட்டுத் தொகை நூல் வரிசை' வெளிவர

பெரியார் தொண்டர்கள் இதுவரை முயற்சிகள் செய்ததாக தெரியவில்லை.

இது ஒரு புறம் இருக்க, ஒரு பக்கம் 'ஆராய்ச்சி' என்ற பெயரில் தோழர் பெரியாரை குறித்தும், அவர் இயக்கத்தை குறித்தும் 'உண்மைக்கு' மாறான தகவல்களை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஆராய்ச்சியாளர்கள் வெளியிட்டு வருகின்றனர். இவற்றிற்கு இன்றுவரை முறையான மறுப்பு வெளியாகவில்லை என்பது வெட்கக் கேடான உண்மையாகும்.

தோழர்: பெரியாரை 'வணக்கத்துக்குரிய', 'மதிப்புக்குரிய', 'பாராட்டுக்குரிய, என்பன போன்ற இன்னும் பல வார்த்தைகளை போட்டு பாராட்டிக் கொள்ளும் பெரியார் தொண்டர்கள், அவருக்கு ஆண்டுக்கு ஆண்டு பிறந்த நாளும்-நினைவு நாளும் கொண்டாடி, நூற்றாண்டு விழாவையும் கொண்டாடிய பெரியார் தொண்டர்கள் உயிரோடு வாழ்ந்து கொண்டிருக்கும் இக்காலக் கட்டத்தில்தான் மேற்கூறிய 'கொடுமைகள்' நடந்து கொண்டிருக்கின்றன.

தோழர்: பெரியாருக்கு 'கூட்டுத் தொகை நூல் வரிசை' இல்லாத நிலையில் 'தோழர் பெரியாரின்' சிந்தனைகளை தேர்ந்தெடுக்கப்பட்ட நூல்வரிசையாக (Selected Works) மூன்று பெரிய புத்தகங்களை வெளியிட்டதில் அதனை தொகுத்த குழுவின் தலைவரான தோழர். ஆனைமுத்துவுக்கு சிறப்பிடம் உண்டு. ஆனால், இச்சிறப்பைக் கொண்டு அவரும் தோழர் பெரியாரையும், அவர் தம் கொள்கைகளையும் கொச்சைப்படுத்த துவங்கிவிட்டார் (இதனை பெரியார் மையம் வெளிப்படுத்தியது.)

பெரியாரியலை ஏற்றுக் கொண்டுள்ள இயக்கங்களில் மேற்சொன்ன கொடுமைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் முயற்சி ஏதும் இல்லை. இவற்றை பற்றியெல்லாம் கவலைப்படாமல், இயக்கத் தலைவர் தன்னை மதிக்கிறாரா? இல்லையா?, மேடையில் தனக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டதா, இல்லையா?, சுவரொட்டிகளில் தனது பெயர் பெரிதாக வந்ததா, இல்லையா? போன்றவை பற்றி கவலைப்பட்டுக் கொண்டு, பொதுக் கூட்டங்களிலும், கமிட்டிக் கூட்டங்களிலும், எவ்வளவு பெரிய இழப்பையும் சந்திக்க தயாராக இருப்பது போல் 'வாய்ச் சவடால்' பேசி தோழர் பெரியாரையும், இயக்கத் தலைவரையும் வார்த்தைகளால் பாராட்டுவதில் போட்டி போடும் போக்கு வளர்ந்து வருகிறது.

தனி நபரை வழிபாட்டு பொருளாக்கி, தத்துவத்தை அழிப்பது பார்ப்பனீயத்தின் பணி. இதற்கு உதாரணம் புத்தராகும். இன்று அந்த ஆபத்து தோழர் பெரியாருக்கும் ஏற்பட்டுள்ளது. ஏனெனில் பெரியாரியலின் துரோகிகளும் - இன எதிரிகளும் 'பெரியார் புகழ்' பாடி, தோழர் பெரியார் இருந்த போது அவரை எதிர்த்த பெரும்பாலான பார்ப்பன பத்திரிகைகள் அவர் இறந்த பிறகு தோழர் பெரியார் படத்தை வெளியிட்டு, பாராட்டுச் சடங்கை

செய்து தம் மக்கள் விரோத உள்ளடக்கத்தை மறைத்து வருகின்றனர். இந்த ஆபத்தான போக்கை வெளிப்படுத்த வேண்டியது அவசரமும், அவசியமுமான காரியம் ஆகிவிட்டது.

'தனித் தமிழ்நாடு' என்ற முழக்கத்தை கவர்ச்சிகரமாக முன் வைத்து பார்ப்பனரைத் தமிழராக ஏற்றுக்கொண்டு பெரியாரியலை ஒழிக்கும் முயற்சிகள் இங்கு உண்டு, திராவிட மாயையில் சிக்கியதால் தமிழினம் வீழ்ந்தது எனவும்-திராவிட மாயையிலிருந்து விடுபட்டால் தான் தமிழினம் மீளும் என்றும் பெரியாரியல் விரோத கருத்துக்களைப் பரப்ப 'தந்தை பெரியார்' என்று அவரை பீடத்தில் வைத்து போற்றும் தொண்டர்களைக் கொண்டே பெரியாரியலை ஒழிக்க பார்ப்பனீயம் முயற்சிக்கும் காலக்கட்டம் அது.

தம்மை முன்னிலைப் படுத்திக் கொள்ளாமல், விமர்சனம், சுய விமர்சனம் மூலம் தம்மை நெறிப்படுத்தி கொண்டு, பெரியாரியலை ஏற்றுக்கொண்டு செயல்படும் ஆர்வமுடைய தோழர்கள் மேற்சொன்ன கொடுமைகளை எதிர்த்து, நிகழ்காலத்தில் பெரியாரியலுக்கு ஏற்பட்டுள்ள கொள்கை ரீதியிலான ஆபத்துக்களை வெற்றி கொள்ள உருவானதே 'எந்த இயக்கத்தின் கட்டுப்பாட்டிலும் இல்லாத சுதந்திரமான ஆய்வு மையமாகிய பெரியார் மையம்' ஆகும்.

தோழர் பெரியாரை வழிபாட்டுப் பொருளாக்கி பொதுவாக பொது வாழ்வில் தலைமையை 'காக்காய் பிடிக்கும்' வழிபாட்டு போக்கை எதிர்க்க வேண்டியுள்ளது. மேலும் தாம் ஏற்றுக்கொண்ட தத்துவத்தினை உருவாக்கிய தலைவரிடமிருந்து தாம் அந்நியமாகாமல், இலக்கு நோக்கி செயல்படவும் வேண்டியுள்ளது. இவற்றிற்கு தோழர் பெரியாரின் பின்வரும் அறிவுரை ஏற்றதாக உள்ளது.

''இயக்கத் தோழர்களும், இயக்க அபிமானத் தோழர்களும், இனி ஒருவருக்கொருவர் அழைத்து கொள்வதிலும், பெயருக்கு முன்னால் பின்னால் மரியாதை வார்த்தை சேர்ப்பது என்பதிலும் ஒரே மாதிரியாக 'தோழர்' என்கிற பதத்தையே உபயோகிக்க வேண்டும் என்றும், மகா-ள-ள-ஸ்ரீ, திரு, திருவாளர், தலைவர், பெரியார், திருமதி, ஸ்ரீமத், என்பன போன்ற வார்த்தைகளைப் பேசவோ, எழுதவோ கூடாது என்றும் வணக்கமாய் வேண்டிக் கொள்கிறேன். 'குடி அரசிலும்' அடுத்த வாரம் முதல் அந்தப்படியே செய்ய வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.'' குடி அரசு - 13-11-1932

இந்த அடிப்படையில் தோழர் பெரியார் என்ற வார்த்தை உபயோகம் பெரியார் மையத்தால் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

'தோழர்' என்ற வார்த்தை மரியாதைக் குறைவான ஒன்றல்ல! வயதில் மூத்தவரை 'தோழர்' என்றழைக்கக் கூடாது என்பதும் சரியல்ல! ஏனெனில் வயது வித்தியாச நோக்கத்தை குறிப்பிடும் சொல்லும் அல்ல! இதற்கு நல்ல

உதாரணமாக, தோழர் பெரியார் தமக்கு முந்தைய காலத்தவர்களான காரல் மார்க்ஸ், ஏங்கல்ஸ், லெனின் போன்றோரையும், தம் சம காலத்தவர்களான தோழர்கள் காந்தி, நேரு, சிங்காரவேலர், ஜின்னா, ஏ. டி. பன்னீர் செல்வம், நாகம்மையார், எஸ். ராமச்சந்திரன், சி. டி. நாயகம் போன்றோரையும், தம்மை விட வயதில் இளையவர்களான தோழர்கள் அம்பேத்கார், அண்ணாத்துரை, வீரமணி, தங்கராசு, ஆனைமுத்து போன்றோரையும் 'தோழர்' என்றே அழைத்திருக்கிறார். மேலும் பெரியார் வெளிநாடு பயணம் மேற்கொண்டிருந்த போது 24—4—32 குடிஅரசில் பெரியாரை "தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள்" என்று தோழர் நாகம்மையார் அவர்கள் குறிப்பிட்டு எழுதியுள்ளார்.

உண்மையில் தோழர் பெரியார் சோவியத் மற்றும் இங்கிலாந்து சென்று திரும்பிய பின்தான் 13-11-1932ல் குடி அரசில் 'தோழர்' என்றே விளியுங்கள் என்று எழுதியிருக்கிறார். இந்த அறிவிப்புக்கு முன்பாகவே தோழர் நாகம்மையார் தோழர் என்ற வார்த்தையை உபயோகித்துள்ளார் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

தோழர் பெரியார் அவர்களும், தன் பேச்சிலும், எழுத்துக்களிலும், தலைவர் அவர்களே!, தோழர்களே! என்றுதான் இறுதிவரை உபயோகித்து வந்துள்ளார்கள்.

பெரியார் மையம் பயன்படுத்தும் 'தோழர் பெரியார்' என்ற வார்த்தை உபயோகத்தை சிலர் 'பெரியார்' என்று கூட அழைக்கக் கூடாது என்றுதமது 13-11-1932 அறிக்கையில் வெளியிட்டுள்ளார். எனவே அந்த 'பெரியார்' என்ற சொல்லை மட்டும்எப்படி பயன்படுத்தலாம் என்றும்கூட கேட்டுள்ளார்கள். 1932-ல் 'தோழர்' பற்றிய அறிக்கை வெளிவந்துள்ளது. 1938-ல் பெண்கள் மாநாட்டில் 'பெரியார்' பட்டம் தோழர் பெரியாருக்கு வழங்கப் பட்டது. அதன்பின் மக்களிடம் 'பெரியார்' என்ற பெயரே நிலை பெற்று விட்டது.

பெற்றோர் இட்ட பெயரை விட மக்களுக்கு அறிமுகமான பெயராலேயே 'பெரும் தலைவர்கள்' அழைக்கப்படுவார்கள் என்பதற்கு தோழர்கள் லெனின்-அம்பேத்கார் போன்றோர் சான்றுகளாகும். அந்த வகையில், பெண் உரிமைக்கு பாடுபட்ட தோழர் பெரியாரை பாராட்ட பெண்கள் 'பெரியார்' என்று அழைத்து, அது மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பெயராகவும் நிலைத்துவிட்டது. அந்த அடிப்படையில் தோழர். பெரியார் என்று அழைப்பது சரியான அணுகுமுறையாகும்.

'தந்தை பெரியார்' என்ற சொல் நிலைநிறுத்தப்பட்ட ஒன்றாக இருந்தாலும், அது தோழர் பெரியாரை வழிபாட்டு பொருளாக்கி 'பீடத்தில்' வைத்துப் பார்க்கும் அலங்காரச் சொல்லாக இன்று மாறி வருவதால் பெரியாரியலுக்கு நிகழ்காலத்தில் ஏற்பட்டுள்ள ஆபத்துக்களை கணக்கில்கொண்டு 'தோழர் பெரியார்' என்று அழைப்பது என பெரியார் மையம் முடிவெடுத்து, பின்பற்றி வருகின்றது.

'தோழர் பெரியார்' என்ற வார்த்தை உபயோகம் காரணமாக, மனம் புண்படும் பெரியார் தொண்டர்கள், நாம் ஆரம்பத்தில் குறிப்பிட்டுள்ள 'பெரியாரியலுக்கு உள்ள ஆபத்துக்களை' பற்றி மனம் புண்பட்டுள்ளார்களா என்பது தெரியவில்லை. ஆபத்துக்களை நீக்க அவர்கள் செயல்பட்டார்களா அல்லது இதுவரை அவர்கள் செயல்படாவிட்டால் இனியாவது செயல்பட வேண்டும் என்பதுவே பெரியார் மையத்தின் வேண்டுகோளாகும்.

தன் சோவியத் பயணத்தின் போது, சோவியத் நாட்டில் பார்த்த இடங்களில் எல்லாம் லெனின் சிலையும், அவரைப் போற்றுகின்ற வாசகங்களும் இருந்ததைக் கண்ட தோழர் பெரியார் அங்கேயே, அது தனி மனித வழிபாட்டு போக்கில் அமைந்திருக்கிறது என்று கண்டித்துள்ளார் என்பதை உணரும் பெரியார் தொண்டர்கள், 'தோழர் பெரியார்' என்ற பெரியார் மையத்தின் வார்த்தை உபயோகத்தை சொள்கை ரீதியாக தவறு என்று இனியும் கூறமாட்டார்கள் என்று பெரியார் மையம் எதிர்பார்க்கிறது.

---

## தமிழர் - திராவிடர் - விளக்கம்:-

திராவிடர் என்பதற்குப் பதிலாக 'தமிழர்கள்' என்று ஏன் வழங்கக் கூடாது என்று சிலர் கேட்கிறார்கள். தமிழர்கள் என்று சொன்னாலே- பார்ப்பனர்கள் தாங்களும் தமிழர்கள்தாம் என்று கூறி அதில் சேர்ந்து கொள் கிறார்கள். 'நாங்களும் தமிழ்நாட்டில் பிறக்கிறோம்; வளர்கிறோம்; தமிழே பேசுகிறாம்; தமிழ்நாட்டிலேயே இருக்கிறோம். அப்படி இருக்கும் போது எப்படி எங்களைத் தமிழர்கள் அல்லர் என்று நீங்கள் கூற முடியும்?' என்று கேட்கிறார்கள். ஒரு காலத்தில் தமிழர் என்பது தமிழ் (திராவிட) பண்பு உள்ள மக்களுக்கு உரிய பெயராக இருந்திருக்க கூடுமானாலும் - இன்று அது மொழிப் பெயராக மாறி விட்டிருப்பதால், அம்மொழி பேசும் 'ஆரியப் பண்பு உடைய' மக்கள் யாவரும் தாமும் தமிழர் என்று உரிமைப் பாராட்ட முன் வந்து விடுகிறார்கள். **அதோடு ஆரியப் பண்பை நம் மீது சுமத்த அந்தச் சேர்க்கையைப் பயன்படுத்தி விடுகிறார்கள்.**

அவர்களும் நாமும் ஒரு கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்பதால்தான் நாம் சூத்திரர்களாகிறோம். ஆகவே, நம் கூட்டத்திலிருந்து அவர்களை விலக்கிப் பேசித்தான், நம்மைத் திராவிடர்கள் என்று அழைத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. **நம்மில் தமிழன் என்று சொல்லும் ஏமாளிகளைத்தான் பார்ப்பனர்களால் ஏமாற்ற முடியுமேயொழிய - 'திராவிடர்' என்றால் அவர்களால் ஏமாற்ற முடியாது.**

—தோழர் பெரியார் - விடுதலை 5-10-1948

---

பாரதி பிரிண்டர்ஸ், தஞ்சை-6. [தனிச்சுற்றுக்கு மட்டும்]


உலகம்
1. அமெரிக்கா.
2. மெக்சிகோ
3 கவுதமாலா
4. கியூபா
5. நிகரகுவா
6. பொலிவியா
7 சிலி
8. அர்ஜென்டினா
9. பிரேசில்
10. தெ. ஆப்ரிக்கா
11. மே. சகாரா
12. மொராக்கோ.
13. ஈரான்
14 ஈராக்
15. இஸ்ரேல்
16. இங்கிலாந்து
17. பிரான்ஸ்
18. ஸ்பெயின்
19. இத்தாலி.
20. அல்பேனியா
21. ருமேனியா.
22 போலந்து
24. மே. ஜெர்மன்
25. அங்கேரி.
26 சோவியத் நாடு
27. ஆப்கானிஸ்தான்
28. பாகிஸ்தான்
30. இலங்கை.
31. பங்களாதேஷ்
32. ஜப்பான்
33. சீனா.
34. வியட்நாம்
35. கம்பூசியா.